# ஆண்டறிக்கை 2015

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

# உள்ளடக்கம்

**பக்கம்**


1. அறிமுகம் …………………………………………………………………………… 02
2. தொலைநோக்கும் பணித்திட்டமும் ……………………………………………………… 03
3. சபையின் தத்துவங்கள் ………………………………………………………………… 04
4. சபையின் கூட்டிணைத் தகவல் ………………………………………………………… 05
5. நிறுவனக் கட்டமைப்பு ………………………………………………………………… 08
6. போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் இன்றைய நிலைமை ………………… 09
7. சபையின் கூட்டிணை ஆளுகை ………………………………………………………… 15
8. செயற்பாடு குறித்த மீளாய்வு ………………………………………………………… 16
9. வருமானக் கூற்று……………………………………………………………………… 85
10. ஐந்தொகை ………………………………………………………………………… 86
11. கணக்கீட்டுக் கொள்கைகள் …………………………………………………………… 87
12. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ……………………………………… 92
13. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள் ……………………………………………………………………… 103


**பின்னிணைப்புகள்:**


i. சபையின் நிறைவேற்றுப் பதவியினர் ………………………………………… 108
ii. சட்ட வினைப்படுத்துகை உப குழு உறுப்பினர்கள் ……………………………… 112
iii. சட்டவாக்க உபகுழு உறுப்பினர்கள் ………………………………………… 114
iv. கணக்கீட்டுக் குறிப்புகள் ………………………………………………… 116

# 1. அறிமுகம்



தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது (NDDCB) 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். 1984 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதியிலிருந்து இச்சபை இயங்கி வருகிறது. இச்சபை, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் செயற்படுகிறது.

அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை மீளாய்வுசெய்தல், பாதகமான போதையூட்டும் ஔடதங்களின் பாவனைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஒத்தாசை வழங்கி போதையூட்டும் ஔடத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சிகிச்சையளிப்பு முறைகளையும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளையும் மேம்படுத்துதல், கள ஆராய்ச்சிகளையும் கற்கை ஆய்வுகளையும் மேற்கொள்ளல், தரவுத்தளங்களைப் பேணுதல் முதலான கருமங்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொண்டு வருகிறது. அத்துடன், அரசாங்கத்தினால் ஏற்பிசைவளிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் (UN) மற்றும் சார்க் அமைப்பின் (SAARC) கீழ் அமுலிலுள்ள சர்வதேச சமவாயங்களின் கடப்பாட்டை நிறைவேற்றுதல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வை செய்தல், அவற்றுக்கு உதவுதல் ஆகிய கருமங்களையும் சபை சிரமேற்கொண்டு வருகிறது.

குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை வழங்கி வருகிறது. அரசாங்கத்துடனும் சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடனும் (INCB) இச்சபை ஒத்துழைத்துச் செயலாற்றுவதுடன், போதையை உண்டுபண்ணும் ஔடதங்கள் பற்றிய ஆணைக்குழுவையும் (CND) பிரதிநிதித்துவம் செய்கிறது.

அரசாங்க விதித்துரைப்புகளின்படி அதன் செயற்பாடுகள் குறித்த ஓர் ஆண்டறிக்கையை சபை தயாரிக்க வேண்டும்.

# 2. தொலைநோக்கும் பணித்திட்டமும்

## தொலைநோக்கு

போதையூட்டும் ஔடதங்கள் தொடர்பிலான பாதக தாக்கங்களை முகாமைசெய்வதில் தெற்காசியாவின் முன்னோடியாக இலங்கையை நிலைபெறச்செய்தல். 2020 ஆம் ஆண்டாகும்போது இலங்கையை போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகமற்ற ஒரு நாடாக மிளிரச்செய்தல்.

## பணித்திட்டம்

போதையூட்டும் ஔடதங்களினால் ஏற்படக்கூடிய தொல்லைகளையும் அவைசார்ந்த பிரச்சினைகள் அனைத்தையும் இல்லாதொழிப்பதற்காக அனைத்து சமூகப் படிநிலைகளுடனும் பொது மக்களுடனும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் இணைந்து முனைப்புடன் செயலாற்றக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல். போதையூட்டும் ஔடதங்களின் பாவனையையும் வியாபாரத்தையும் ஊக்கமிழக்கச்செய்யும் ஒரு சமூகச் சூழலை உருவாக்குதல். போதையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக தேசிய அரசியல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புதல். தேசிய கொள்கையை அமுல்படுத்துவதில் தலைமைத்துவம் வழங்கும் தேவை ஏற்படும்போது தேசிய கொள்கையை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும் அதனை விளைபயன்மிக்க விதத்தில் செயற்படுத்துவதற்கும் தேவையான ஒரு தகவல் மற்றும் தரவுத்தளத்தை உருவாக்குதல். சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல்.

# 3. சபையின் தத்துவங்கள்

**1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் வருமாறு:**

அ. அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் தொடர்பிலான ஒரு தேசிய கொள்கையை வகுத்தமைத்தலும் அதனை மீளாய்வு செய்தலும் அத்தகைய கொள்கைகள் தொடர்பில் அமைச்சருக்கு மதியுரை வழங்கலும் பரிந்துரைகளைச் செய்தலும்.

ஆ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக தனிநபர்கள், அமைப்புகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களிடமிருந்து தேவைப்படக்கூடிய தகவல்களையும் விபரங்களையும் கோருதல்.

இ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்படும் நன்கொடைகளையும் மானியங்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

ஈ. அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல்.

உ. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதலும், சிறுவர்களுக்காகவும் வயது வந்தவர்களுக்காகவும் அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் கல்விசார் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்.

ஊ. அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், காரணிகள் மற்றும் அதனோடிணைந்த சட்ட, மருத்துவ, சமூக, கலாசார, பொருளாதார சிக்கல்கள் தொடர்பிலான ஆராய்ச்சிக் கற்கைகளைப் பொறுப்பேற்று நடாத்துதலும் கண்காணித்தலும்.

எ. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச முகவராண்மைகளுடன் தொடர்புகளைப் பேணுதல்.

ஏ. அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கையகப்படுத்துதல், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடல் அல்லது பெறல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்புச்செய்தல்.

# 4. சபையின் கூட்டிணைத் தகவல்

**நிறுவனத்தின் பெயர்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

**சட்ட வடிவம்**

1986 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபை.

**சபையின் அமைப்பு**

இன்றைய சபையின் அமைப்பு பின்வருமாறு:

அ. அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவரும் ஏனைய மூன்று உறுப்பினர்களும்.

ஆ. கல்வி அமைச்சரின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

இ. பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஈ. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

உ. சுங்கப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஊ. அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

எ. ஆயுர்வேத ஆணையாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் அத்துடன்

ஏ. திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்.

## சபை உறுப்பினர்கள் - 2015

1 வைத்தியர் நிலங்க சமரசிங்க
தவிசாளர்
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

2 வண. குப்பியாவத்தே போதானந்த தேரர்
பணிப்பாளர் - மித்துரு மித்துரோ செவண
பெல்மதுல்ல

3 அருட்திரு எலெக்சியஸ் பெனடிக்
87/1, கலஹிட்டியாவ வீதி
சியம்பலாபே

4 சட்டத்தரணி சாக்ய நாணாயக்கார
பொதுச் செயலாளர்
ஹெல்தி லங்கா
58/19, பாடசாலை வீதி
நாவல

5 திரு. ஆர்.எம்.எல்.டப்ளியு. ரத்னாயக்க
பொது ஒழுங்கு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு
13 வது மாடி, கட்டம் 2
செத்சிறிபாய
பத்தரமுல்ல

6 திருமதி சகுந்தலா தென்னகோன்
அரசாங்கப் பகுப்பாய்வாளர்
அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
இல.31, இசுரு மாவத்தை
பெலவத்த
பத்தரமுல்ல

7 திரு. நந்தன முனசிங்க
பிரதிப் பொலிஸ் மா அதிபர் (குற்றங்கள்)
பொலிஸ் தலைமையகம்
கொழும்பு 01

8 திருமதி லக்ஷ்மி சோமதுங்க
பிரதிப் பணிப்பாளர் (ஆய்வுகூட சேவைகள்)
சுகாதார அமைச்சு
கொழும்பு 01

9 திரு. பி.எஸ்.கே.ஆர்.வீரகோன்
ஆயுர்வேத ஆணையாளர்
ஆயுர்வேத திணைக்களம்
பழைய கொட்டாவ வீதி
நாவின்ன
மகரகம

10 திரு.எச்.யூ.பிரேமதிலக
மேலதிக செயலாளர்
கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்ல

11 திரு. எம்.பாஸ்கரன்
பணிப்பாளர் - சமூகப் பாதுகாப்பு
இலங்கை சுங்கம்
இல.40, பிரதான வீதி
கொழும்பு 11

12 திரு. ஏ.கே.ஏ.வை.தரங்க
உதவிப் பணிப்பாளர்
சட்ட அலுவல்கள் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு - 01

**பணியாளர்தொகுதி:**

சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 238 பணியாளர்தொகுதி உறுப்பினர்கள் அடங்குகின்றனர்.

**முகவரி/தகவல்களுக்கு:**

இல.383, கோட்டே வீதி,
ராஜகிரிய.

தொலைபேசி: 011 2868794 - 6
தொலைநகல்: 011 2868792 / 2869805
மின்னஞ்சல்: mail@nddcd.gov.lk
இணையத்தளம்: www.nddcb.gov.lk
முகநூல்: facebooknddcd.gov.lk


**கணக்காய்வு:**

கணக்காய்வாளர் தலைமையதிபதி,
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்.

**உத்தியோகபூர்வ வங்கி:**

இலங்கை வங்கி

## 5. நிறுவனக் கட்டமைப்பு



# 6. இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் இன்றைய நிலைமை

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 82,482 ஆகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 23% சதவீத அதிகரிப்பாகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, ஹெரொயின் சார்ந்த குற்றச்செயல்களுக்கு 32% சதவீதமும் கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்கு 63% சதவீதமுமாகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச் செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் பெரும்பகுதி மேல் மாகாணத்திலிருந்தும் (60%) தென் மாகாணத்திலிருந்து 10% சதவீதமும் மத்திய மாகாணத்திலிருந்து 8% சதவீதமும் அறிக்கையிடப்பட்டது. கைதுசெய்யப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கையில், கொழும்பு மாவட்டத்தில் 43% சதவீதமும் கம்பஹா மாவட்டத்தில் 14% சதவீதமும் குருநாகல் மாவட்டத்தில் 4% சதவீதமும் ஆகும். 2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் போக்கு, சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 397 பேர் ஆவர்.

**கஞ்சா**

இலங்கையில் சட்டரீதியற்ற விதத்திலேயே கஞ்சா பயிரிடப்படுகிறது. கூடுதலாக உலர் வலயத்தில் அது பயிரிடப்படுவதுடன் கிழக்கு, ஊவா ஆகிய மாகாணங்களிலும் தென் மாகாணத்தின் எல்லையிலும் பயிரிடப்படுகிறது. கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் மதிப்பிடப்பட்ட காணியின் பரப்பளவு சுமார் 500 ஹெக்டேயராகும். ஏனைய பயிர்களுடன் ஒப்புநோக்குமிடத்து குறைந்தளவான உழைப்புடனும் குறைந்த செலவுடனும் பயிரிடக்கூடிய கஞ்சா, இயற்கை அனர்த்தங்களுக்கும் குறைந்தளவிலேயே இரையாகிறது. கஞ்சா பயிரிடுவதற்கு நவீன தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகிறது. இன்று போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் இளைஞர்களிடையே கஞ்சாப் பூ பிரபல்யம் அடைந்துள்ளது. கஞ்சா சட்டரீதியற்ற அபாயகரமான ஓர் ஔடதமாகும்.

2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுசெய்யப்பட்டவர்களில் கணிசமானவர்கள், (52,076) கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்காகவே கைதுசெய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் கூடுதலான கஞ்சா சார்ந்த திடீர் சுற்றிவளைப்புகள் கொழும்பு மாவட்டத்திலிருந்து (36%) அறிக்கையிடப்பட்டுள்ளது. கஞ்சா சார்ந்த சுற்றிவளைப்புகளில் கம்பஹா மாவட்டத்திலிருந்து 11% உம் மாத்தறை மாவட்டத்திலிருந்து 6% உம் அறிக்கையிடப்பட்டுள்ளது. கஞ்சா சார்ந்த திடீர் சுற்றிவளைப்புகளில் கணிசமானவை இலங்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மதுவரித் திணைக்களம் மூலமும் விசேட அதிரடிப்படை மூலமும் கணிசமான திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கஞ்சா கிராமப்புறங்களிலிருந்து கொழும்பிற்கும் ஏனைய பிரதேச நகரங்களுக்கும் விநியோகிக்கப்படுவதன் ஊடாக மிக அதிகளவில் இலாபமீட்டப்படுகிறது. சுற்றிவளைப்புகளிலிருந்து தப்புவதற்காக கஞ்சா போக்குவரத்திற்கு பொதுப் போக்குவரத்து சேவைகளும் முச்சக்கர வண்டிகளும் தனியார் வாகனங்களும் பயன்படுத்தப்படுகிறது. அண்மைக்காலத்தில் போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தி கைது செய்யப்பட்டவர்களில் கஞ்சாவுடன் சம்பந்தப்பட்ட கைதுகள் அதிகரித்துள்ளதை தெளிவாக அவதானிக்க முடிகிறது. 2015 ஆம் ஆண்டில் நாடுமுழுதும் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளின்போது கைதுசெய்யப்பட்ட கஞ்சாவின் அளவு 6,570 கிலோ கிராம்களாகும். மேல் மாகாணத்திலிருந்து கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்டவர்கள் 50% உம் தென் மாகாணத்திலிருந்து 12% உம் மத்திய மாகாணத்திலிருந்து 8% உம் வடமேல் மாகாணத்திலிருந்து 7% உம் ஆகும். 2015 ஆம் ஆண்டில் கஞ்சா சார்ந்த கைதுகளின் போக்கு, சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 251 பேராவர். இன்று கஞ்சா பாவனை இலங்கையர் சமூகத்தில் அழிவுகர பிரச்சினையொன்றாக மாறியுள்ளது. இப்போக்குடன் நாட்டினுள் கஞ்சா பாவனையாளர்களின் அதிகரிப்பொன்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மாறியுள்ளது. இப்போக்குடன் நாட்டினுள் கஞ்சா பாவனையாளர்களின் அதிகரிப்பொன்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கஞ்சாவில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மையை அகற்றிவிட்டு ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்களும் ஆயுர்வேத ஔடத தயாரிப்புக் கம்பனிகளும் இதன் பிரதான சட்டரீதியான வாடிக்கையாளர்களாவர். 2015 ஆம் ஆண்டில் ஆயுர்வேத ஔடத தயாரிப்புகளுக்கு 220.425 கிலோ கிராம் கஞ்சா பயன்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் மட்டும் மதன மோதகம், காமேஷ்வரீ மோதகம் ஆகியவற்றை தயாரிப்பதற்கு 129.350 கிலோ கிராம் கஞ்ஜாவை உபயோகித்துள்ளது.

**ஹெரொயின்**

1980 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையில் ஹெரொயின் பாவனையை பரவலாக காணக் கிடைக்கவில்லை. வெளிநாடுசெல்லும் இலங்கையா்களும் சொற்ப எண்ணிக்கையான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அதனைப் பயன்படுத்தியுள்ளனா். 80களைத் தொடர்ந்து ஹெரொயின் ஏனைய பகுதிகளில் பரம்பலடையலாயிற்று. அதனைத்தொடர்ந்து ஆபத்தான ஒரு சூழ்நிலை உருவானது. ஹெரொயின் பாவிப்பவா்கள் கைதுசெய்யப்பட்டனா். முக்கியமாக கொழும்பு நகரிலும் இன்னும் சில பகுதிகளில் நகா்ப்புறங்களிலும் அது பயன்படுத்தப்பட்டபோதும், ஏனைய நகா்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் பரம்பலடைய ஆரம்பித்தவுடன் அது மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்தது. அது பிரதானமாக நாட்டின் சுகாதார மற்றும் சமூகப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது.

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவா்களில் கைதான பெரும்பாலானோரும் தமது பாவனைக்கு மிகச் சிறிதளவு போதையூட்டும் ஔடதங்களை தம்வசம் வைத்திருந்தவா்களாவா். இலங்கையில் மதிப்பிடப்பட்ட ஹெரொயின் பாவனையாளா்களுக்கு 45,000 பேருக்கு வருடாந்தம் தெருமட்ட ஹெரொயின் 985 கிலோ கிராம்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அது நாளொன்றுக்கு 2.7 கிலோ கிராம்களாகும். மீன்பிடிப் படகுகள் மூலம் அல்லது வெளிநாட்டவா்கள் எடுத்துவருவதன் மூலம் நாட்டிற்குள் ஹெரொயின் பிரதானமாக போக்குவரவு செய்யப்படுகிறது. பெரும்பாலும், இந்தியா அல்லது பாகிஸ்தானிலிருந்தே இலங்கைக்கு ஹெரொயின் கொண்டுவரப்படுகிறது. பிரதானமாக போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலுக்காக தென்னிந்தியா ஊடாக மேற்குக் கரையோரப் பகுதிக்கு மீன்பிடிப் படகுகளின் உதவியுடனும் வேறு வழிகளிலும் ஹெரொயின் போக்குவரவு செய்யப்படுகிறது. 2015 ஆம் ஆண்டில் 47 கிலோ கிராம் ஹெரொயின் சட்டத்தின் பிடியில் சிக்கியது. 26,539 பேர் கைதாகினா். ஹெரொயின் சம்பந்தப்பட்ட கைதுகள் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து, 2015 ஆம் ஆண்டில் 14% ஆல் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் ஹெரொயின் சம்பந்தப்பட்ட கைதுகளின் போக்கு சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 128 பேர் ஆகும்.

**அபின்**

இலங்கையில் அபின் துஷ்பிரயோகத்தை இன்று அவதானிக்க முடியவில்லை. அபின், பிரதானமாக ஆயுர்வேத மருந்துப்பொருள்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. சுகாதார அமைச்சின் மூலம் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அரசாங்க வைத்தியசாலைகள் ஊடாக அவசியமான அளவு அபின் வழங்கப்படுகிறது. 2015 ஆம் ஆண்டில் அபின் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்காக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனா்.

**விலையும் தூய்மையும் (டை எசிட்டைல் மோர்.்.பீன் சதவீதம்)**

2015 ஆம் ஆண்டில் ஹெரொயின் போதைத்தூள் தெரு விலையின் சராசரிப் பெறுமானம், 6.5 மில்லியன் ரூபா (41,379 ஐ.அ.டொலர்) ஆகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தெரு விலை 32% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதாவது, 2014 ஆம் ஆண்டன் ஒப்பிடும்போது, ஹெரொயின் தெரு விலை 9.5 மில்லியன் ரூபாவிலிருந்து 6.5 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது. ஒரு கிலோ கிராம் கஞ்சாவின் தெரு விலையின் சராசரிப் பெறுமானம் 20,000 ரூபா (138 ஐ.அ.டொலர்) ஆகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2015 ஆம் ஆண்டில் உள்ளூர் கொள்வனவாளர்களுக்கான கஞ்சா விலையில் மாற்றம்

### ஹெரொயின் போதைத்தூளின் தூய்மைப் பெறுமானத்தின் பெறுமானம் சராசரி பெறுமானம் சதவீதமாக

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் தெரு ஹெரொயினின் டை எசிட்டைல் மோர்பீன் அளவின் சராசரி பெறுமானம் 15.55% ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, அது 39% சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. பொதுவாக டைசி∴பேம், எசிடமிநோ∴பீன், கெ∴பேன் என்பன ஹெரொயினின் கலப்பட பதார்த்தங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தெரு மட்டத்தில் விற்பனையாகும் போதையூட்டும் ஔடத மாதிரிகள் தேசிய போதையூட்டும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், அத்தகைய மாதிரிகளின் பகுப்பாய்வும் அங்கு மேற்கொள்ளப்படுகிறது. கடந்த 05 வருடங்களில் ஹெரொயின் மாதிரிகளின் தூய்மை (கலப்படமின்மை) பெறுமானத்தின் சராசரிப் பெறுமானம் படிப்படியாக குறைவடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் ஹெரொயினின் தூய்மைப் பெறுமானத்தின் சராசரிப் பெறுமானம் 30% சதவீதமாக இருந்தது. 2015 ஆம் ஆண்டில் அது 15.5% சதவீதமானது.

### போதையூட்டும் ஔடத பாவனை முறை

இலங்கையில் ஹெரொயின் பாவனையாளர்கள் மத்தியில் புகைக்குழாய் மூலம் உறிஞ்சும் முறை அன்றேல் ‘சைனீஸ் முறை’ (Chases the dragon) போதையூட்டும் ஔடதத்தை உடலுக்குட் செலுத்தும் பிரதானமான முறையாகும். பெரும்பாலும் புகை உறிஞ்சல் மூலம் கஞ்சாவும் ஹஸீஸும் உடலை அடைகிறது. அபின் மெல்லுவதன்மூலம் பயன்படுத்தப்படுகிறது. போதையூட்டும் ஔடத பாவனையாளர்கள் மத்தியில் புகையிலைப் பாவனையும் சிறிதளவு அற்கஹோல் பாவனையும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

### உளமருட்சியை ஏற்படுத்தக்கூடிய (உளநிலைமாற்றி) வெறியப்பொருள்கள் - Psychotropic Substances

உளமருட்சியை உண்டுபண்ணும் விதத்திலான ஔடதங்களின் துஷ்பிரயோகம், இலங்கையில் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வைத்தியக் காரணங்களின் பேரில் அல்லது சந்தையில் ஹெரொயின் கிடைக்காதபோது விலகல் அறிகுறிகளைத் (withdrawal symptoms) தவிர்த்துக்கொள்வதற்காக இத்தகைய உளமருட்சியை உண்டுபண்ணும் விதத்திலான வெறியப்பொருள்களை எடுக்கின்றனர். எவ்வாறாயினும், வைத்தியரின் சிபார்சின்றி இவ்வாறான உளமருட்சியை ஏற்படுத்தக்கூடிய வெறியப்பொருள்களை விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ள போதும், சட்டரீதியற்ற முறைகளில் இவற்றை சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புள்ளது. 2015 ஆம் ஆண்டில் உளமருட்சியை ஏற்படுத்தக்கூடிய வெறியப்பொருள்களை பாவித்த ஒருசில சம்பவங்கள் பற்றி அறியக் கிடைத்துள்ளது. இதன் காரணமாக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சுகாதார அமைச்சுடனும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் இணைந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### முன்னோடி இரசாயனங்கள் (Precursor Chemicals)

இரசாயனச் செயன்முறையொன்றின்மூலம் செயற்கை போதையூட்டும் ஔடதங்களைத் தயாரிக்க வாய்ப்புள்ள இரசாயனங்கள் ‘முன்னோடி (பீடிகையான) இரசாயனங்கள்’ என்றழைக்கப்படும். முன்னோடி இரசாயனங்கள் பொதுவாக பல்வேறு பண்டங்களைத் தயாரித்தல், இரசாயனப் பதார்த்தங்களைத் தயாரித்தல் போன்ற சட்டரீதியான நோக்கங்களுக்காகவே தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், போதையூட்டும் ஔடத கடத்தல்காரர்கள் இவ்வாறான முன்னோடி இரசாயனங்களை நிலைமாற்றி, சட்டரீதியற்ற முறையில் போதையூட்டும் ஔடத சந்தைக்குள் விடுகின்றனர்.

முன்னோடி இரசாயனங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. மருந்துப்பொருள் உற்பத்தி அல்லது தொழிற்சாலைகளில் உற்பத்திச் செயற்பாடுகளுக்காகவே இவ்வாறான பதார்த்தங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மருந்துப்பொருள்கள் மற்றும் தொழிற்சாலை உற்பத்திகள் நோக்கிலேயே பெரும்பாலான முன்னோடி இரசாயனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. acetic anhydride, acetone, ephedrine, ergometrine, methyl ethyl ketone, piperonal, potassium permanganate, pseudoephedrine, sulphuric acid, tolune முதலியன கடந்த பல வருடங்களில் இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்பட்ட பிரதான முன்னோடி இரசாயனங்களிற் சிலவாகும். இத்தகைய முன்னோடி இரசாயனங்களைப் பயன்படுத்தி

முன்னோடி இரசாயனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. acetic anhydride, acetone, ephedrine, ergometrine, methyl ethyl ketone, piperonal, potassium permanganate, pseudoephedrine, sulphuric acid, tolunc முதலியன கடந்த பல வருடங்களில் இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்பட்ட பிரதான முன்னோடி இரசாயனங்களிற் சிலவாகும். இத்தகைய முன்னோடி இரசாயனங்களைப் பயன்படுத்தி செயற்கையாக ஹெரோயின், கொக்கைன் போன்றவற்றை தயாரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. meyhaquolone, LSD, MDA/MDMA, amphetamine, methamphetamine, phencyclidine மாத்திரை வகைகள் மிகவும் தாக்கமுள்ள, அடிமைப்படுத்திவிடக்கூடிய தன்மைவாய்ந்த செயற்கையாக தயாரிக்கக்கூடிய போதையூட்டும் ஔடதங்களாகும்.

எவ்வாறாயினும், இலங்கையில் முன்னோடி இரசாயனங்கள் எவையும் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதுடன், போதையூட்டும் ஔடதங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுமென்ற சந்தேகத்திற்கிடமான இரகசிய ஆய்வுகூடமொன்று 2008 ஆம் ஆண்டில் அவிசாவளை, கொஸ்கம பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டது.

தூக்கமயக்கத்தை வரவழைக்கக்கூடிய ஔடதங்களையும் (narcotic drugs) உளமருட்சியை ஏற்படுத்தக்கூடிய வெறியப்பொருள்களையும் (Psychotropic substances) சட்டமுரணான முறைகளில் கடத்துவதற்கு எதிரான சமவாயச் சட்டம், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தினால் செயல்வலுவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் 23 முன்னோடி இரசாயனங்களுக்கான சட்டவிரோத பாவனையும் போக்குவரவும் தடைசெய்யப்பட்டது. ஐக்கிய நாடுகளின் தூக்க மயக்கத்தை வரவழைக்கக்கூடிய ஔடதங்களையும் உளமருட்சியை ஏற்படுத்தக்கூடிய வெறியப்பொருள்களையும் சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு எதிரான 1988 ஆம் ஆண்டின் சமவாயச் சட்டத்தின்மூலம் இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்திற்கமைய செயலாற்றுவதற்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைக்கப்பட்ட முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.

### போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு

சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களினால் கைதுசெய்யப்படும் போதையூட்டும் ஔடத அளவுகள், சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு மட்டத்தை நிர்ணயிக்கும் ஒரு குறிகாட்டியாகும். போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவில் முக்கிய ஊடுகடப்பு இடமாக இலங்கை விளங்குவதுடன், பாகிஸ்தானிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கொண்டுவரப்படும் போதையூட்டும் ஔடதங்கள் மேற்கு நாடுகளுக்கு கொழும்பு அல்லது மாலே ஊடாக விநியோகிக்கப்படுகிறது.

கடந்த 05 வருடங்களைப் பரிசீலிக்குமிடத்து, தென்கிழக்காசிய ஹெரொயின் (பிரவுன் சுகர்) பிரதானமாக இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் சட்டமுரணான வழிகளில் இலங்கைக்கு கடத்தப்படுகிறது என்பது ஹெரொயின் சார்ந்த கைதுகள் மற்றும் பிடிபடல்களின் தரவுகளின்படி தெரியவருகின்ற விடயமாகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக கடந்த 05 வருட காலத்தில் 130 வெளிநாட்டவர்கள் இலங்கையில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 44 பேர் இந்தியர்கள் ஆவர். கடந்த 5 வருட காலத்தில் இலங்கையர்கள் 06 பேர் வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டனர். இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து 501.5 கிராம் ஹெரொயின் கைப்பற்றப்பட்டது.

### சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவை

போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கான வதிவிட மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை இலங்கையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிவருகின்றன. 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு (சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு) கட்டாய சிகிச்சையளிப்பு வசதிகள் இலங்கையில் செயல்வலுவுக்குக் கொண்டுவரப்பட்டது. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கான 04 வதிவிட சிகிச்சையளிப்பு நிலையங்கள் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்கீழ் இயங்கி வருகின்றன. வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்களும் அமுலில் உள்ளன. கொழும்பு (தலங்கம), கண்டி, காலி, ஊராபொல (நிட்டம்புவ) ஆகிய இடங்களில் இந்நிலையங்கள் அமைந்துள்ளன.

திட்டங்கள் போன்ற நாளாந்த வாழ்வுப் பாணியை அபிவிருத்திசெய்துகொள்வதற்கான பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சட்டத்தின்கீழ் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சிறைச்சாலைத் திணைக்களத்துடன் இணைந்து போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்கு சிறைவாசம் அனுபவிப்போர் சார்பாக 'சிறைச்சாலைகளில் சிகிச்சை சார் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள்' அமுல்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, தற்போது பெயர் குறிப்பிடப்பட்ட சிறைச்சாலைகளில் அதாவது வீரவில, களுத்துறை, பல்லேகெலே, அநுராதபுரம், பல்லன்சேன, வட்டரெக்க, கந்தெவத்த, மீதிரிகல, தல்தென இச்சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. சிறையிடப்பட்டுள்ள, போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் புனர்வாழ்வளிப்பிற்காக ஒதுக்கப்பட்ட தனிவேறான ஒரு விசேட சிறைச்சாலை தற்போது பொலனறுவை கந்தகாடு பகுதியில் இயங்கிவருகிறது.

2015 ஆம் வருடத்தில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட 1,482 சேவை பெறுநர்களுக்கு சிகிச்சையளிப்பு சேவை வழங்கப்பட்டுள்ளது. அச்சேவைபெறுநர்களில் 866 பேர் (58%) தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்தும், 317 பேர் (21%) சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் 212 பேர் (14%) அரச சார்பற்ற அமைப்புகள் மூலமும் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளதுடன், குறிப்பிட்ட சேவைபெறுநர்களில் பெரும்பாலானவர்கள் (57%) கொழும்பு மாவட்டத்திலிருந்து சென்றவர்களாவர். சிகிச்சை பெற்றுக்கொண்டவர்களில் 69% சதவீதமானவர்கள் 30 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாவர். கடந்த 05 வருடங்களைக் கருத்திற்கொள்ளும்போது முதல் 04 வருடங்களில் சிகிச்சைபெறுவதற்கு வருகைதந்த சேவைபெறுநர்களில் குறைவொன்று பதிவானபோதும், சிகிச்சை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 2014 ஆம் வருடத்தை விட 2015 ஆம் வருடத்தில் 10% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

**சிறையிடப்படல்**

2015 ஆம் வருடத்தில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக சிறையிடப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 24,086 ஆகும். அவர்களில் கஞ்சா சார்ந்த குற்றங்களுக்காக 3,648 (33%) பேரும் ஹெரொயின் சார்ந்த குற்றங்களுக்காக 7,519 (67%) பேரும் சிறையிடப்பட்டனர். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் வருடத்தில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக சிறையிடப்பட்டவர்களின் சதவீதம் 7% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

**எச்.ஐ.வி. /எயிட்ஸ்**

போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்வதன் ஊடாக எச்.ஐ.வி./ எயிட்ஸ் தொற்றும் ஆபத்துள்ளது. போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்கள் மத்தியில் உட்செலுத்தும் உபகரணங்களைப் பரிமாறிக்கொள்வதால் குருதி ஊடாக ஆளொருவருக்கு எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்றலாம். போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உட்செலுத்திக்கொண்டதன் ஊடாக எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகிய இலங்கையர் ஒருவரைப் பற்றியே இதுவரை அறியக் கிடைத்துள்ளது.

இலங்கையில் முதல் தடவையாக எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளான ஒருவர் பற்றி 1987 ஆம் வருடத்தில் அறியக் கிடைத்தது. உத்தியோகபூர்வ அறிக்கைகளின்படி 2015 ஆம் வருடமளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகிய 2,389 பேர் பற்றி அறியக்கிடைப்பதுடன், 1,452 ஆண்களும் 857 பெண்களும் இதில் அடங்குவர். கடந்த வருட அறிக்கைகளின்படி நோக்கும்போது 2015 ஆம் வருடத்தில் அறிக்கையிடப்பட்டவாறு பெண்களின் எண்ணிக்கை 10% சதவீதத்தாலும் ஆண்களின் எண்ணிக்கை 10% சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. 2015 ஆம் வருடமளவில் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு ஆளாகிய 605 பேர் காணப்பட்டனர். அவர்களில் 414 பேர் ஆண்களும் 188 பேர் பெண்களும் ஆவர். 2015 ஆம் வருடமளவில் எயிட்ஸ் நோய் தொற்றியதன் காரணமாக மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 367 ஆக இருந்ததுடன் 2015 ஆம் வருடத்தில் மாத்திரம் 31 பேர் மரணமடைந்திருந்தனர்.

**சட்டவினைப்படுத்துகை**

இலங்கை பொலிஸ், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பிரிவு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம், இலங்கைச் சுங்கம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், முப்படைகள் போன்ற சட்டவினைப்படுத்துகைக்கான நிறுவனங்கள் 2015 ஆம் வருடத்தில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தன. போதையூட்டும் ஔடதங்கள் சட்டத்தை அமுல்படுத்தும் குழுவின் ஊடாக சட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை எடுப்பதுடன், புதிய சட்டங்களை இயற்றுவதிலும் கொள்கைகளைத் திட்டமிடுவதிலும் நாடுபூராவும் சட்டத்தை வினைப்படுத்துவதிலும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஈடுபட்டுள்ளது. இதற்குப் புறம்பாக, சிறைச்சாலைத் திணைக்களத்துடன் இணைந்து போதையூட்டும் ஔடத பாவனையாளர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

# 7. சபையின் கூட்டிணை ஆளுகை

வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாட்சிக்கான வழிகாட்டுநெறிக் கோவையின்கீழ் சபை முகாமை செய்யப்படும். இதற்குப் புறம்பாக, சபையினால் தயாரிக்கப்படும் விசேட வழிகாட்டுநெறிக் கோவை சபையின் நடவடிக்கைகளுக்கான தாபன விதிக்கோவையை ஏற்புடைத்தாக்கிக்கொள்ளும்.

**சபை**

சபையின் தவிசாளர் உட்பட நியமிக்கப்பட்ட 04 உறுப்பினர்களையும் பதவிவழியால் நியமிக்கப்பட்ட 06 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் பிரகாரம் மாதம் ஒருமுறை சபை கூடும்.

**உப குழுக்கள்**

நல்லாட்சிக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டுநெறிக் கோவையின்படி சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருக்கும்.

போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய சட்ட வினைப்படுத்துகை உப குழு இலங்கையில் போதையூட்டும் ஔடத உபத்திரவங்களை ஒழித்துக்கட்டுவதற்கும் போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலையும் துஷ்பிரயோகத்தையும் இயன்றளவு குறைப்பதற்கும் சட்டவினைப்படுத்துகைக்கும் பலப்படுத்துவதற்கும் அவசியமான முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டு மிகவும் வினைத்திறனான ஒரு குழுவாக செயற்படுகிறது.

சபையின் சட்டவாக்க உப குழு காலத்திற்குக் காலம் போதையூட்டும் ஔடத வழங்கல்களும் துஷ்பிரயோகமும் சம்பந்தமாக உலகில் ஏற்படும் போக்குகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்றவாறு இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை மேலும் பலப்படுத்துவதற்கு நடப்பிலுள்ள சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீளாய்வுசெய்தல், திருத்துதல், புதிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குதல் என்பவற்றுக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

# 8. செயற்பாடுகள் குறித்த மீளாய்வு

## 8.1 போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி


- **பாடசாலை மாணாக்கருக்கான தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 ஆம் வருடத்தை தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு அதன் இலக்கை நோக்கி மிகவும் வெற்றிரமாக நெருங்கிய ஒரு வருடமாகக் குறிப்பிடலாம். பாடசாலை மாணாக்கருக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிநிலை இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும்.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு 2015 ஆம் வருடத்திற்குரிய உத்தேச நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை 350 என இலக்கிட்டிருந்ததுடன், 2015 இறுதியில் பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 564 ஆகும். எதிர்பார்த்த இலக்கையும் அடைந்த இடத்தையும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, அது 161.14% வளர்ச்சியாகும்.

| வருடம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2013 | **13** | **22** | **18** | **9** | **15** | **9** | **7** | **1** | **15** | **18** | **7** | **3** |
| 2014 | **5** | **7** | **12** | **11** | **24** | **25** | **38** | **2** | **47** | **78** | **49** | **21** |
| 2015 | **28** | **64** | **90** | **17** | **53** | **50** | **87** | **3** | **40** | **85** | **33** | **14** |
| கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது வளர்ச்சி - சதவீதமாக | **560%** | **914%** | **750%** | **154%** | **220%** | **200%** | **228%** | **66.66%** | **14.89%** | **108.97 %** | **32.66%** | **33.33%** |

**2013-2014-2015 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற சகல பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களதும் மாதாந்த ஒப்பீடு**




**உருவரை இல. 01**

2015 ஆம் வருடத்திற்கான தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உள்ளடக்கப்படவுள்ள பாடசாலை மாணாக்கர்களின் எண்ணிக்கை 80,000 ஆகும்போது வருட இறுதியில் பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக உள்ளடக்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 99,956 ஆகும். எதிர்பார்க்கப்பட்ட மாணாக்கரின் அளவை விட 19,956 மாணாக்கரை உள்ளடக்குவதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிக் கூறு துணிந்துள்ளது. சதவீத அடிப்படையில் நோக்கின், அது 124.94 % சதவீத வளர்ச்சியாகும்.


| வருடம் | ஜனவரி | பெப்ர | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ் | செப்ட | அக்டோ | நவம்ப | டிசம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 1622 | 1645 | 2235 | 1068 | 3915 | 866 | 660 | 8 | 1612 | 6632 | 1180 | 162 |
| 2014 | 830 | 2318 | 3992 | 5589 | 6812 | 6043 | 6743 | 171 | 11 415 | 15 415 | 7752 | 3242 |
| 2015 | 5684 | 8979 | 15 906 | 3333 | 9553 | 9183 | 16 886 | 345 | 4950 | 16 723 | 5043 | 3371 |

2014 ஆம் வருடத்தில் பூர்த்திசெய்யப்பட்ட பாடசாலை மாணாக்கருக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 319 ஆகும்போது 2015 ஆம் வருடத்திற்காக பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 564 ஆகும். அது இரண்டு வருடங்களின் நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒப்பிடும்போது 176.8% வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறது.

**2013/2014/2015 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற சகல பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களதும் மாதாந்த ஒப்பீடு**

| | |
|---|---|
| உத்தேச மாணாக்கர் எண்ணக்கை 2015 | 80 000 |
| டிசம்பர் மாத இறுதியளவில் பங்குபற்றிய மொத்த மாணாக்கர் எண்ணிக்கை | 99 956 |
| Extension Numbers | 19 956 |
| **முன்னேற்றம் சதவீதமாக** | 124.94% |

**2013-2014-2015 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற சகல பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களதும் மாதாந்த ஒப்பீடு**




**உருவரை இல. 02**


2015 ஆம் வருடத்தில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்ட மாணாக்கர் எண்ணிக்கை 99,956 ஆகும். 2014, 2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அது, 142.14% சதவீத அதிகரிப்பாகும்.

2015 ஆம் வருடத்தில் அதிகூடிய எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்திசெய்த மாதமாக மே மாதம் விளங்குவதுடன், அது எண்ணிக்கையில் 87 ஆகும். 2015 ஆம் வருடத்தில் அதிகூடிய எண்ணிக்கையான மாணாக்கர் உள்ளடக்கப்பட்ட மாதம் ஜூலை மாதமாகும். உள்ளடக்கப்பட்ட மாணாக்கர் எண்ணிக்கை 16,886 ஆகும்.

நிகழ்ச்சித்திட்டங்கள் (33%) நடாத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உரிய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையை ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையின் சதவீதமாக நோக்கின், அவ்விபரம் பின்வருமாறு:

- கொழும்பு 33%, கம்பஹா 17%, கேகாலை 11%, கண்டி 9%, இரத்தினபுரி 8%, களுத்துறை 8%, காலி 6%, குருணாகல் 4%, புத்தளம் 2%, மாத்தறை 1%, பதுளை 1%, பொலனறுவை 1%.

**2015 ஆம் வருடத்தில் நடைபெற்ற பாடசாலை**
**நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை – மாவட்டவாரியாக**




- **முன்சிறுவர் பராய அபிவிருத்தியும் போதையூட்டும் ஔடத தடுப்பும் கருதி பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் - தாய்மாரும் கர்ப்பிணித் தாய்மாரும்.**

முன்சிறுவர் பராய அபிவிருத்திக்காக பெற்றோரை அறிவுறுத்தும் 50 நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் வருடத்திற்கு எதிர்பார்த்த இலக்காக வருட ஆரம்பத்தில் பதிவாகியதுடன், வருட இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 108 ஆகும். உத்தேச இலக்கை விட 58 நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்ய தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. சதவீத அடிப்படையில் நோக்கின், அது 216% சதவீத வளர்ச்சியாகும்.

நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெற்றோரில் 5,000 பேரை உள்ளடக்குவது 2015 ஆம் வருடத்திற்கான உத்தேச இலக்காக இருந்தது. அந்த எண்ணிக்கையின் பல மடங்குகளைத் தாண்டி 10,634 மாணாக்கர்கள் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பயனடைந்தனர். சதவீத அடிப்படையின் நோக்கின், அது 212.68% சதவீத வளர்ச்சியாகும்.

முன்சிறுவர் பராய அபிவிருத்திக்காக பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2014, 2015 ஆகிய வருடங்களுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் வருடத்தில் 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றதுடன், 1243 பெற்றோர்கள் நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டனர். 2015 ஆம் வருடத்துடன் ஒப்பிடும்போது நிகழ்ச்சித்திட்டங்களில் 675% சதவீத அதிகரிப்பொன்றும் பயனடைந்தோர் எண்ணிக்கையில் 855.5% சதவீத வளர்ச்சியொன்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

- **உயர்கல்வி, தொழில்நுட்ப நிறுவனங்கள், மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு முடுக்கிவிடப்பட்ட தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 ஆம் வருட ஆரம்பத்தில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் உயர்கல்வி, தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு முடுக்கிவிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையின் உத்தேச இலக்காக இருந்தது, 50 ஆகும். எனினும், வருட இறுதியளவில் 87 நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

துணிந்தது. உத்தேச இலக்கை விட 37 நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், அது 174% சதவீத அதிகரிப்பாகும்.

நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் அக்கல்வி நிறுவனங்களின் 3,000 மாணாக்கரை உள்ளடக்குவது 2015 ஆம் வருடத்தின் உத்தேச இலக்காக இருந்ததுடன், அந்த எண்ணிக்கை பன்மடங்கைத் தாண்டி 8,170 மாணாக்கர்கள் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக நன்மை அடைந்துள்ளனர். சதவீத அடிப்படையில் நோக்கின், அது 272.3% சதவீத வளர்ச்சியாகும்.

2014, 2015 ஆகிய வருடங்களுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டை விட 2015 ஆம் ஆண்டில் 39 நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்ய தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டங்களில் 8 நிகழ்ச்சித்திட்டங்கள் பல்கலைக்கழகங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளதுடன், அவற்றின்மூலம் 2,315 பல்கலைக்கழக மாணாக்கர்களும் 20 விரிவுரையாளர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

- **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புதிய பட்டதாரிகள்)**

2015 ஆம் வருடத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் சார்பாக 60 தடுப்புக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2015 இறுதியளவில் 149 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. உத்தேச இலக்கைத் தாண்டி 89 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தத் துணிந்துள்ளதுடன், சதவீத அடிப்படையில் நோக்கின், அது 248.33% சதவீத முன்னேற்றமாகும்.

உள்ளடக்க எதிர்பார்த்த அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 3,000 ஆக இருந்த போதும் வருட இறுதியளவில் 10,739 அரசாங்க உத்தியோகத்தர்களை உள்ளடக்க தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளது. அவ்வெற்றியை சதவீத அடிப்படையில் நோக்கின், அது 357.96% சதவீதமாகும். 2014 ஆம் வருடத்துடன் ஒப்புநோக்கும்போது அந்த வருடத்தை விட 70 நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் வருடத்தில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. சதவீத அடிப்படையில் நோக்கின், அது 188.6% சதவீத அதிகரிப்பாகும்.

- **ஆசிரியர்களையும் ஆசிரிய ஆலோசகர்களையும் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 ஆம் வருடத்திற்காக ஆசிரியர்களையும் ஆசிரிய ஆலோசகர்களையும் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் 15 நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது. வருட இறுதியளவில் 25 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளது. உத்தேச இலக்கிற்கு ஒப்பீடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 166.66% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

2,500 ஆசிரியர்களையும் ஆசிரிய ஆலோசகர்களையும் 2015 ஆம் வருடத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உள்ளடக்க இலக்கிடப்பட்டிருந்தது. எனினும், எய்தப்பெற்ற இலக்கு 2,487 ஆகும். உத்தேச இலக்கையும் எய்தப்பெற்ற இலக்கையும் ஒப்பிடும்போது, 99.48% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

- **சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்காக 2015 ஆம் வருடத்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 30 ஆகும். வருட இறுதியில் 57 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. சதவீத அடிப்படையில் நோக்கின், அது 190% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் உள்ளடக்க எதிர்பார்த்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 8,000 ஆக இருந்தபோதும், 2015 ஆம் வருடத்தின் இறுதியில் 9,068 உத்தியோகத்தர்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி முடிக்க தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளது. அது எதிர்பார்க்கப்பட்ட

உத்தியோகத்தர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 113.35% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக் காட்டுகிறது.

2014 ஆம் வருடத்தில் 8,277 உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் வருடத்தில் அந்த எண்ணிக்கை 8,767 வரை அதிகரித்துள்ளது. அது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் வருடத்தில் 105.9% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

- **பாரிய வேலைத்தலங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 ஆம் வருடத்தில் பாரிய வேலைத்தலங்களை உள்ளடக்கி நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 40 ஆக இருக்கும்போது அதில் 35 ஐப் பூர்த்திசெய்ய தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது 87.5% சதவீத வளர்ச்சியாகும்.

2015 ஆம் ஆண்டில் உள்ளடக்க உத்தேசிக்கப்பட்டிருந்த பாரிய வேலைத்தலங்களின் எண்ணிக்கை 2,500 ஆக இருக்கும்போது வருட இறுதியில் 5,196 ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டனர். எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு ஒப்பீடாக எய்தப்பெற்ற பெறுபேறு 2.7.84% வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

- **சுகாதாரத்துறைக்காக முடுக்கிவிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

சுகாதாரத்துறைக்கு 2015 ஆம் ஆண்டில் 20 தடுப்புக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த இலக்கிடப்பட்டிருந்ததுடன், வருட இறுதியளவில் 19 நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்திசெய்ய தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது 95% சதவீத அடைவாகும்.

2015 ஆம் வருடத்தில் 2000 சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களை உள்ளடக்க உத்தேசிக்கப்பட்டிருந்த போதும், வருட இறுதியளவில் உள்ளடக்க முடிந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 732 ஆகும். அது, 36.66% சதவீத வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது.

- **அறநெறிப் பாடசாலை மாணாக்கர்கள், பிரிவெணாக்கள், பிக்குமார், தேரர்களுக்காக நடாத்தப்பட்ட தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 ஆம் வருடத்திற்கு பூர்த்திசெய்ய உத்தேசித்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கு 40 ஆக இருந்ததுடன், வருட இறுதியளவில் 46 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது 115% சதவீத வளர்ச்ச மட்டத்தைச் சுட்டுகிறது.

உள்ளடக்குவதற்கு எதிர்பார்த்த அறநெறிப் பாடசாலை மாணாக்கர்களதும் தேரர்களதும் எண்ணிக்கை 3,000 ஆக இருந்துபோதும், வருட இறுதியளவில் 5,825 பயனாளிகளை உள்ளடக்க முடிந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடும்போது 194.16% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.


- **சமுதாய அடிப்படையிலான தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

சமுதாய அடிப்படையிலான 100 தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது 2015 ஆம் வருடத்திற்கான இலக்காகும். 2015 ஆம் வருட இறுதியளவில் 295 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது 295% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.


வருடத்திற்காக உள்ளடக்க இலக்கிடப்பட்டுள்ள சனசமூக அங்கத்தவர்களின் எண்ணிக்கை 20,000 ஆக இருந்தது. வருட இறுதியளவில் 40,595 பேரை உள்ளடக்க தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது எதிர்பார்த்த மட்டத்துடன் ஒப்பிடும்போது 202.97% சதவீத வளர்ச்சி மட்டமாகும்.

சமுதாய அடிப்படையிலான 155 நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் வருடத்தில் 295 நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அது 2014 ஆம் வருடத்துடன் ஒப்பிடும்போது 190.32% சதவீத வளர்ச்சி மட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

**மாதாந்த சனசமூக நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டோரின் எண்ணிக்கை -2015**




**மாதாந்தம் நடைபெற்ற சனசமூக நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை**




- **<u>அரசசார்பற்ற அமைப்பாண்மைகளின் உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தல்</u>**

அரசசார்பற்ற அமைப்பாண்மைகளின் உத்தியோகத்தர்களுக்காக 2015 ஆம் வருடத்தில் 24 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் 2,406 உத்தியோகத்தர்களை உள்ளடக்க தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

- **<u>குறுகியகால இடையீடுகளும் மதியுரைச் சேவைகளும்</u>**

2015 ஆம் வருடத்தில் நாடுபூராவும் சிறைச்சாலைகளிலும் சமுதாய சீர்திருத்தி அலுவலகங்களிலும் 115 குறுகிய இடையீடுகளும் மதியுரைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் 2,718 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

- **பெருந்தோட்டத்துறை**

பெருந்தோட்டத்துறையில் 31 போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் 2368 சனசமூகத்தைச் சேர்ந்தவர்களையும் 77 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்க தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

- **கல்விக் கண்காட்சிகள்**

2015 ஆம் வருடத்தில் நாடுபூராவும் நடைபெற்ற 09 கல்விக் கண்காட்சிகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது. கண்காட்சிக் கூடங்கள்மூலம் 2015 ஆம் வருடத்தில் 13,000 க்கும் அதிகமானவர்களை போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்த தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.


- **2015 சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் எதிர்ப்பு தினக் கொண்டாட்டம்**

2015 சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் எதிர்ப்பு தினக் கொண்டாட்டத்தை 2016 ஜுன் மாதம் 26, 27 ஆகிய இரு தினங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்களின் பங்கேற்புடன் விமர்சையாக நடாத்த தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு செயலாற்றியது. இதன் முதற்படியாக அலரி மாளிகையில் மாண்புமிகு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் துறையில் நிலவும் கேள்வி-வழங்கலை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் ஜுன் மாதம் 26 ஆந் திகதி அலரி மாளிகையில் நடைபெற்றது. இவ்வைபவத்துடன் இணைந்ததாக கொழும்புத் திட்டப் பணியகத்தின் நிதிப் பங்களிப்புடன் போதையூட்டும் ஔடதங்களை ஒழிப்பதற்கான சர்வதேச கல்விக் கண்காட்சியொன்று கொழும்பு 07, ஆர்கேட் வளவில் ஜுன் மாதம் 27, 28 ஆகிய இரு தினங்களிலும் அமுல்படுத்தப்பட்டது. 50 அலங்கார காட்சிக்கூடங்களைக் கொண்டமைக்கப்பட்டிருந்த அக்கண்காட்சியானது, சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களதும் கேள்வியைக் குறைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களதும் பங்கேற்புடன் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பாடசாலைச் சிறார்களும் பொதுமக்களும் இக்கண்காட்சியின் மூலம் போதையூட்டும் ஒடளதங்கள் தடுப்பு பற்றி அறிவைப் பெற்றுக்கொண்டனர்.

## 8.2 ஆராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றம் - 2015

அபாயகர ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், அதற்கான காரணங்கள், அபாயகர ஔடதங்களைப் பாவிப்பதன்மூலம் ஏற்படக்கூடிய சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த ஆய்வுகளை நடாத்துதல், அது சம்பந்தமாக நடவடிக்கைகளை நிறைவேற்றல் ஆகியன ஆராய்ச்சிப் பிரிவினால் பொறுப்பேற்கப்படுகிறது. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான கொள்கைகளை வகுப்போருக்கும் சேவை வழங்குநர்களுக்கும் சேவை பெறுநர்களுக்கும் வசதியளிப்பற்கு போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த அறிக்கைகளைத் தயாரிப்பதும் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதும் முக்கிய கருமங்களாகும்.


### போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கைந்நூல்





ஆண்டுதோறும் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களும் அதற்கு முந்திய ஐந்து வருட காலப்பகுதிக்குரிய தகவல்களும் ஒரு தொகுப்பாக வெளியிடப்படுகிறது. பிரதானமாக சகல விதமான போதையூட்டும் ஔடதங்களும் சம்பந்தமாக பெற்றுக்கொண்ட தகவல்களும் இக்கைந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கைந்நூலுக்கு (2015) இலங்கை பொலிஸ், இலங்கை பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள்

ஒழிப்புப் பிரிவு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலை போன்ற சட்டவினைப்படுத்துகைப் பிரிவுகளிலிருந்தும் சுகாதார அமைச்சு, சுதேச வைத்திய திணைக்களம் முதலிய பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் அதற்கு அவசியமான தகவல்கள் திரட்டப்பட்டன. அச்சீட்டுக்காக இக்கைந்நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.








## போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கைகள் (2014-2015)

சட்ட வினைப்படுத்துகைக்கான நிறுவனங்கள் மூலம் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை உபயோகித்து தற்கால போதையூட்டும் ஔடத பாவனையின் கோலங்கள் பற்றியதாக தயாரிக்கப்பட்ட ஒரு புள்ளிவிவர அறிக்கையாகும்.

இவ்வருடத்தில் பின்வரும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன:

1. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த புள்ளிவிவர அறிக்கை (ஜனவரி – டிசம்பர் வரை, 2014) ஆங்கிலத்திலும் சிங்களத்திலும்.
2. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த புள்ளிவிவர அறிக்கை (ஜனவரி – ஜுன், 2015)
3. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த புள்ளிவிவர அறிக்கை (ஜனவரி – ஜுன், 2014/2015)


















## போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தரவு முகாமைத்துவ முறைமை

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவு முகாமைத்துவ முறைமை (DAMS) என்பது கணினிமயப்படுத்திய ஒரு தகவல் பகுப்பாய்வு முறைமையாகும். இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக கைதாவோரினதும் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவோரினதும் தகவல்கள் அதன்மூலம் திரட்டப்படுகின்றன. சகல சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களிலிருந்தும் சிகிச்சை நிலையங்களிலிருந்தும் இத்தகவல்கள் பெறப்படுகின்றன. சிகிச்சை பெற்றுக்கொள்பவர்கள் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒருமுறை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

2015 ஆம் ஆண்டில் பின்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன:




- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 48
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 93
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 94
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 95
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 96
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 97

## போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் சம்பந்தமான அறிக்கைகள்


அரச சார்பற்ற அமைப்பாண்மைகளினால் பராமரிக்கப்படும் சிகிச்சையளிப்பு நிலையங்கள் மூலம் சிகிச்சைளிப்பதற்காக அனுமதிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல் பத்திரங்களில் சொற்பளவானவையே தரவுத்தளத்திற்கு கிடைக்கப் பெறுகின்றன. ஆதலால், ஆராய்ச்சிப் பிரிவினால் சபையின் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகள் கூட்டின் (FONGODA) உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சிச் செயலமர்வொன்று 2015.09.04 ஆந் திகதி நடைபெற்றது. தகவல் பத்திரங்களை பெற்றுக்கொள்வதும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளிலிருந்து பண்புத்தரமான தரவுகளை தரவுத்தளத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதும் இச்செயலமர்வின் முக்கிய நோக்கமாக இருந்தது.

போதையூட்டும் ஔடதங்கள் துஷ்பிரயோக தரவு முகாமைத்துவ முறைமை பற்றிய இரண்டாவது பயிற்சிச் செயலமர்வு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்காக 2015.11.26 ஆந் திகதி ஒழுங்குசெய்யப்பட்டது.



2015 ஆம் வருடத்தில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கைகள் குறித்த நிறுவனங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன. சிகிச்சையளிப்பு நிலையங்களின் படிவமும் பொலிஸ்/மதுவரி படிவமும் சம்பந்தப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு -III**



ஆராய்ச்சிப் பிரிவினால் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அளவை அறிக்கைகள் சிலவற்றை ஒரு கோவையாகத் தொகுத்து "இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு – III" என்ற பெயரில் நூலொன்று தொகுக்கப்பட்டது. 2015 ஆம் வருடத்தில் அச்சிடப்பட்ட இந்நூலில் பின்வரும் அளவைகள்/ ஆராய்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- கொழும்பு மாவட்டத்தில் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் போக்குகளும் பற்றிய அளவை.
- அம்பாறை நகரில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கு பற்றிய துரித ஆய்வு.
- போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உட்செலுத்திக்கொள்பவர்கள் பற்றிய துரித ஆய்வு.
- களனி பிரதேச செயலாளர் பிரிவில் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் கிடைப்பனவும் பற்றிய அளவை.
- குளியாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் அதன் போக்குகளும் பற்றிய அளவை.

**ஆராய்ச்சிகள்/அளவைகள்**

**1. நிலையங்களுக்கு வெளியிலுள்ள சேவைபெறுநர்களின் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பின் பயன்கூர்நிலை பற்றிய மதிப்பீட்டாய்வு**




இந்த ஆய்வு, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. சபையின் 04 சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கும் வருகைதந்த சேவைபெறுநர்களின் சிகிச்சையளிப்புச் செயன்முறை குறித்து ஆராயப்பட்டது. 2013 ஆம் வருடத்தில் சிகிச்சைபெற்ற சுமார் 100 பேரின் மாதிரியொன்று இதற்காக தெரிவுசெய்யப்பட்டது. அம்மாதிரியிலிருந்து பெறப்பட்ட சிகிச்சைகள் பற்றிய அறிக்கை, 2015 ஆம் வருடத்தில் தரவுப் பகுப்பாய்வுசெய்து ஆராய்ச்சி அறிக்கை பூர்த்திசெய்யப்பட்டது.

எளிய எழுமாற்று முறையைப் பயன்படுத்தி சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட 100 சேவை பெறுநர்களைக்கொண்ட மாதிரியொன்று தெரிவுசெய்யப்பட்டதுடன், அவர்கள் அனைவரும் ஆண்களாவர். பெரும்பாலானவர்கள் பௌத்தர்களும் (71%) முஸ்லிம்களும் (18%) தமிழர்களும் (9%) ஆக அமைந்ததுடன், பௌத்தம் 61%, இஸ்லாம் 19%, இந்து 19%, கிறிஸ்தவர் 13% என்றவாறு அமைந்திருந்தது. கூடுதல் சதவீதமானவர்கள் திருமணமாகாதவர்களாக (59%) இருந்ததுடன், சிகிச்சை பெற்றுக் கொண்டவர்களில் கூடுதல் சதவீதமானவர்கள் 19-25 வயதிடைப்பட்டவர்களாக இருந்தனர்.


அளவைத் தரவுகளின்படி சேவைபெறுநர்களில் 36% சிகிச்சைச் செயன்முறையின் பின்னர் போதையூட்டும் ஔடதங்களிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். 64% சதவீத அளவானவர்களுக்கு வீட்டில் வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்களைச் சந்தித்திருந்தனர்.

**விடுதலையான சேவைபெறுநர்களின் இன்றைய நிலைமை**




*(அளவைத் தரவுகள் - 2015)*

## 2. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதையூட்டும் ஔடதங்களின் பரம்பல் பற்றிய அளவை




ஆராய்ச்சிப் பிரிவினால் மாவட்ட மட்டத்தில் வருடாந்தம் போதையூட்டும் ஔடதங்களின் பரம்பல் பற்றிய துரித ஆய்வுகள் நடாத்தப்படும். நாட்டின் இன்றைய போதையூட்டும் ஔடத பாவனை குறித்து மதிப்பீடுசெய்து, போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், வெளிநிலைச் சேவைக் கருமங்கள், சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன அமுல்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டம், 15 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு மாவட்டமாகும். யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 583,882 ஆகும். எனினும், போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் 14 வயது அல்லது அதற்குக் குறைந்த ஆட்கள் மிகக் குறைவாக இருப்பதால் சதவீதங்களைக் கருத்திற்கொள்ளும்போது கணிப்பீடாக போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும்

ஆகக்குறைந்த வயது மட்டம் 14 வயதை விடக் கூடிய ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டனர். யாழ். மாவட்டத்தில் 14 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகை 406,586 ஆகும். பால்நிலை அடிப்படையில் கருத்திற் கொள்ளும்போது ஆண்களின் சனத்தொகை 190,892, பெண்களின் சனத்தொகை 215,694 ஆகும்.

யுத்த சூழலைத் தொடர்ந்து அபிவிருத்தியடைந்துவரும் யாழ். மாவட்டம் போதையூட்டும் ஔடதங்கள் தொடர்பில் காட்டும் போக்கும் கிடைப்பனவுநிலையும் எவ்வாறுள்ளது என்பது குறித்து ஆராய்வதற்கு யாழ். மாவட்டத்தில் குடித்தன அளவையொன்று மேற்கொள்ளப்பட்டது. யாழ். மாவட்டத்தில் குடித்தன அளவைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு 11,730 குடும்பங்கள் எழுமாறான மாதிரிமுறையின்கீழ் தெரிவுசெய்யப்பட்டனர்.

அளவைத் தரவுப் பகுப்பாய்வின் ஊடாக பின்வரும் தகவல்கள் வெளியாகின: யாழ். மாவட்டத்தில் சட்டரீதியற்ற முறையில் போதையூட்டும் ஔடதமான ஹெரொயின் பாவனையாளர்கள் பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு பெறுமானங்களின் அடிப்படையில் அது 332 பேர், கஞ்சா பாவனையாளர்கள் சுமார் 1132 பேர் யாழ். மாவட்டத்தில் இருப்பதாக தெரியவந்தது. இதற்குப் புறம்பாக, சிகரட், பியர், அற்கஹோல் என்பவற்றைக் கருத்திற்கொள்ளும்போது அது சட்டரீதியற்ற முறையில் போதையூட்டும் ஔடதங்களை விடக்கூடிய பெறுமானமொன்றைக் கொண்டுள்ளது. இந்த போதையூட்டும் ஔடதங்களில் அதிகூடிய பரம்பல் அற்கஹோலுக்கு இருப்பதையும் குறிப்பிடலாம். சிகரட் பாவனையாளர்களின் எண்ணிக்கை 51,577 பேர் என்றும், பியர் பாவனையாளர்கள் 52,180 பேர் என்றும் மதிப்பிடலாம்.

**மாதிரியின் அடிப்படையில் போதையூட்டும் ஔடத பாவனையின் அமைப்பு**

| போதையூட்டும் ஔடத வகை | பாவிக்கும் நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| பியர் | 4,239 | 12.8% |
| அற்கஹோல் (கள்ளு உட்பட) | 4,601 | 13.9% |
| சிகரட் | 4,190 | 12.7% |
| கஞ்சா | 92 | 0.28% |
| ஹெரொயின் | 27 | 0.08% |
| ஔடத துஷ்பிரயோகம் (மாத்திரை வகைகள்) | 16 | 0.05% |
| கொரெக்ஸ் டி | 16 | 0.05% |

***அளவைத் தரவுகள் - 2014***

யாழ். மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த அளவைத் தரவுகளின் அடிப்படையில் இன்றைய போதையூட்டும் ஔடதங்களின்தன்மை, அளவையின் ஊடாக தெரியவந்த தகவல்கள் ஆகியவற்றின் மூலம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய ஊடகவியலாளர் மாநாடொன்று 2015 ஜுன் மாதம் 08 ஆந் திகதி சபையின் கேட்போர்கூடத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்கள். வடமாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன் அவர்கள். சபையின் தவிசாளர் திரு. நிலங்க சமரசிங்க உட்பட சபையின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.



2015 டிசம்பர் மாதம் 29 ஆந் திகதிய அளவையின் ஊடாக வெளியான தகவல்களை உள்ளடக்கிய அளவை அறிக்கைகள் யாழ். மாவட்டச் செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.



**3. வயம்ப கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய அளவை**

ஆராய்ச்சிப் பிரிவினால் வயம்ப கல்வி வலயத்தின் ஒத்தாசையுடன் பாடசாலை மாணாக்கரிடையே போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கு பற்றிய அளவையொன்று நடாத்தப்பட்டது. தரவுகளைத் திரட்டுவதற்காக ஆசிரியர்களையும் அதிபர்களையும் அறிவுறுத்துவதற்கான ஒரு நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் குருணாகல், புத்தளம், சிலாபம், மஹவ ஆகிய கல்வி வலயங்களில் நடைபெற்றன. குருணாகல் மாவட்டத்தில் பாடசாலை மாணாக்கரிடையே ஆபத்திற்கு உள்ளாகக்கூடிய குழுக்களை அடையாளம் காண்பதுடன், பாடசாலை மாணாக்கர் அவ்வாறான ஆபத்தான நிலைமைகளுக்கு இரையாவதற்கான காரணங்கள் குறித்து ஆராய்வதும் உறுதிசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு போதையூட்டும் ஔடத பாவனையைத் தடுப்பது குறித்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாக இருந்தது. 2015 ஆம் வருடத்தில் ஆராய்ச்சி அறிக்கை தயாரித்து பூர்த்திசெய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சி முடிவுகள் வடமேல் மாகாண சபைக் கூடடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**4. இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் போக்குவரவு, கடத்தல், கடத்தல்காரர்கள் பற்றிய துரித அளவை (சிறைச்சாலைகளின் துணையுடன்)**



ஆராய்ச்சிப் பிரிவினால் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு, கடத்தல், கடத்தல்காரர்கள் பற்றிய துரித அளவையொன்று சிறைச்சாலைகளின் துணையுடன் மேற்கொள்ளப் பட்டது. 2015 ஜுலை 07 ஆந் திகதி இந்த அளவை ஆரம்பிக்கப்பட்டது. வெலிக்கடை, புதிய மகசின் சிறைச்சாலை, கொழும்பு மறியற்சாலை, பல்லன்சேன, நீர்கொழும்பு, காலி, தங்காளை, மாத்தறை, பல்லேகெலே, கேகாலை, வட்டரெக்க, களுத்துறை, மஹர, அநுராதபுரம் உட்பட 14 சிறைச்சாலைகளிலிருந்து அளவைக்கு வினாக்கொத்துக்களின் துணையுடன் தரவுகள் திரட்டப்பட்டன. இறுதி அறிக்கை 2015 ஆம் வருடத்தில் தயாரிக்கப்பட்டது.

பின்வரும் தகவல்கள் அளவையின் ஊடாக தெரியவந்தன: மாதிரியில் 94% (296) ஆண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், 6% பெண்களை 919) பிரதிநிதித்துவப்படுத்தியது. அவர்களில் 5% கல்விபெறாதவர்களாக இருந்ததுடன், 24% சதவீதமானவர்கள் ஆரம்பக் கல்வி பெற்றவர்களாகவும், 45% சதவீதமானவர்கள் இரண்டாம்நிலைக் கல்வி பெற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களில் 58% சதவீதமானவர்கள் ஐந்து

தடவைகள் சிறையிடப்பட்டிருந்தனா். 2% சதவீதமானவா்கள் ஆறு தடவைகள் சிறையிடப்பட்டிருந்தனா். இருவா் இருபது தடவைகள் சிறையிடப்பட்டவா்களாக இருந்ததுடன், பெரும்பாலானவா்கள் ஒன்றுக்குக் கூடுதலான தடவைகள் சிறையிடப்பட்டவா்களாக இருந்தனா்.

**இந்து சமுத்திரத்தின் ஊடாக இடம்பெறும் போதையூட்டும் ஔடதங்கள் போக்குவரவு**




*(அளவைத் தரவுகள் - 2015)*


5. **போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் புதிய போக்குகளும் பற்றிய நாடளாவிய அளவை**

ஆராய்ச்சிப் பிரிவினால் போதையூட்டும் ஔடதங்களின் போக்கு பற்றிய நாடளாவிய அளவையொன்று திட்டமிடப்பட்டது. போதையூட்டும் ஔடதங்களுக்கான உயர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களை அடையாளம் காண்பதும் போதையூட்டும் ஔடத பாவனையின் புதிய போக்குகள் பற்றி அடையாளம் காண்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். 18 மாவட்டங்களின் 28 பொலிஸ் அதிகார இடப்பரப்புகளை உள்ளடக்கும் விதத்தில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன.

| **பொலிஸ் அதிகார இடப்பரப்பு** | **வினாக் கொத்துகளின் எண்ணிக்கை** | **பொலிஸ் அதிகார இடப்பரப்பு** | **வினாக் கொத்துகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| கொழும்பு தெற்கு | 40 | குருணாகல் | 40 |
| கொழும்பு வடக்கு | 40 | குளியாபிட்டிய | 40 |
| கொழும்பு மத்தி | 40 | பொலனறுவை | 40 |
| நுகேகொடை | 40 | அநுராதபுரம் | 40 |
| கல்கிஸ்ஸ | 40 | அம்பாந்தோட்டை | 40 |
| காலி | 40 | தங்காளை | 40 |
| எல்பிட்டிய | 40 | மன்னார் | 40 |
| கம்பஹா | 40 | மாத்தளை | 40 |
| களனி | 40 | கேகாலை | 40 |
| நீர்கொழும்பு | 40 | வவுனியா | 40 |

| | | | |
|---|---|---|---|
| மாத்தறை | 40 | கண்டி | 40 |
| பாணந்துறை | 40 | பதுளை | 40 |
| களுத்துறை | 40 | திருகோணமலை | 40 |
| இரத்தினபுரி | 40 | புத்தளம் | 40 |

தரவுகள் திரட்டப்பட்டு வருவதுடன், பொலிஸ் அதிகார இடப்பரப்புகள் சிலவற்றில் அடிப்படைத் தகவல் வழங்குநர்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.


2015 டிசம்பர் மாதமளவில் பூர்த்திசெய்யப்பட்ட 890 வினாக்கொத்துகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அத்தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட 15 பொலிஸ் அதிகார இடப் பரப்புகளில் நேர்காணல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

### 6. போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்பவர்கள் பற்றிய அளவை

ஆராய்ச்சிப் பிரிவினால் போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக் கொள்பவர்கள் பற்றிய நாடளாவிய அளவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக் கொள்பவர்களை அடையாளம் காணல், உயர் போக்கொன்றுடன் கூடிய பிரதேசங்களை அடையாளம் காணல், அதன் ஊடாக அவ்வாறு ஊசிமூலம் உட்செலுத்திக்கொள்பவர்களின் அளவை மதிப்பீடுசெய்தல், உயர் போக்குள்ள பிரதேசங்களை அடையாளம்கண்டு அத்தகைய ஆட்களை சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளின்பால் ஈடுபடுத்தல் என்பன இதன் முக்கிய நோக்கமாகும்.




2015 மே மாதம் 08 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு கிராம உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

2015 மார்ச் மாதம் 27 ஆந் திகதி போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட் செலுத்திக்கொள்பவர்களிடமிருந்து தரவுகளைத் திரட்டுவதற்காக கிராம உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. 12 கிராம

உத்தியோகத்தர்களில் இதில் பங்குபற்றினர். கொழும்பு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் 14 கிராம உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

தரவு திரட்டும் பணி பூர்த்தியடைந்திருப்பதுடன், ஆராய்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டுவருகிறது.

## 7. போதையூட்டும் வெறிய மருந்துகளை அளவுகடந்து உட்கொண்டவர்கள் பற்றிய அளவை

வெறிய மருந்துகளை அளவுகடந்து உட்கொண்டவர்கள் பற்றி UNODC நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சிப் பிரிவினால் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. UNODC நிறுவனத்தினால் வெறிய மருந்துகளை உட்கொண்டவர்கள் பற்றி ஆராய்ச்சிப் பிரிவு, வெளிநிலைச் சேவைகள் பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிச் செயலமர்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. 20 பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டு தரவுகளைத் திரட்ட கள அளவாய்வாளர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு செயலமர்வு, 2015 பெப்ரவரி மாம் 05ஆந் திகதி நடைபெற்றது. பூர்த்திசெய்யப்பட்ட வினாக்கொத்துகளின் ஊடாக பெறப்பட்ட தரவுகள் ஆராய்ச்சி அறிக்கையைத் தயாரிப்பதற்காக UNODC நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.





## 8. பாடசாலை மாணாக்கரிடையே போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு

ஆராய்ச்சிப் பிரிவினால் பாடசாலை செல்லும் மாணாக்கரின் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வொன்றை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. மாதிரியாக 15 மாவட்டங்கள் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்குகள் சார் அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டன. படுகையடுக்கு மாதிரி முறையைப் பயன்படுத்தி 100 பாடசாலைகளிலிருந்து 1000 மாணாக்கர்களை ஈடுபடுத்தி இந்த அளவையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. 2016 ஆம் வருடத்தில் இந்த அளவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

| மாவட்டம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணாக்கரின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 15 | 145 |
| கம்பஹா | 13 | 131 |
| குருணாகல் | 12 | 120 |
| கண்டி | 10 | 103 |
| காலி | 08 | 83 |
| களுத்துறை | 08 | 81 |
| இரத்தினபுரி | 08 | 76 |
| அநுராதபுரம் | 07 | 68 |
| புத்தளம் | 06 | 59 |
| யாழ்ப்பாணம் | 05 | 50 |
| அம்பாந்தோட்டை | 05 | 48 |
| மொணராகலை | 03 | 35 |
| **மொத்தம்** | **100** | **1000** |

**களனிப் பல்கலைக்கழக உள்வாரி மாணாக்கருக்கான ஆராய்ச்சிப் பயிற்சிகள்**

களனிப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான சிறப்புப் பட்டக் கல்வி மாணாக்கா் 06 பேர் 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதியிலிருந்து 2015 நவம்பர் 24 ஆந் திகதி வரையில் பயிற்றுவிக்கப்பட்டனா். ஆராய்ச்சி நுட்பமுறைகள், தரவு திரட்டல், தரவுகளை கணனிமயப்படுத்தல் ஆகியவற்றில் அவா்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.





**கருத்திட்டங்களை அமுல்படுத்தல்**

உலக சுகாதார தாபனமும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையும் இணைந்து பின்வரும் மூன்று கருத்திட்டங்களை 2015 ஆம் ஆண்டினுள் அமுல்படுத்தின. அக்கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பு, அமுல்படுத்தல், மேற்பார்வை பணிகள் ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பொழிப்பு கீழ்வருமாறு:

**போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் பெண்களுக்கான சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம் - SESRL 1408462**

உலக சுகாதார தாபனத்தினால் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் பெண்களுக்கான இடையீட்டு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்காக நிதியுதவி அளிக்கப்பட்டது. சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய உயர் சார்புப் போக்குள்ள பிரதேசங்களைத் தெரிவுசெய்து போதையூட்டும் ஔடத பாவனையைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் முனைப்புடன் செயலாற்றப்படுகிறது.

உலக சுகாதார தாபனமும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையும் இணைந்து சமூக நோய்கள்/எயிட்ஸ் பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான 15 நிகழ்ச்சித்திட்டங்களையும் காசநோய் சம்பந்தமான சிலேட்டுமப் பரிசோதனைகளை கொம்பனித்தெரு, தெஹிவளை, புறக்கோட்டை, கல்கிசை ஆகிய பகுதிகளை மையமாகக்கொண்டு முன்னெடுத்தன. பெண்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்களைப் பகிா்ந்தளித்து காசநோய் மற்றும் எச்.ஐ.வி./எயிட்ஸ் பற்றி விழிப்பூட்டலும் மேற்கொள்ளப்பட்டது.

2015 செப்டம்பர் மாதம் 03 ஆந் திகதி கொம்பனித்தெருவில் மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. காசநோய் பற்றி பாடசாலை மாணாக்கா் மத்தியில் விழிப்பூட்டல் ஏற்படுத்தப்பட்டது.





34

## சர்வதேச தூக்கமயக்க மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை (INCB)

இலங்கை கடப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்கு ஆதரவு வழங்குமுகமாகவும் அவற்றுக்குச் செவிசாய்க்குமுகமாகவும் மாதாந்தம், காலாண்டு, வருடாந்தம் என்ற அடிப்படையில் INCB நிறுவனத்திற்கு பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன: தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவு INCB நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கும் இலங்கையின் இன்றைய போதையூட்டும் ஔடத பாவனை மற்றும் அது தொடர்பில் எழும் விடயங்கள் மீதான பொறுப்புக்களை வகிக்கிறது. அதேபோல், ஆண்டினுள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பின்வரும் அறிக்கைகள் அனுப்பிவைக்கப்படுகிறது.

சர்வதேச தூக்கமயக்க மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை வைத்திய வழங்கல்கள் பிரிவு, வைத்திய தொழில்நுட்பப் பிரிவுடன் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஆவணங்களைத் தயார்செய்தது. சர்வதேச தூக்கமயக்க மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு பின்வரும் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

### மாதாந்தம் அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- அடையாளம்காணப்பட்ட போதையூட்டும் ஔடத சுற்றிவளைப்புகள் (படிவம் DND/SDS)

### காலாண்டுக்கு ஒருமுறை அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A) 4வது காலாண்டு, 2012 மற்றும் 1வது காலாண்டு, 2வது காலாண்டு, 3வது காலாண்டு, 2015.
- 1971 சமவாயத்தின் பட்டியல் II இல் தரப்பட்டுள்ள உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A/P) 4வது காலாண்டு, 2012 மற்றும் 1வது, 2வது, 3வது காலாண்டுகள், 2015)
- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களின் தேவைப்பாடுகள் பற்றிய மதிப்பீடுகள்.
- 1971 உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய சமவாயத்தின் பட்டியல் 2 இல் அடங்கியுள்ள மருத்துவ, விஞ்ஞானரீதியான தேவைப்பாடுகளுக்கு அவசியமான ஔடத வகைகள் (படிவம் B/P)

### வருடாந்தம் அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் உற்பத்தி, நுகர்வு, களஞ்சியப்படுத்தல், சுற்றிவளைப்புகள் ஆகியன பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் C)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களும் சட்டவிரோத உற்பத்திக்கு தூண்டுதல் அளிக்கக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களும் பற்றிய வருடாந்த தகவல்கள் (படிவம் D)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் P)
- வருடாந்த அறிக்கை வினாக்கொத்து (படிவம் E)

    1. சட்டவாக்க மற்றும் நிறுவன ரீதியான வேலைச்சட்டகம்.
    2. போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வி-நிரம்பலைக் குறைப்பதற்கான பரந்த அணுகுமுறை.
    3. போதையூட்டும் ஔடத பாவனைக் கோலங்களையும் போக்குகளையும் அடையாளம் காணல்.

4. போதையூட்டும் ஔடதங்களின் பயிரிடல், உற்பத்தி, சுற்றிவளைப்புகள் பற்றிய தற்கால கோலங்களையும் போக்குகளையும் அடையாளம் காணல்.

**அழிக்கப்பட்ட அபாயகரமான போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய மாதாந்த அறிக்கை**

நீதிச் சேவை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் அழிக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய அறிக்கையொன்று நீதிமன்றத்தின்மூலம் சபையின் ஆராய்ச்சிப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

| **2015.01.01 – 2015.12.31 (கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி)** | | |
|---|---|---|
| **போதையூட்டும் ஔடதம்** | **அளவு (அப)** | **அறிக்கையிட்ட நீதிமன்றம்** |
| ஹெரொயின் | 54391 | குருணாகல் மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| கஞ்சா | 199973 | குருணாகல் மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| ஹெரொயின் | 230.04 | பிபிலை மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| கஞ்சா | 10880 | பீலெஸ்ஸ மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| கஞ்சா | 20873 | பிபிலை மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| **மொத்தம் (ஹெரொயின்)** | **54,621.04** | |
| **மொத்தம் (கஞ்சா)** | **231,726.00** | |


**போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆலோசனை சான்றிதழ் கற்கைநெறி**

சபையின் கல்வி மற்றும் ஆலோசனைப் பணியாள்தொகுதியினரின் ஒத்துழைப்புடன் ஆராய்ச்சிப் பிரிவினால் ஒருங்கிணைப்புச்செய்யப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளின் ஆலோசனை மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபடுபவர்களுக்கும் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கும் துறையில் பிரவேசிக்க விரும்பும் ஆட்களுக்கும் 'போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆலோசனை சான்றிதழ் கற்கைநெறி' 2012 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் போதையூட்டும் ஔடதப் பிரச்சினை பற்றிய தொழில்சார் அறிவை வழங்குவதற்கும் ஆலோசனை நடவடிக்கைகளுக்கான அறிவை விருத்திசெய்துகொள்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். வருடத்தினுள் இச்சான்றிதழ் கற்கைநெறி 07 அணிகளுக்கு நடாத்தப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் வருடத்தில் சுமார் 633 மாணாக்கர்கள் இதில் கலந்துகொண்டனர். (16 ஆவது அணி – 2015.01.31, 17 ஆவது அணி – 2015.03.28, 18 ஆவது அணி – 2015.06.06, 19 ஆவது அணி – 2015.08.01, 20ஆவது அணி – 2015.09.26, 21 ஆவது அணி – 2015.11.07, 22 ஆவது அணி – 2015.11.08)



*சான்றிதழ் வழங்கும் நிகழ்வின்போது*

**பிரசுரங்கள்**




**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் காலாண்டுச் சஞ்சிகை - "NDDCB NEWS LETTER"**

- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல்களை/ சேவைகளை ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளும் நோக்குடன் ஒரு

6

காலாண்டுச் செய்திமடல் வெளியிடப்பட்டது. சபையின் ஊழியர்களின் கருத்துரைகள், கட்டுரைகள் மற்றும் கலைப் படைப்பாக்கங்களுடன் போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாடு, தடுப்பு, சிகிச்சை, புனர்வாழ்வளிப்பு மற்றும் ஆராய்ச்சித் தகவல்களை இச்சஞ்சிகை சுமந்து வருகிறது. 2015 ஆம் வருடத்தில் பன்னிரண்டாவது சஞ்சிகை வெளியிடப்பட்டதுடன், அது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

**'நூறு நாட்களில் ஆயிரம் வேலைகள்'**

**என்ற நூலை வெளியிடல்**




ஆராய்ச்சிப் பிரிவினால் புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் தவிசாளரின் எண்ணக்கருவின்படி சகல பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அடங்கிய நூலொன்று வெளியிடப்பட்டது. சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவாறு இந்நூலில் 3,545 வேலைகள் உள்ளடங்கின.

**போதையூட்டும் ஔடத பாவனைக்கும் வியாபாரத்திற்கும் எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு நினைவு மலரொன்றை வெளியிடல் - 2015 ஜூன் 26**




ஆராய்ச்சிப் பிரிவினால் போதையூட்டும் ஔடத பாவனைக்கும் வியாபாரத்திற்கும் எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு 2015 ஜூன் 26 ஆந் திகதி நினைவு மலரொன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது. வர்த்தக விளம்பரங்கள் மூலம் 253,000.00 தொகையை சபை ஈட்டியது. நினைவுக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுசரணையாளர்களுக்கும் நினைவு மலர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் 2015 ஆம் வருடத்தினுள் சிகிச்சைகள் மற்றும் பொலிஸ் மதுவரி அளவைப் பத்திரங்களில் தரவுகளை உட்படுத்தும் பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அத்தரவுகளின் துணையுடன் பின்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன:

- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 48
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 94
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 95
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 96
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 97

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலுள்ள சகல பிரிவுகளிலும் நிலையங்களிலும் உள்ள கணனிகளில் காணப்பட்ட குறைபாடுகளை அடையாளங்கண்டு அவற்றைத் திருத்தும் பணி தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.


1984 துரித அழைப்பு இலக்கத்திற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை நுணுகி ஆராய்ந்து மின்னஞ்சல் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.


சான்றிதழ்கள்/துண்டுப்பிரசுரங்கள் வடிவமைக்கப்பட்டன.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் இணையத்தளம் இப்பிரிவினால் நாளாந்தம் இற்றைவரைப்படுத்தப்பட்டது.

**தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் தரவு முகாமைத்துவ முறைமையை நவீனமயப்படுத்தல்**

கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்வி நிறுவகத்தினால் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவு முகாமைத்துவ முறைமைக்கு நவீன முறைமையொன்று தயார்செய்யப்பட்டது. இதன் முதலாவது கட்டம் தலைமையகத்தில் கணனிப் பிரிவிற்கு வழங்கப்பட்டது.




**தரவு முறைமையின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்தல்**

வெளிநிலைச் சேவைகள் பிரிவின் தரவு முறைமையைத் தயார்செய்வதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகள் தயார்செய்யப்பட்டன.

**நடமாடும் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கருத்திட்டம்**

போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தகவல்களை வெளிக்கொணர்வதற்கு 02 துரித தொலைபேசி இலக்கங்கள் உள்ளன. இவற்றுக்குக் கிடைக்கும் தொலைபேசி அழைப்புகளுக்கு நாளாந்தம் விபரங்களைப் பெற வேண்டியுள்ளது. அதற்கு 1984 தகவல் மையம் மீளநிறுவும் கருத்திட்டம் மொபிரெல் நிறுவனத்துடன்

இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் வருடத்தில் அதற்கான யோசனைகளைத் தயாரித்து அனுமதி பெறப்பட்டது.

**போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புச் செய்திகளை பாடசாலைகளில் காட்சிப்படுத்தல்**

2012 ஆம் வருடம் முதல் பாடசாலை மதிற்சுவர்களில் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்திகளை காட்சிப்படுத்தும் திட்டம் ஆராய்ச்சிப்பிரிவினால் அமுல்படுத்தப்பட்டுவருகிறது. 2015 ஆம் வருடத்தில் பின்வரும் பாடசாலைகளில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- பிலியந்தலை ரத்தனபிட்டிய ஆனந்த வித்தியாலயம் - பிலியந்தலை.
- கோட்டே ஆனந்த சாஸ்திராலய - பிட்டகோட்டே.
- மகாபோதி மகா வித்தியாலயம் - மருதானை.
- கிரி/ரத்தனாலங்கார மகா வித்தியாலயம் - அளவ்வ.

பிலியந்தலை ரத்தனபிட்டிய ஆனந்த வித்தியாலயத்தில் வர்ண பூச்சு வேலை பூர்த்திசெய்யப்பட்டது.





கோட்டே ஆனந்த சாஸ்திராலய, பிட்டகோட்டே – வர்ண பூச்சு வேலை ஆரம்பிக்கப்பட்டது.
மகாபோதி மகா வித்தியாலயம், மருதானை – வர்ண சாயம் பகிர்ந்தளிப்பதற்கு அவசியமான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.
கிரி/ரத்தனலங்கார மகா வித்தியாலயம், அளவ்வ – வர்ண சாயம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

## 8.3 சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவு

சபையின் சேவைகளிடையே சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவும் சிறப்பான ஓரிடத்தை வகிக்கிறது. முன்னைய ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் புனர்வாழ்வளிப்பதிலும் சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்கள் சிறப்பாக சேவையாற்றியுள்ளன. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்படுவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த போதைப்பிரியர்களை அத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுவித்தல், அவர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், அவர்களின் ஆற்றல்களைப் பலப்படுத்துதல், ஆன்மீக விருத்தி, ஆளுமை விருத்தி முதலிய பண்புத்தர உள்ளீடுகள் ஊடாக சிகிச்சையளிப்புச் செயன்முறை போசிக்கப்பட்டது.

சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கு சேவைபெறுநர்களை அனுமதிக்கும்போது கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்ட வகையீடே இவ்வாண்டிலும் பின்பற்றப்பட்டது. எனினும், 2015 பெப்ரவரி மாதம் தொடக்கம் போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உட்செலுத்திக்கொள்ளும் சேவை பெறுநர்களுக்கு பிலியந்தலை தும்போவில பகுதியில் புதிய சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையமொன்று தாபிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் இவ்வாண்டில் சபையின் பின்வரும் 05 நிலையங்களில் வதிவிட சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன:

மத்திய மாகாண “யொவுன்” (இளைஞர்) சிகிச்சையளிப்பு நிலையம் - கண்டி

தென் மாகாண சிகிச்சையளிப்பு நிலையம் - காலி
மேல் மாகாண சிகிச்சையளிப்பு நிலையம் - தலங்கம
நவதிகன்த சிகிச்சையளிப்பு நிலையம் - நிட்டம்புவ
சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - பிலியந்தல

21 வயதுக்குக் குறைந்த சேவைபெறுநர்கள், கண்டி "யொவுன்" சிகிச்சையளிப்பு நிலையத்திற்கும்,
போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காலம் 0-6 வருடங்களுக்கு இடைப்பட்டதாயின், காலி புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கும்,
போதையூட்டும் ஔடதங்களின் பாவனைக் காலம் 6-12 வருடங்களுக்கு இடைப்பட்டதாயின், தலங்கம நிலையத்திற்கும்
போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காலம் 12 வருடங்களுக்கு மேற்பட்டதாயின், நவதிகன்த நிலையத்திற்கும்,
போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உட்செலுத்திக்கொள்ளும் சேவைபெறுநர்கள் பிலியந்தல நிலையத்திற்கும் என்ற அடிப்படையில்.

**சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்காக சேர்த்துக்கொள்ளல்**

மேற்குறிப்பிட்ட வகையீட்டின்படி ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், வழக்கம்போல் இவ்வாண்டிலும் தமது சுயவிருப்பின் பேரில் வதிவிட சிகிச்சைக்காக சேர்த்துக்கொள்ளப்படுதல், பாதுகாவலர்களின் கோரிக்கையின் பேரில் சேர்த்துக் கொள்ளப்படுதல், நீதிமன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்த நிறுவனங்கள் ஊடாக சேர்த்துக்கொள்ளப்படுதல், வெளிநிலை சேவைகள் ஊடாக சேர்த்துக்கொள்ளப்படுதல் என்பவற்றை பரவலாகக் காண முடிந்தது. மேற்குறிப்பிட்ட சகல சேர்த்துக்கொள்ளப்படல்களும் எமது அனுபவம்வாய்ந்த ஆலோசகர்களின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டன. முன் ஆலோசனை அமர்வுகளை உபயோகப்படுத்தி வதிவிட சிகிச்சைக்காக சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

அதேபோல், 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் சட்டத்தின்படி நீதிமன்றத்தின் மூலம் புனர்வாழ்வளிப்புப் பணியகத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் சேவைபெறுநர்கள் கந்தகாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவசியமான வேளைகளில் எமது சேவை அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்ட காலம்**

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இவ்வாண்டில் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் வதிவிட சிகிச்சை அளிக்கப்படும் காலம் ஆகக்குறைந்தது 03 மாதங்களாகும். சேவைபெறுநர் எவரேனும் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்யும்போது அவருக்கு 03 மாதங்கள் முடிவில் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விடைபெற்றுச் செல்லமுடியும். எனினும், ஆலோசகரதும் ஏனைய பணியாள்தொகுதியினரதும் முன்னேற்ற மதிப்பீட்டின்படி அவர் தொடர்ந்தும் தனிநபர் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவேண்டிய ஆளொருவராக இருப்பின், அவரது சிகிச்சைக் காலம் நீடிக்கப்பட்டது.

**சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

வதிவிட சிகிச்சை அளிப்பதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின் ஒவ்வொரு நிலையத்திலும் அந்தந்த சேவைபெறுநருக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்புத் திட்டமொன்றைப் பயன்படுத்தி சிகிச்சையளிப்புச் சேவை வழங்கப்பட்டது. குறிப்பாக, சகல சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் "உளவியல் சிகிச்சையளிப்பு முறை" என்பதைப் பயன்படுத்தி அவர்களுக்கு குறித்த சேவைகள் வழங்கப்பட்டன. போதைப்பிரியர்களின் பிரச்சினைகளை அடையாளம் காணல், பிரச்சினைகளை பொருள்வரையறை செய்தல், பிரச்சினைகளைப் பகுத்தாராய்தல் என்பவற்றின் ஊடாக அவர்களுக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சைத் திட்டம் ஆலோசகரதும் உதவி ஆலோசகர்களதும் தலையீட்டுடன் தயாரிக்கப்பட்டு ஆலோசனை உதவியாளர்களது ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இங்கு தனிநபர் ஆலோசனை, குழுநிலை ஆலோசனை, குடும்ப ஆலோசனை, தொழில் வழிகாட்டல் ஆலோசனை, சுய அபிமானத்தை ஏற்படுத்துதல் சார்ந்த செயற்பாடுகள்,

ஆன்மீக விருத்திக்கான ஆலோசனைகள், சுற்றாடல் நயப்பு சார்ந்த செயற்பாடுகள், பொழுதுபோக்குசார் பண்புகளை விருத்திசெய்தல் போன்ற சேவைபெறுநரிடம் குடிகொண்டிருந்த பல்வேறு பக்கத் தோற்றங்களை முன்னேற்றும் நோக்குடன்கூடிய சிகிச்சையளிப்புத் திட்டமொன்றை உபயோகிப்பதன்மூலம் குறித்த சேவைகள் வழங்கப்பட்டன.

**நாளாந்த நிகழ்ச்சித்திட்டம்**

சகல சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் வதிவிட சேவைபெறுநர்களுக்கும் பொதுவான நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. மு.ப. 5.30 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை தொடரும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் அதிகாலைவேளை சந்திப்பு, தியான நிகழ்ச்சிகள், திறந்தவெளி மற்றும் உள்ளக விளையாட்டு நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகள், மௌனம் அனுஷ்டிப்பு காலம், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தனிநபர் மற்றும் குழுநிலை அமர்வுகள், மாலைநேர சந்திப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சிறப்பான நிகழ்ச்சிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நிலையத்தில் அமுல்படுத்தப்பட்டன.

**ஆன்மிக விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

போதைப்பிரியர்களின் கைவிட்டுப்போன ஆன்மிக ரீதியான நடத்தைகளை மீண்டும் போசிக்கும் நோக்குடன் எமது சகல சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் ஆன்மிக விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் ஒவ்வொரு நிலையத்திலும் வதிவிட சேவைபெறுநர்களை ‘சில்’ விரதம் அனுஷ்டிக்கச்செய்தல், அவர்கள் தர்ம உபந்நியாசங்களைச் செவிமடுக்க வழிவகை செய்தல், மதவழிபாட்டுத்தலங்களுக்கு அழைத்துச் செல்லல், சிகிச்சையளிப்பு நிலையங்களின் தலைமையில் பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு அமைக்கும் போட்டி, நிலையங்களின் வெசாக் அட்டைகள் மற்றும் வெசாக் வெளிச்சக்கூடுகள் அமைத்தல், தானம் வழங்கும் பிங்கம நிகழ்ச்சிகளில் சேவைபெறுநர்களை பங்கேற்கச்செய்தல், பொசொன் வைபவம் சார்ந்த செயற்பாடுகள் என்பன அவற்றில் அடங்கும். இவ்வாண்டில் பௌத்தாலோக மாவத்தையில் நடைபெற்ற வெசாக் வெளிச்சக்கூடு அமைத்தல் போட்டியில் நவதிகன்த சிகிச்சையளிப்பு நிலையம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை சேவைபெறுநர்களும் பணியாள்தொகுதியினரும் அடைந்துகொண்ட சிறப்பான ஒரு வெற்றியாகும்.



*‘சில்’ விரதம் அனுஷ்டித்தல் நிகழ்ச்சித்திட்டம் - நவதிகன்த நிலையம்*

**வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

சகல சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் சேவைபெறுநர்களுக்கான பல்வேறு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டிலும் அமுல்படுத்தப்பட்டன. நாளாந்த சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை, சேவைபெறுநர்களின் பங்களிப்புடன் ஆண்டு முழுவதும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சிகிச்சையளிப்புக்கான செயற்பாடொன்றாக வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு நிலையத்திலும் அமுல்படுத்தப்பட்டது.

| **நிலையம்** | **அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** |
|---|---|
| யொவுன் சிகிச்சையளிப்பு நிலையம் | கடித உறை தயாரித்தல், கடதாசி உறை தயாரித்தல், விவசாய நடவடிக்கைகள், அந்தூரியம் மலர்ச்செய்கை, ஓக்கிட் மலர்ச்செய்கை, மோட்டார் தொழில்நுட்பம் |
| தலங்கம நிலையம் | கால் துடைப்பம் தயாரித்தல், கடித உறை தயாரித்தல், கடதாசி உறை தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை, தலையணை உறை தைத்தல், விவசாய நடவடிக்கைகள், மோட்டார் தொழில்நுட்பம், கணனி பழுதுபார்ப்பு, அழகுக்கலை. |
| நவதிகன்த நிலையம் | விளக்குமாறு தயாரித்தல், மலர்ச்செய்கை (ஓக்கிட், அந்தூரியம்), காளான் வளர்ப்பு, விவசாய நடவடிக்கைகள், மலர்ச்சாடிகள் தயாரித்தல், கடித உறை தயாரித்தல், மோட்டார் தொழில்நுட்பம். |
| காலி நிலையம் | கடித உறை தயாரித்தல், கால் துடைப்பம் தயாரித்தல், தலையணை உறை தைத்தல், விவசாய நடவடிக்கைகள், தென்னஞ்சிரட்டை சார்ந்த படைப்புகள், மலர்ச்சாடிகள் தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை, மோட்டார் தொழில்நுட்பம், மின்னிணைப்பூட்டல் தொழில்நுட்பம். |
| பிலியந்தல நிலையம் | கடித உறை தயாரித்தல். |



*மோட்டார் தொழில்நுட்பத்தில் பயிற்சி – கண்டி நிலையம்*

**விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

சிகிச்சையளிப்பு மற்றும் நாளாந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக ஒவ்வொரு நிலையத்திலும் சேவைபெறுநர்களின் இரசணைக்காக வருடத்தில் பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, சுற்றுப் பிரயாணங்களில் பங்குகொள்ளச் செய்தல், மாதம் ஒருதடவை நடைபெறும் இசைக் கச்சேரி (‘பெதுரு பாட்டிய’) போன்ற விசேடமான பல நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் அடங்கும். மத நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், பக்திப் பாடல் நிகழ்ச்சிகள், ஆண்டிறுதி கலையரங்க நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் உந்துகைக்கான நிகழ்ச்சிகளும் இதில் அடங்கியிருந்தன.



**வருமான உருவாக்குகை**

சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்களில் 2015 ஆம் ஆண்டிலும் இரண்டு பிரதான வருமான உருவாக்குகை மார்க்கங்களை அவதானிக்க முடிந்தது. அவை தென்னை பயிரிடுவதன் ஊடாக பெறப்பட்ட வருமானமும் கொடுப்பனவு அடிப்படையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட சேவை பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானமுமாகும்.

**ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்புச் சேவை வழங்கல்**

இவ்வாண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையான 2752 பேருக்கு சபையினால் சிகிச்சையளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன. இவர்களில் 1,605 பேருக்கு எமது சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்து ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. வதிவிட சிகிச்சைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 957 ஆகும். வெளிநிலைச் சேவைகள் பிரிவிலிருந்து 1147 பேரும் சிறைச்சாலைகள் நிகழ்ச்சித்திட்டம் சார்ந்த சிகிச்சையளிப்பு சேவை வழங்கல் மூலம் 957 பேரும் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது.

**மேல் மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - தலங்கம**

இந்த நிலையத்தின் மூலம் 50 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சை அளிக்கப்பட முடியும். நிலைய சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 03 பிரிவுகளைக் கொண்டதாகும். சாதாரண பிரிவு, கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு, மகளிர் பிரிவு என வெவ்வேறான மூன்று பிரிவுகள் உள்ளன. நிலையத்தின்மூலம் 2015 ஆம் ஆண்டில் 592 சேவைபெறுநர்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. சாதாரண பிரிவு மூலம் 340 சேவைபெறுநர்களுக்கும் கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு மூலம் 212 சேவை பெறுநர்களுக்கும் மகளிர் பிரிவு மூலம் 40 பேருக்கும் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

அவர்களில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 270 ஆகும். சாதாரண பிரிவு மூலம் 122 சேவைபெறுநர்களுக்கும் கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு மூலம் 124 சேவைபெறுநர்களுக்கும் மகளிர் பிரிவு மூலம் 24 சேவைபெறுநர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்த நிலையத்தில் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம் மூலம் அமுல்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் விபரம் வருமாறு:

**மேல் மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - தலங்கம**

- ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் "சில்" விரதம் அனுஷ்டிப்புக்கான நிகழ்ச்சிகளையும் தர்ம உபந்நியாசங்களையும் சமய கலந்துரையாடல்களையும் ஒழுங்குசெய்தல்.
- மாதாந்த பெற்றோர்களுடனான சந்திப்புகளையும் பிற்பாதுகாப்பிற்கான சந்திப்புகளையும் ஒழுங்குசெய்தல்.
- சேவைபெறுநர்களின் இரசணைக்காக இசைக் கச்சேரிகளையும் ('பெதுரு பாட்டிய') இசை நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்தல்.
- பணியாள்தொகுதியினர் மத்தியிலும் சேவைபெறுநர்கள் மத்தியிலும் காசநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். பணியாள்தொகுதியினர் பயிற்சி அமர்வுகள்: எச்.ஐ.வி. மற்றும் பாலியல் நோய்கள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள், ஹெப்படைட்டிஸ் 'சி' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் அதற்குச் சிகிச்சையளித்தலும்.
- வெசாக் பண்டிகை சார்ந்த சமய செயற்பாடுகள் - பக்திப் பாடல் நிகழ்ச்சி, பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக் கூடு போட்டியில் பரிசில் பெறுதல்.
- சிங்கள புதுவருடக் கொண்டாட்டம்.

- மகளிருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்பு நிலையத்தை தொடர்ந்தும் இயக்கிச் செல்லல்.
- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் சிரமதானப் பணியும்.
- அழகுக்கலை பற்றிய செயலமர்வுகளை நடாத்துதல்.
- 5S நிகழ்ச்சித்திட்டம்.
- விவசாய நடவடிக்கைகள்: மரக்கறிச்செய்கை, மலர்ச்செய்கை.
- பணியாள்தொகுதியினர் பயிற்சி அமர்வுகள்.
- விளையாட்டு நடவடிக்கைகள்.
- கொழும்புத் திட்டத்தின் மூலம் முறைசாரா கல்வி கற்கைநெறிகளை ஆரம்பித்தல்:- முதியோருக்கான ஆங்கிலமொழி வகுப்புகள், கணனிப் பயிற்சி, கையடக்கத் தொலைபேசி பழுதுபார்ப்பு.
- நத்தார் பண்டிகைக் கொண்டாட்டம்.
- ஆண்டிறுதிக் களியாட்ட நிகழ்ச்சி (31st Night)




*பெற்றோரின் பாதங்தொழுதல் ('மாப்பிய வந்தனாவ')*
*நிகழ்ச்சி - தலங்கம நிலையம்*

**<u>மத்திய மாகாண (இளைஞர்) சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கண்டி</u>**

இந்த நிலையத்தின் மூலம் 40 பேருக்கு ஒரே தடவையில் சேவை வழங்க முடியும். இவ்வாண்டில் இந்த நிலையத்தின்மூலம் 150 சேவைபெறுநர்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டதுடன் அவர்களில் 88 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சையளிப்பு சேவைகள் வழங்கப்பட்டன. 2012 செப்டம்பர் மாதம் தொடக்கம் இந்த நிலையம், 'இளைஞர் (யொவுன்) சிகிச்சையளிப்பு நிலையம்' எனப் பெயரிடப்பட்டது. ஏற்கனவே கொட்டாவ நிலையத்திலிருந்த சகல வதிவிட சேவைபெறுநர்களும் இந்த நிலையத்திற்கு மாற்றப்பட்டனர்.

**மத்திய மாகாண இளைஞர் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் பின்வரும் சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்டன:-**

- சேவைபெறுநர்களின் சிந்தனைரீதியான திறமைகளை விருத்திசெய்வதற்கு மாதம் இரு தடவை சேமபூமி சங்கத்தை நடாத்துதலும் "சேமபூமி" சஞ்சிகையை வெளியிடுதலும்.

- சேவைபெறுநர்களின் ஆன்மீக விருத்திச் செயன்முறைக்காக மாதம் ஒரு தடவை சில் விரதம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சித்திட்டம், ஹேன்தெனிய ரஜமகா விகாரையில் சிரமதானப் பணி, மகா சங்கத்தினரை வரவழைத்து தர்ம உபந்நியாசங்களை ஒழுங்குசெய்தல்.

- அவர்களின் அறிவையும் ஆற்றல்களையும் விருத்திசெய்வதற்கு விவாதப் போட்டிகள், ஆங்கிலமொழி வகுப்புகளை ஒழுங்குசெய்தல், வினா-விடை போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், நடன வகுப்புகள், கட்டுரைப் போட்டிகள், க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு முன் தயார்படுத்தல், இசை வகுப்புகள்.

- குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக மாதம் ஒரு தடவை பெற்றோருடனான சந்திப்பொன்றை ஏற்பாடுசெய்தல், இரசணை உணர்வை வளர்க்குமுகமாக திரைப்படங்களைப் பார்வையிடுதல், இசைக் கச்சேரிகளை (பெதுரு பாட்டி) ஒழுங்குசெய்தல், குழுநிலைச் செயற்பாடுகள், மாலைநேர சந்திப்புகள், பல்வேறு நாடகங்களை நடித்துக்காட்டுதல், சிறுகதை எழுதுதல், பாட்டிசைத்தல் போன்ற செயற்பாடுகள்.

- சமய ரீதியான சுற்றுப்பயணங்கள் என்ற வகையில் கடலாதெனிய, எம்பெக்கே, லங்காதிலக, ரணவன ரஜமகா விகாரை என்பவற்றைத் தரிசித்து வழிபடுதல்.

- சிங்கள புதுவருட பண்டிகைக் கொண்டாட்டம், அதன் நிமித்தம் பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், வெசாக் பண்டிகையை முன்னிட்டு பக்தி கீதம் இசைத்தலும் சமய நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தலும், பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு போட்டியில் பரிசு பெறல்.

- கரப்பந்து, மேசைப்பந்து, கெரம், டாம், சதுரங்க ஆட்டம், பூப்பந்து சுற்றுப் போட்டிகளை ஒழுங்குசெய்தல்.

- மாதாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் பணியாள்தொகுதி மற்றும் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புக்களை ஒழுங்குசெய்தல்.

- 5*S* நிகழ்ச்சித்திட்டத்தை வருடம் பூராவும் அமுல்படுத்துதல்.

- மாகாண போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமும், வேறு போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களும்.

- பல்வேறு சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் - பற்சிகிச்சை முகாம்கள், டெங்குநோய் ஒழிப்பு நோக்கிலான சிரமதானங்கள், மனோ வைத்திய நிபுணர் திருமதி அரம்பேபொல அவர்களின் மன நலம் பற்றிய சொற்பொழிவுகள் என்பவற்றை ஒழுங்குசெய்தல்.

- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்படும் விசேட செயற்பாடுகள்.

- வாழ்க்கைத் தொழிற்பயிற்சி என்ற வகையில் கடிதவுறை தயாரித்தல், ஓர்கிட் மலர்ச்செய்கை சார்ந்த செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள், மோட்டார் தொழில்நுட்பப் பயிற்சி.

- ‘அபின’ நிகழ்ச்சித்திட்டம்.
- ஆண்டிறுதி நத்தார் பண்டிகை, டிசம்பர் 31 இரவுக் களியாட்ட நிகழ்ச்சிகள் என்பன அமுல்படுத்தப்பட்டன.

- தாதியர் பயிற்சி.

- வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.

- யோகா நிகழ்ச்சி.



*நடன பாடநெறி – கண்டி நிலையம்*

**தென் மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - காலி**

இந்த நிலையத்தின் மூலமும் ஒரே தடவையில் 40 சேவைபெறுநர்களுக்கு சேவைகளை வழங்க முடியும். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளைப் பெறக்கூடிய ஒரு பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, 233 சேவைபெறுநர்கள் ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கும் 143 சேவைபெறுநர்கள் வதிவிட சிகிச்சை பெறுவதற்கும் இங்கு அனுமதிக்கப்பட்டனர். நடப்பு ஆண்டில் இந்த நிலையத்தின் மூலமும் வதிவிட சேவைபெறுநர்களுக்கு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன:

- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பற்சிகிச்சை முகாம்கள், உடல் மற்றும் உள நலம் பற்றிய சொற்பொழிவுகள், நிலையத்தில் சிரமதானப் பணிகள்.
- மாதாந்தம் “சில்” விரதம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சி, வெசாக் மற்றும் பொசொன் பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகள்.
- பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு அமைக்கும் போட்டியில் பரிசுபெறல், பணியாள்தொகுதியினருடனான மாதாந்த மற்றும் வாராந்த சந்திப்புகளையும் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புகளையும் ஒழுங்குசெய்தல்.
- விவசாய நிகழ்ச்சித்திட்டங்கள், ஓர்கிட் மலர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, ரோஜா மலர்ச்செய்கை ஆகியன பற்றி லபுதுவ விவசாயக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்குகளும் செயற்பாடுகளும், பல்வேறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல், மோட்டார் வாகன தொழில்நுட்பம், இலத்திரனியல்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள், பணியாள்தொகுதியினருடனான வாராந்த மற்றும் மாதாந்த சந்திப்புகள்.
- குடும்ப சந்திப்புகளும் பிற்பாதுகாப்பு சந்திப்புகளும்.
- யோகா நிகழ்ச்சிகள்.
- உலக சிறுவர் தின விசேட நிகழ்ச்சிகள்.
- 5S நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- மாகாண போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் அதனோடிணைந்த போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குசெய்தல்.
- புதுவருட, வெசாக், பொசொன், நத்தார் பண்டிகைகளை முன்னிட்ட கொண்டாட்டங்களும் அவை சார்ந்த சமய செயற்பாடுகளும்.
- கரப்பந்தாட்டம், கிரிக்கற், கபடி, தாம், சதுரங்க ஆட்டம் போன்ற விளையாட்டுக்கள்.
- உடல் விருத்திக்கான அப்பியாச நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ஆண்டிறுதி வர்ண இரவு நிகழ்ச்சிகள்.



உடல் விருத்திக்கான அப்பியாச நிகழ்ச்சித்திட்டங்கள் - காலி நிலையம்



கால் துடைப்பம் தயாரித்தல் - காலி நிலையம்

**நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - நிட்டம்புவ**

இந்த நிலையத்தில் 60 சேவைபெறுநர்களுக்கு ஒருதடவையில் சேவைகளை வழங்க முடியும். கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளை வழங்கும் பிரிவொன்றும் இங்குள்ளது. 2015 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்ட சேவைபெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 558 ஆகும். அவர்களில் 411 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சையளிக்கப்பட்டது.

**நவதிகன்த நிலையத்தில் நடப்பு ஆண்டில் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:**

- மாதாந்த 'சில்' விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- சிங்கள புதுவருடப் பண்டிகைக் கொண்டாட்டம்.
- வெசாக், பொசொன், நத்தார் பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகள்.
- டெங்குநோய் ஒழிப்பு சார்ந்த செயற்பாடுகளும் சிரமதானங்களும்.
- போதி பூஜை வழிபாட்டு நிகழ்ச்சிகள்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள்.
- சிகிச்சையளிப்புக்கான வாராந்த சந்திப்புகள்.
- பணியாள்தொகுதியினருக்கான மாதாந்த கூட்ட அமர்வுகள்.
- குடும்பத்தவருடான ஒன்றுகூடல்.
- பெற்றோருடனான ஒன்றுகூடல்.
- 5S நிகழ்ச்சித்திட்டம்.
- உடல், உள நலம் பற்றிய விரிவுரைகள்.
- விவாதப் போட்டிகள்.
- வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- காசநோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் / STD, HIV பற்றி விழிப்புணர்வுக்கான விரிவுரைகள்.
- உடல் விருத்தி அப்பியாச நிகழ்ச்சித்திட்டங்கள்.
- யோகா நிகழ்ச்சித்திட்டம்.



*யோகா நிகழ்ச்சித்திட்டம் - நவதிகன்த நிலையம்*



*கரப்பாந்தாட்டம் - நவதிகன்த நிலையம்*

**சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - பிலியந்தலை**

போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குள் செலுத்திக்கொள்ளும் சேவைபெறுநர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்நிலையம் பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான 72 சேவைபெறுநர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 45 பேருக்கு வதிவிட வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்தின்மூலம் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு வைத்திய சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன.

நடப்பாண்டினுள் இந்நிலையத்தின்மூலம் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன:

- தனிநபர், குழுநிலை, குடும்ப ஆலோசனை அமர்வுகள்.
- உளவியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- குருதிப் பரிசோதனைகளையும் டர்டன்ஸ் வைத்தியசாலை ஊடாக சிகிச்சையளிப்பு சேவைகளையும் வழங்குதல்.
- சமய ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- சிரமதானங்கள்.
- சிங்கள புதுவருடக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்.
- விவசாய நடவடிக்கைகள்.

**பிற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2015**

2015 ஆம் ஆண்டில் அந்தந்த நிலையங்கள் மூலம் செய்யப்பட்ட பிற்பாதுகாப்பு தகவல்கள் கீழ் தரப்பட்டுள்ளன. சேவைபெறுநர்களை நிலையத்திற்கு வரவழைத்துக்கொள்ளல், தொலைபேசி வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், வெளிநிலைச் சேவைகள் போன்ற முறைகள் இங்கு கையாளப்பட்டன.

| நிலையம் | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தலங்கம | பிற் பாதுகாப்பு | 167 | 41 | 149 | 119 | 143 | 107 | 123 | 99 | - | 129 | 78 | 90 |
| | NR | 102 | 30 | 79 | 69 | 79 | 52 | 76 | 64 | - | 77 | 49 | - |
| | | | | | | | | | | | | | |
| கண்டி | பிற்பாதுகாப்பு | 57 | 32 | 15 | 51 | 30 | 32 | 21 | 19 | 22 | 60 | 29 | 35 |
| | NR | 44 | 22 | 12 | 40 | 09 | 23 | 14 | 12 | 14 | 40 | 16 | 16 |
| | | | | | | | | | | | | | |
| காலி | பிற்பாதுகாப்பு | 58 | 60 | 129 | 49 | 84 | 63 | 96 | 62 | 35 | 59 | 39 | 63 |
| | NR | 42 | 48 | 74 | 36 | 64 | 42 | 56 | 43 | 30 | 35 | 26 | 27 |
| | | | | | | | | | | | | | |
| நவதிகன்த | பிற்பாதுகாப்பு | 43 | 49 | 44 | 47 | 55 | 86 | 69 | 64 | 67 | 60 | 56 | 53 |
| | NR | 42 | 47 | 43 | 46 | 52 | 81 | 66 | 62 | 65 | 57 | 52 | 49 |
| | | | | | | | | | | | | | |
| பிலியந்தல | பிற்பாதுகாப்பு | - | - | - | 09 | 10 | 04 | 04 | 06 | 04 | 12 | 30 | 26 |
| | NR | - | - | - | 09 | - | - | - | 06 | 05 | 12 | 24 | 25 |
| | | | | | | | | | | | | | |

***NR – போதையூட்டும் ஔடதங்கள் பாவனையிலிருந்து விடுபட்டவர்கள்.***

மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி இவ்வாண்டில் இச்சிகிச்சையளிப்புப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்ட மொத்த பிற்பாதுகாப்புத் தகவல்கள் - எமது சிகிச்சையளிப்பு நிலையங்கள் மூலம் புனர்வாழ்வளிக்கப்படும் மொத்த புனர்வாழ்வுபெறுநர்களின் எண்ணிக்கை 3232 ஆகும்.

பிற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சேவைபெறுநர்களில் தலங்கம நிலையத்தில் 677 சேவைபெறுநர்களும் கண்டி நிலையத்திலிருந்து 262 பேரும் காலி நிலையத்திலிருந்து 523 பேரும், நவதிகன்த நிலையத்திலிருந்து 622 சேவைபெறுநர்களும் பிலியந்தல நிலையத்திலிருந்து 81 சேவைபெறுநர்களும் ஆண்டு இறுதியளவில் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிப்பதிலிருந்து விடுபட்டிருப்பதாக அறிய முடிந்தது. அந்த அடிப்படையில் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்து மாத்திரம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் 2,025 பேர் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிப்பதிலிருந்து விடுபட்டுள்ளனர்.

**கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

கந்தகாடு புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு எமது சபையினால் சிறப்பான சேவையொன்று நடப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் சேவைகளில் ஈடுபடும் ஆலோசனை உதவியாளர் உத்தியோகத்தர்களும் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் நீண்டகால பயிற்சி பெற்ற, நாளாந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஆலோசனை உதவியாளர்கள் மூவரிடமிருந்தும் முழுநே அடிப்படையில் சேவை பெறப்பட்டது.

## 8.4 பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள் (2015)

**சிகிச்சையளிப்பும் புலனாய்வும்:**

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையச் சட்டத்தின் பிரகாரம் நிலையங்களின் பண்புத்தரம் பற்றிய புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை வழங்கும் அரசாங்கம்சாரா அமைப்பாண்மைகள்.
2. அரசாங்க நிறுவனங்களும் மதியுரை நிலையங்களும்.
3. சிறைச்சாலை போதையூட்டும் ஔடத ஆலோசனை நிலையங்களும் திறந்தவெளி சிறை முகாம்களும்.
4. பதவிநிலை வெளிநிலைச் சேவைகள் பிரிவும் போதையூட்டும் ஔடத தகவல் கல்விப் பிரிவும்.
5. கந்தகாடு புனர்வாழ்வளிப்பு நிலையம்.

**அரசாங்கம்சாரா அமைப்பாண்மைகள்**

2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை வழங்கும் அரசாங்கம் சாரா அமைப்பாண்மைகள் 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் உரிய தரநியமங்களின்படி இயங்குகின்றனவா என்பது குறித்து புலனாய்வு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் புலனாய்வுசெய்யப்பட்ட அரசாங்கம் சாராத தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள் பின்வருமாறு:

இங்கு இந்த நிலையங்களின் சிகிச்சையளிப்பு முறைமை, நிலையத்தின் தூய்மை, சேவைபெறுநர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், பணியமர்வுசெய்யப்பட்ட பணியாள்தொகுதியினர் ஆகியன குறித்து அவதானிக்கப்பட்டது.

1. நிசங்சல சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கட்டான.
2. அந்துரின் ஆலோக்கய (‘இருளிலிருந்து வெளிச்சத்திற்கு’) - புத்பிட்டிய.

3. Al Ano Club – Dr. Cyril Vass Centre - வென்னப்புவ.
4. சமாதி நிவஹன ('சமாதி இல்லம்') - ஹாலிஎல.
5. மெல் மெதுர (மெல் அகம்) - கொழும்பு 07.
6. பெதெஸ்தா புனா்ஜீவ நிலையம் - கொச்சிக்கடை.
7. கருணாவே நிவஸ ('கருணையின் இல்லம்') - ஹொரண.
8. யௌவன கித்துமக - புவக்பிட்டிய.
9. நேத்ரா - நுகேகொட.
10. நவஜீவன போதைஒழிப்பு குரல் சேவை - காலி.
11. மிதும - வத்தளை.
12. மித்ர ('நட்பு') - திருகோணமலை.
13. பெத்தும ('பிரார்த்தனை') - பொல்கஸ்ஓவிற்ற.
14. பொரொந்து தேசய - கொழும்பு 14.
15. யௌவன சஹன சேவய ('வாலிபர் நிவாரண சேவை') - கந்தானை.

மேற்கண்ட நிலையங்களில்,

1. நிசங்சல
2. அந்துரின் ஆலோக்கய
3. மெல் மெதுர
4. கருணாவே நிவஸ
5. மிதும

உள்ளிட்ட 10 நிலையங்களுக்கு 2015 ஆம் ஆண்டில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம், மித்துரு மித்துரோ, நிதஹஸ, செனெஹஸ, பலய நிவஸ ஆகிய 05 நிலையங்களும் அதில் அடங்கும்.

குறைந்த தர நியமங்களைப் பூர்த்திசெய்துள்ள ஏனைய நிலையங்களுக்கு எதிர்காலத்தில் உரிமம் வழங்கப்படவுள்ளது.

**<u>அரசாங்க நிறுவனங்களும் ஆலோசனை நிலையங்களும்</u>**

கடந்த ஆண்டில் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்குச் சொந்தமான சிகிச்சையளிப்பு நிலையங்களான காலி-உனவட்டுன, கொழும்பு-தலங்கம, நிட்டம்புவ-நவதிகன்த, கண்டி-ஹுந்தெஸ்ஸ என்பவற்றுடன் போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உட்செலுத்திக் கொள்பவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையமும் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

புலனாய்வுகளின்போது அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை சரிசெய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சியபத்த மற்றும் மகாபோதி ஆலோசனை நிலையங்களும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் ஆலோசனை நிலையங்களும் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**<u>சிறைச்சாலைகளும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களும்</u>**

தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையும் சிறைச்சாலைத் திணைக்களமும் இணைந்து 2015 ஆம் ஆண்டில் பின்வரும் நிலையங்களில் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தின.

1. வீரவில திறந்தவெளி சிறை முகாம்.
2. பல்லேகெலே.
3. களுத்துறை சிறைச்சாலை.
4. அநுராதபுரம்.
5. தல்தென இளந்தவறாளிகளுக்கான சீர்திருத்த நிலையம்.
6. பல்லன்சேன.
7. கந்தவத்த.
8. மித்திரகல.
9. காலி.
10. பூஸ்ஸ.
11. மஹர.
12. கந்தகாடு.

கந்தகாடு, வீரவில, பல்லன்சேன, பல்லேகெலே திறந்தவெளி சிறை முகாம்களிலும் மேற்சொன்ன ஏனைய சிறைச்சாலைகளிலும் போதையூட்டும் ஔடதங்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக் கூறுகளிலும் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சிறைச்சாலைகளில் வீரவில, தல்தென திறந்தவெளி சிறை முகாம்களுக்கு சபையின் ஊழியர்கள் இருவர் முழுநேரம் ஈடுபடுத்தி ஆலோசனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஏனைய சிறைச்சாலைகளில் (காலி, மித்திரிகல, கந்தவத்த, தல்தென, அநுராதபுரம்) வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.



**சிறைச்சாலைகளினுள் இடம்பெறும் கல்வி நடவடிக்கைகள்**

சிறைச்சாலை சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளை மிகவும் பண்புத்தரத்துடன் முன்னெடுத்துச்செல்வதற்காக கைதிகள் மத நடவடிக்கைகளின்பால் ஈடுபடுத்தப்பட்டதுடன், ஆன்மிக விருத்திக்கு தூண்டுதலளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.

தற்போது சிறைச்சாலைகளில் இப்பிரிவில் கைதிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

2015 ஆம் ஆண்டில் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தல்தென சிறைச்சாலையில் அமைதியான பாத யாத்திரையொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அதேபோல் வைத்திய சிகிச்சை முகாமொன்றும் போயா தினத்தை முன்னிட்டு தர்ம உபந்நியாச நிகழ்ச்சி, முதியோர் இல்லத்திற்கு தானம் வழங்கும் நிகழ்ச்சி முதலான பல்வேறு நடவடிக்கைகள் கைதிகளின் பங்கேற்புடன் இடம்பெற்றன.

## 8.5 வெளிநிலைச் சேவைகள்





- Anuradhapura
- Kegalle
- Kurunegala
- Kandy
- Matale
- Nuwara Eliya
- Colombo
- Galle
- Matara
- Kaluthara
- Puttalam
- Rathnapura
- Hambanthota
- Jaffna


வெளிநிலைச் சேவைகள் கூறு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் பொதுமக்களின் அறிவை விருத்திசெய்தல், கேள்வியையும் வழங்கலையும் குறைத்தல் என்றவாறு இரண்டு தடுப்புப் பொறிமுறைகள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றோம். தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு, போதையூட்டும் ஔடத பாவனையாளர்களுக்கு அவற்றுக்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து விடுபடுவதற்காக போராடுவதற்காக நாம் அவர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றோம். எமது வெளிநிலைச் சேவைகள் கூறு பல மாகாணங்களில் மிகவும் பரந்தளவில் தொழிற்படுவதுடன், 2015 ஆம் ஆண்டில் அதனை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வியாபிக்க முடிந்தது.


**போதையூட்டும் ஔடத பாவனையாளர்களை புதிதாக அடையாளம் காணல் - 2015**


| மாகாணம் | ஹெரொயின் | கஞ்சா | அற்கஹோல் | பிற |
|---|---|---|---|---|
| மேல் | 1559 | 431 | 637 | 36 |
| மத்திய | 189 | 236 | 422 | 8 |
| வடமத்திய | 527 | 20 | 140 | 6 |
| வடமேல் | 233 | 210 | 212 | 8 |
| தென் | 116 | 129 | 136 | 8 |
| வட | 79 | 109 | 239 | 13 |
| சப்ரகமுவ | 151 | 108 | 496 | - |
| ஊவா | 171 | 03 | 185 | - |
| கிழக்கு | 11 | 09 | 04 | - |
| **மொத்தம்** | **3036** | **1147** | **2471** | **79** |

வெளிநிலைச்சேவை உத்தியோகத்தர்களினால் 6,733 போதையூட்டும் ஔடத பாவனையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 3,036 பேர் ஹெரொயின் பாவனையாளர்களாவர்.


ஹெரொயின்
Central
North central
North Western
Southern
Northern
Sabaragamuwa
Uwa
Eastern
1559
189
527
233
116
79
151
171
11


கஞ்சா
Western
Central
North central
North Western
Southern
Northern
Sabaragamuwa
Uwa
Eastern
431
236
20
210
129
109
108
3
9


அற்கஹோல்
Western
Central
North central
North Western
Southern
Northern
Sabaragamuwa
Uwa
Eastern
637
422
140
212
136
239
496
185
4


பிற
Western
Central
North central
North Western
Southern
Northern
Sabaragamuwa
Uwa
Eastern
36
8
6
8
8
13
0
0
0

| மாகாணம் | சேவை வழங்கல் | ஆற்றுப்படுத்தல் | பாவனையிலிருந்து விடுபடல் |
|---|---|---|---|
| மேல் | 7929 | 531 | 904 |
| மத்திய | 487 | 83 | 305 |
| வடமத்திய | 1048 | 7 | 441 |
| வடமேல் | 1177 | 128 | 229 |
| தென் | 914 | 13 | 152 |
| வட | 1469 | - | 81 |
| சப்ரகமுவ | 1696 | - | 81 |
| ஊவா | 1084 | 45 | 21 |
| கிழக்கு | 166 | 6 | 15 |
| **மொத்தம்** | **15679** | **861** | **2423** |

**பிற்பாதுகாப்பு**

| மாகாணம் | சனசமூக | நிலைய குடும்பநல ஆலோசனை | நிலையம் | சிறைச்சாலை |
|---|---|---|---|---|
| மேல் | 1034 | 699 | 968 | 359 |
| மத்திய | 238 | 36 | 90 | 9 |
| வடமத்திய | 145 | 104 | 97 | 70 |
| வடமேல் | 204 | 48 | 72 | 62 |
| தென் | 211 | 10 | 142 | 23 |
| வட | 57 | 15 | 3 | 0.0 |
| சப்ரகமுவ | 219 | 2 | 9 | 6 |
| ஊவா | 78 | 0 | 2 | 2 |
| கிழக்கு | 14 | - | 1 | - |
| **மொத்தம்** | **2200** | **914** | **1384** | **531** |

**விழிப்பூட்டல்களும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும்**

கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரசம ற்றும் அரசசார்பற்ற 831263 பேர் எமது வெளிநிலைச் சேவைகள் கூறினால் நடாத்தப்பட்ட 10,038 நிகழ்ச்சித்திட்டங்களில் போதனைகளை நடாத்தினர்.

அது பற்றிய விபரம் பின்வருமாறு:

| இல. | நிகழ்ச்சித்திட்டம் / இலக்குக் குழு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | பாடசாலை ஆசிரியர்கள் | 09 | 360 |
| 02 | மாணாக்கர் | 611 | 84,483 |
| 03 | SQS மாணாக்கர் | 25 | 300 |
| 04 | அறநெறிப் பாடசாலைகள் | 142 | 7,847 |
| 05 | உபகார வகுப்புகள் | 387 | 6,200 |
| 06 | மதத் தலைவர்கள் | 04 | 247 |
| 07 | அரச மற்றும் அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் | 5,959 | 26,979 |
| 08 | சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்கள் | 15 | 910 |
| 09 | சாரதிகள் | 225 | 13,345 |
| 10 | சமூக அமைப்புகள் | 669 | 24,840 |
| 11 | ஆபத்துக் குழுக்கள் | 1,702 | 50,967 |
| 12 | மருந்து விற்பனைநிலைய (மருந்தக) ஊழியர்கள் | 563 | 563 |
| 13 | இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் | 09 | 100,000 |
| 14 | ஊர்வலங்கள் / நடை பவனிகள் | 10 | 125,000 |
| 15 | நடமாடும் சேவைகள் | 44 | 77,228 |
| 16 | கண்காட்சிகள் | 10 | 72,000 |
| | **மொத்தம்** | **10,048** | **8,31,263** |

**அரசாங்க உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு பற்றிய விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம், போதையற்ற இருப்பிற்கும் அரசாங்க ஊழியர்களின் பங்கேற்பு அவசியப்படும்போது சபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் அரசாங்க சேவையில் புதியதொரு பரம்பரையாக வலுவூட்டப்பட்டுள்ளது.



**அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்**

2015 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விசேட போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. இவ்வாண்டிலும் செத் சரண, லயன்ஸ் கழகம், ரொட்டரி கழகம், வெளிநிலைச் சேவைகள் பிரிவு ஆகியவற்றினால் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் சமுதாய அடிப்படையிலான போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.



**மதியுரை நிகழ்ச்சித்திட்டங்கள்**

எமது கூறினால் 02 மதியுரை நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| மகாபோதி மதியுரை நிலையம், மருதானை | - | ஹெரொயின், கஞ்சா, அற்கஹோல் பாவனையாளர்கள் 1651 பேருக்கும் |
| சியபத்த மதியுரை நிலையம், கொழும்பு | - | ஹெரொயின், கஞ்சா, அற்கஹோல் பாவனையாளர்கள் 797 பேருக்கும் மதியுரை வழங்கப்பட்டது. |

**போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு பற்றிய பாடசாலை மாணாக்கருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

மேலதிக போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலைகளை இலக்காகக்கொண்ட குழுக்களுக்கு நடாத்தப்பட்டன. நமது எதிர்கால சந்ததியினா் போதைக்கு முற்றுப்புள்ளி வைப்பதன்பால் வலுவூட்டுவதே இதன் நோக்கமாகும். இதன்கீழ் 611 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அவற்றின்மூலம் 84,483 மாணாக்கா் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்த முடிந்தது.





**போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக்கான விசேட இணைப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் பாடசாலைகள், மருந்தகங்கள், பொதுமக்களுக்கான புகையிலை, போதையூட்டும் ஔடதங்கள் பாவனை, அவற்றுக்கு அடிமைப்படல் பற்றி விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. கல்வி அமைச்சு, இலங்கை பொலிஸ் திணைக்களம், சுகாதார அமைச்சு, தேசிய மாணவப் பயிலிளவல், சா்தா தொலைக்காட்சி அலைவரிசை உள்ளிட்ட பல நிறுவனங்களும் இதில் இணைந்துகொண்டன.



**மேல்மாகாண பாடசாலை போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் (மிகவும் ஆபத்தான பகுதி)**

எமது வெளிநிலைச் சேவைகள் கூறினால் மிகவும் ஆபத்தான வலயம் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. மேல் மாகாண போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. கொழும்புக்கு சுற்றயல் பகுதிகளில் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக்கான 02 நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து 706 மாணவ மாணவிகள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தப்பட்டது. நீர்கொழும்பில் இரண்டு தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 350 மாணவ மாணவிகள் மத்தியில் விழிப்பூட்டல் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல், ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் கொழும்பு, கொலொன்னாவை, வெல்லம்பிட்டிய, கல்கிசை, மொரட்டுவை, பாணந்துறை, மஹரகமை, நுகேகொடை, பிலியந்தலை, ஹொரணை, கஹதுடுவ, பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளில் 100 ஆசிரியர்களுக்கும், நீர்கொழும்பு, கட்டானை, ஜாஎல ஆகிய பகுதிகளில் 80 ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பண்புத்தர மாணவர் சங்கங்கள்**

வெளிநிலைச் சேவைகள் கூறினால் இலங்கையின் 15 பாடசாலைகளை மையமாகக்கொண்டு 15 பண்புத்தர சங்கங்கள் 2015 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. அவற்றின் உறுப்பினர்களின் உளப்பாங்குகள், நடத்தைகள் முதலிய பண்புகளையும் அவர்களின் ஆற்றல்களையும் விருத்திசெய்ய எம்மால் முடிந்தது.



**போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு பற்றிய அறநெறிப் பாடசாலைகளுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

அறநெறிப் பாடசாலைகளுக்கான பல நிகழ்ச்சித்திட்டங்களும் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன. அவர்களின் நடத்தைகள், உளப்பாங்குகள், அறிவு விருத்தி ஆகியன நோக்கிலான 142 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் 7,847 மாணவ மாணவிகளும் அறநெறிப் பாடசாலை போதனாசிரியர்களும் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்த முடிந்தது.



**சமுதாய அடிப்படையிலான மதியுரை**

எமது மகாபோதி, சியபத்த ஆகிய மதியுரை நிலையங்கள் முறையே மருதானை, பொரளை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. நாம் 09 மாகாணங்களிலும் மதியுரை நிகழ்ச்சித்திட்டங்களை

ஒழுங்குசெய்தோம். அது எமது பிரிவின் மிக முக்கிய ஒரு பணியாகும். எமது பிரதிநிதிகள் வீட்டுக்கு வீடு சென்று மாதாந்தம் அங்கு வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடன் சுமுகமாக உரையாடி அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்கு மிகச் சிறந்த துணையாக நின்றனர்.





**சாரதிகளின் அறிவை விருத்திசெய்தல்**

இதன் மற்றுமொரு நடவடிக்கையாக முச்சக்கர வண்டிச் சாரதிகள், பாடசாலை வேன்வண்டிச் சாரதிகள், பஸ்வண்டிச் சாரதிகள் ஆகியோர் மத்தியில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. மேல் மாகாணத்தில் 225 மகாண நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டதுடன், கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் ஏமார் 13,345 சாரதிகளின் அறிவை விருத்திசெய்ய எம்மால் முடிந்தது.



**மகளிர் தினக் கொண்டாட்டம் (2015.03.07 - தெஹிவளை)**

எமது மகளிர் பிரிவினால் 2015.03.07 ஆந் திகதி தெஹிவளையில் மகளிர் தினக் கொண்டாட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. போதைக்கு முற்றுப்புள்ளி என்ற தொனிப்பொருளில் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. 550 பெண்களும், எமது பணியாள்தொகுதி உறுப்பினர்களும், ஊடகவியலாளர்களும், அரசியல்வாதிகள் உட்பட பெருந்திரளானவர்களும் இதில் கலந்துகொண்டனர்.



**'சிரச' தொலைக்காட்சி அலைவரிசையின் 'கெயின் கெட' (வீட்டுக்கு வீடு) போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்**

எமது பிரிவினால் 'சிரச' தொலைக்காட்சி அலைவரியுடன் இணைந்து 'கெயின் கெட' எனும் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் காலி, மாத்தறை, கண்டி, புத்தளம், பொலனறுவை, யாழ்ப்பாணம்,

திருகோணமலை, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் ஒழுங்குசெய்யப்பட்டன. 'சிரச' தொலைக்காட்சி உத்தியோகத்தர்களும் இந்நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டனர்.

**வாக்காளர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தல்**

எமது வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் தேர்தல் காலத்தில் வேட்பாளர்களைத் தெரிவு செய்துகொள்வதில் பொதுமக்களுக்கு உதவுமுகமாக பாரியதோர் அர்ப்பணிப்பு மேற்கொள்ளப்பட்டது. எம்மால் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவற்றையும் நடாத்துவதன்மூலமும் இலத்திரனியல் ஊடகங்கள் (Sirasa / Derana) வாயிலாக பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டல் ஏற்படுத்தப்பட்டது.

**போதையிலிருந்து விடுதலைபெற்ற ஒரு வலயத்தை தாபித்தல்**

வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் போதையிலிருந்து விடுதலைபெற்ற கிராமங்களை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாம் இவ்வாண்டில் சமூக சேவைகள் திணைக்களத்தின் போதையிலிருந்து விடுதலைபெற்ற கிராமம் என்ற கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினோம். நாம் இவ்வாண்டில் 40 சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய 50 உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி அளித்தோம். அவர்களின் அறிவை விருத்திசெய்வதற்கு இவை முன்னோடியாக அமைந்தன. எம்மால் கொழும்பு ரொட்டரி கழகம் போதையற்ற ஒரு நாட்டை தாபிக்க வலுவூட்டப்பட்டது.

**மதத் தலைவர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தல்**

எம்மால் மதத் தலைவர்களுக்கும் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அவ்வாறான ஐந்து (5) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பௌத்த, இஸ்லாம், இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்கள் 247 பேர் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்த எம்மால் முடிந்தது. அவர்கள் சமூக ஊழியர்கள் என்ற வகையில் போதையூட்டும் ஔடதங்களை ஒழித்துக்கட்டுவதற்கு நாம் உதவுகின்றோம்.

**அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விழிப்பூட்டலை ஏற்படுத்தல்**

2015 ஆம் ஆண்டில் நாம் அச்சு ஊடகங்கள் வாயிலாகவும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தத் துணிந்தோம். தேசிய தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி, TNL, தினமின, சிலுமின, Sunday Observer, Daily Mirror முதலிய பல்வேறு ஊடகங்கள் வாயிலாக பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்த முடிந்தது. சல்மல் யாய, ஆயுபோவன், தம்புளு ஆகிய பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பொதுமக்கள் மத்தியில் சிறந்த விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்த எம்மால் முடிந்தது.

**நடை ஊர்வலங்கள்**

தேசிய தொலைக்காட்சி சேவையினால் ஒழுங்குசெய்யப்பட்ட "உயிர் போல் பிள்ளைகளைக் காப்போம்" என்ற தொனிப்பொருளிலான சிறுவர் பாதுகாப்ப பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கப்பட்டது. அதேபோல், வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட நடை ஊர்வலத்திற்கு கொழும்பு றோயல் கல்லூரியினால் ஒழுங்குசெய்யப்பட்ட சிறுவர் பாதுகாப்பு பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திலும் நாம் பங்கேற்றோம்.



**MADD நடை பவனி - 2015**

306 சி மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கொழும்பு-05 இலிருந்து காலி முகத்திடல் வரையான போதைக்கு எதிரான நடை பவனியில் நாம் பங்கேற்றோம்.



**கண்காட்சிகள்**

வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கு கண்காட்சிகள் பலவற்றை ஒழுங்குசெய்ய 2015 ஆம் ஆண்டில் நாம் துணிந்தோம். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், சுதந்திர சதுக்கம், தெஹிவளை, மொரட்டுவை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற 07 கண்காட்சிகளில் பங்கேற்றதன் மூலம் 72,000 பேர் அளவான மக்களின் அறிவை விருத்திசெய்ய எம்மால் முடிந்தது.

**விசேட நிகழ்வு - 2015**

மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினால் பிரபல கிரிக்கட் ஆட்ட வீரர் குமார் சங்கக்கார அவர்கள் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் தூதுவராக 2015.08.19 ஆந் திகதி ஜனாதிபதி வாசஸ்தலத்தில் நியமிக்கப்பட்டார். எமது வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் இந்நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது.



**2015.06.26 ஆந் திகதி அலரி மாளிகையில் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் எதிர்ப்பு தின நிகழ்ச்சித்திட்டம்**

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்த 5800 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2015.06.26 ஆந் திகதி அலரி மாளிகையில் சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் எதிர்ப்பு தின நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.





**‘போதையிலிருந்து விடுதலைபெற்ற உயிரோட்டமிகு ஒரு நாடு’ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை - இந்திய கிரிக்கட் ஆட்டம்)**

2015 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய கிரிக்கட் ஆட்டத்திற்கு இணையாக போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று எம்மால் ஒழுங்குசெய்யப்பட்டது.

**ஜீவன யாத்ரா - 2015**

எம்மால் ஊவ பரணகம கல்வி வலயத்தில் 2015 நவம்பர் மாதத்தில் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. எம்மால் 02 ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலை மாணாக்கர் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் கெப்பெடிபொல அறநெறிப் பாடசாலையில் மாணாக்கர் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டமும் ஒழுங்குசெய்யப்பட்டது.



| இல. | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பதாகைகள்<br>கிரிக்கட் ஆட்டம்: இலங்கை - இந்தியா<br>பிள்ளைகளை உயிர்போல் காப்போம்<br>நுவரெலியா வசந்தம்<br>போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - மேல் மாகாணம்<br>சாரதிகளை அறிவுறுத்துவோம்<br>மாகாண பதாகை | 10<br>02<br>02<br>01<br>01<br>01<br>17 |
| 02 | அச்சிடல் - வெளி<br>போதையிலிருந்து விடுதலை – உயிர்ப்புமிகு தேசம்<br>சிங்கள<br>தமிழ்<br>போதையிலிருந்து விடுதலைபெற்ற உயிர்ப்புமிகு ஒரு நாடு இணைவோம்<br>நாம் - தகவல் ஏடு<br>தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை – சிங்கள, தமிழ் | 25000<br>1000000<br>25000<br>15000<br>25000 1900000<br>3000 |

| | | |
|---|---|---|
| 03<br><br><br><br><br><br>04 | அச்சில் – டுப்ளோ<br>யுவதி<br>போதையிலிருந்து விடுதலைபெற்ற உயிர்ப்புமிகு ஒரு நாடு இணைவோம்<br>நாம் - தகவல் ஏடு<br>உத்தியோகத்தர்களுக்காக<br>பாடசாலை மாணாக்கர்களே<br><br>ஸ்ரிக்கர்<br>முச்சக்கரவண்டி 1<br>முச்சக்கரவண்டி 2 | 35000<br><br>4500<br>5000 47,500<br>2,37500<br>0310,000 |
| 05 | இலத்திரனியல் ஊடகங்கள் | 02 |
| | | |

## 8.6 தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடம்

**பொழிப்பு**

கடந்த வருடத்திற்கு இணையாக தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடம் (NNL) மூலம் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாட்டை வினைத்திறனான முறையில் முன்னெடுத்துச்செல்வதற்கு அதன் விஞ்ஞான சேவைகளையும் பொறுப்புக்களையும் மிகவும் நம்பகரமான விதத்தில் நிறைவேற்றியுள்ளது. ஐக்கிய நாடுகளின் போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் (UNODC) மூலம் ஆய்வுகூட தரப்படுத்தலில் சர்வதேச மட்டத்திலான பகுப்பாய்வுகளின் வெற்றிநிலையை அளவிடுவதற்காக முன்னெடுத்துச் செல்லப்படும் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்ந்தும் பங்குபற்றி பகுப்பாய்வு ஆற்றல்கள் சர்வதேச தரத்துடன் உயர்ந்த மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் முன்வைக்கப்படும் பதார்த்தங்களின் பகுப்பாய்வு மற்றும் பெறுபேறுகளை தேசிய நிறுவனங்களுடனும் சர்வதேச முகவராண்மைகளுடனும் பரிமாறிக்கொண்டு குற்றப் புலனாய்வுகள், போதையூட்டும் ஔடதங்களின் பரம்பல் பற்றிய பகுப்பாய்வு, உபாயமுறைப் பகுப்பாய்வு, கொள்கை வகுப்பு, சட்டவாக்கம் என்பவற்றுடன் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை வெற்றி பெறச்செய்வதற்காக அவை பயன்படுத்தப்பட்டன. மேலும், தனி மனிதர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அவசியப்படுகின்ற "போதையூட்டும் ஔடதங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை" என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் சிறுநீர்ப் பரிசோதனைமூலம் உறுதிசெய்துகொண்ட பின் விநியோகிக்கப்பட்டன.

போதையூட்டும் ஔடதங்களின் துஷ்பிரயோகமும் அவற்றை அடையாளம் காண்பதும் சம்பந்தமாக விஞ்ஞானரீதியான தோற்றப்பாங்குகள் வழியே சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்கள்/ அத்துடன் ஏனைய அவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் சார்பாக அவசியமான விழிப்பூட்டல் செயலமர்வுகள்/ அத்துடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இவ்வுத்தியோகத்தர்களின் அறிவையும் ஆற்றல்களையும் முன்னேற்றுவதன்மூலம், போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காண்பதற்கான ஆற்றல்களை முன்னேற்றுவதன்மூலம், போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் முன்னோடி இரசாயனங்களின் தோற்றுவாயை அடையாளம்காண்பதன் மூலம் இறக்குமதி, ஏற்றுமதி, விநியோகம் சம்பந்தமாக மிகவும் வினைத்திறனான புலனாய்வு ஆற்றல்களைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடம் விளையாட்டுத்துறையில் உபயோகிக்கப்படும் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல்களை மேம்படுத்துவதன் ஊடாக இன்றளவில் இலங்கையில் விளையாட்டுத்துறை எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினையை நிவர்த்திசெய்வதற்கான பகுப்பாய்வு அறிக்கைகளைப் பெற்றுக்கொடுப்பதன்மூலம் அவசர உதவி வழங்கப்பட்டது.

இவ்வறிக்கையின் ஒவ்வோர் அத்தியாயத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டவினைப்படுத்துகை நிறுவனங்கள் போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக செயலாற்றும் ஏனைய நிறுவனங்களுடனும் சமூகத்துக்கு போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாடு மற்றும் தடுப்பிற்கு முக்கியமானதாக அமையக்கூடிய விஞ்ஞானரீதியான ஆதரவு தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடத்தின் திட்டங்களின்படி மிகவும் பொறுப்புடன் இக்காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# இலங்கையில் பரம்பியுள்ள துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணல்

## 1.1 தெருவில் கிடைக்கின்ற ஹெரோயின் போதையூட்டும் ஔடதம் சார்ந்த ஆராய்ச்சிகள்

தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகளுக்கு மேதிகமாக, பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

- "தெருவில்" கிடைக்கும் ஹெரொயினின் விலை மற்றும் தூய்தான தன்மை பற்றி வெளிப்படுத்தி அதிலுள்ள தொடர்பை அடையாளம் காண்பதற்கு சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள்.
- ஹெரொயின் மாதிரி வகைகளின் தோற்றுவாயையும் பரிணாமத்தையும் அடையாளம்காணல்.
- "தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளிலுள்ள புதிய செறிவுதளர்த்தும் பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வுகள்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகத்தின் ஒத்தாசையுடன் இக்கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாதாந்தம் சேகரிக்கப்படும் மாதிரி வகைகள் இந்த ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 60 ஹெரொயின் மாதிரிவகைகள் 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அடங்கியுள்ள டை எசடைல் மோர்.ஃபீன் (ஹெரொயின்) சதவீதத்தையும் கலப்படம் செய்யப்படும் செறிவுதளர்த்தும் பதார்த்தங்களையும் அல்கலைட்களையும் அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 01 -**
**2015 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரிவகைகளின் எண்ணிக்கை**

| மாதம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | - |
| பெப்ரவரி | - |
| மார்ச் | - |
| ஏப்ரல் | - |
| மே | - |
| ஜூன் | - |
| ஜூலை | - |
| ஆகஸ்ட் | - |
| செப்டம்பர் | 18 |
| அக்டோபர் | 15 |
| நவம்பர் | 20 |
| டிசம்பர் | 07 |
| **மொத்தம்** | **60** |

தெரு ஹெரொயின் மாதிரி வகைகளின் விலைகளுக்கும் தூய்தான தன்மைக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராய்தல், பாவனையாளர்களுக்கும் சந்தைக்கும் இடையிலான தொடர்பை கண்காணிப்பதற்கு மிகச் சிறந்த குறிகாட்டியொன்றாக கவனிப்பதன்மூலம் கிடைப்பனவில் ஏற்படும் மாற்றங்களை மிக இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக, விலைக்கும் தூய்தான் தன்மைக்கும் இடையில் நிலவும் தொடர்புகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதன் மூலம் போதையூட்டும் ஔடதங்களின் வழங்கல் முறைகளை அடையாளம் காண்பதன் ஊடாக திட்டமிட்ட இலக்குகளைப் பிரயோகித்து

அமுல்படுத்துவதன் ஊடாக கடத்தல், போக்குவரவு, கைதாகும் ஹெரொயின் மற்றும் பாவனையாளர்களுக்கு மிகச் சிறப்பாக சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இந்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின்படி இலங்கையில் தெரு மட்ட ஹெரொயின் மாதிரிகளின் தூய்தான தன்மைக்கும் விலைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை முறையான ஆய்வொன்றின்மூலம் பெறப்பட்ட தகவல்கள், கொள்கை வகுப்பின் போதும் சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களின் செயற்பொறுப்பிலும் முக்கியமானதாக அமைவதுடன், கைதுசெய்யப்படும் பாரிய தொகை போதையூட்டும் ஔடத கையிருப்பு, ஹெரொயின் மாதிரிகளின் தூய்தான தன்மை மற்றும் விலைகளுக்கு இடையிலான தொடர்பின் மீது பாதிப்புச் செலுத்த முடியுமா என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பிரிவு மூலம் போதையூட்டும் ஔடத மாதிரி வகைகள் செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மாதங்களில் குறித்த ஆராய்ச்சிக்கு உள்ளாகும் 09 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நகரங்களின் விலை மற்றும் தூய்தான தன்மை தொடர்பான தரவுகள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. தரவுகளின்படி, ஹெரொயின் தூய்தான தன்மையின் சராசரிப் பெறுமானம் 15.55% ஆக இருப்பதுடன், 2014 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக சராசரி தூய்தான தன்மை 13.98% ஆகல் வீழ்ச்சியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. தூய்மையின் உயர் சராசரிப் பெறுமானம் 18.78% செப்டம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. தாழ்ந்த சராசரிப் பெறுமானமான 12.71% டிசம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்டது.

**அட்டவணை இல. 02 – மாதிரிகளின் தூய்தான தன்மை (டை எசிட்டைல் மோர்∴பீன் சதவீதம்)**

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | - | - | - | - | - | - | 02.20 | 01.22 | 15.98 | - |
| சிலாபம் 1 (சிலாபம்) | - | - | - | - | - | - | - | - | - | 44.78 | 24.02 | - |
| கொழும்பு 1 (கொழும்பு) | - | - | - | - | - | - | - | - | - | 27.00 | 13.87 | - |
| கொழும்பு 1 (கிரேண்ட்பாஸ்) | - | - | - | - | - | - | - | - | 35.49 | - | - | - |
| காலி 1 (காலி 1) | - | - | - | - | - | - | - | - | 22.64 | 25.26 | - | 0.00 |
| காலி 1 (காலி 1) | - | - | - | - | - | - | - | - | - | - | - | 20.95 |
| காலி 2 (அம்பலாங்கொடை) | - | - | - | - | - | - | - | - | - | - | 23.22 | - |
| கம்பஹா 1 (கம்பஹா) | - | - | - | - | - | - | - | - | 24.61 | 11.04 | 17.41 | 14.72 |
| கண்டி (கண்டி 1) | - | - | - | - | - | - | - | - | 41.53 | 0.47 | 1.55 | - |
| கண்டி (கண்டி 2) | - | - | - | - | - | - | - | - | - | 27.25 | - | - |
| களுத்துறை 1 (களுத்துறை) | - | - | - | - | - | - | - | - | 12.76 | - | 26.64 | - |
| குருணாகல் 1 (குருணாகல்) | - | - | - | - | - | - | - | - | 23.83 | 9.48 | 0.00 | 12.03 |
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | - | - | - | 0.74 | - | 19.54 | - |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | - | - | - | - | - | - | - | - | 5.22 | 0.00 | 1.64 | 15.87 |
| **சராசரி** | - | - | - | - | - | - | - | - | **18.78** | **16.31** | **14.39** | **12.71** |

*தூய ஹெரொயின் 1 மில்லி கிராமின் சராசரி விலை 201.16 ரூபாவிலிருந்து 1863.68 ரூபா என்ற வீச்சில் மாற்றமடைந்துள்ளது. உச்சவிலை அக்டோபர் மாதத்தில் பதிவாகியுள்ளது. தூய ஹெரொயின் 1 மில்லி கிராமின் விலை பல்வேறு பகுதிகளில் மாற்றமடையும் விதத்தை அட்டவணை இல. 03 காட்டுகிறது.*

**அட்டவணை இல. 03 -**
**"தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளின் விலையும் தூய்தான தன்மையும்**
***(டை எசட்டைல் மோர்.'.பீன் மில்லி கிராம் ஒன்றுக்கான விலை ரூபாய்களில்)***

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | - | - | - | - | - | - | 416.62 | 1503.12 | 80.80 | - |
| சிலாபம் 1 (சிலாபம்) | - | - | - | - | - | - | - | - | - | 42.31 | 33.96 | - |
| கொழும்பு 1 (கொழும்பு) | - | - | - | - | - | - | - | - | - | 48.65 | 97.73 | - |
| கொழும்பு 2 (கிரேண்ட்பாஸ்) | - | - | - | - | - | - | - | - | 123.58 | - | - | - |
| காலி (காலி 1) | - | - | - | - | - | - | - | - | 108.01 | 138.00 | - | 0.00 |
| காலி (காலி 1) | - | - | - | - | - | - | - | - | - | - | - | 211.16 |
| காலி (அம்பலாங்கொடை) | - | - | - | - | - | - | - | - | - | - | 265.88 | - |
| கம்பஹா 1 (கம்பஹா) | - | - | - | - | - | - | - | - | 70.32 | 194.95 | 176.42 | 240.72 |
| கண்டி (கண்டி 1) | - | - | - | - | - | - | - | - | 120.74 | 1230.01 | 918.91 | - |
| கண்டி (கண்டி 2) | - | - | - | - | - | - | - | - | - | 291.51 | - | - |
| களுத்துறை 1 (களுத்துறை) | - | - | - | - | - | - | - | - | 110.81 | - | 75.30 | - |
| குருணாகல் 1 (குருணாகல்) | - | - | - | - | - | - | - | - | 68.35 | 383.87 | 0.00 | 330.04 |
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | - | - | - | 1545.25 | - | 151.32 | - |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | - | - | - | - | - | - | - | - | 428.62 | 0.00 | 476.91 | 223.89 |
| **சராசரி** | - | - | - | - | - | - | - | - | **332.48** | **1863.68** | **252.03** | **201.16** |

**"தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளிலுள்ள அல்கொலைட் அசுத்தப் பதார்த்தங்கள், செறிவு தளர்த்தும் பதார்த்தங்கள்/ வேறு கலப்படப் பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகள்**

தெரு ஹெரொயின் மாதிரி வகைகளின் பகுப்பாய்வுச் சட்டகத்தில் போதையூட்டும் ஔடதத்தின் தரம், அதேபோல் ஆரம்பப் பிரதேசம், மாதிரிகள் ஒவ்வொன்றுக்குமு இடையிலான தொடர்பு என்பன தெரிய வருகின்றன.

எவ்வாறாயினும், மிகவும் அர்த்தபுஷ்டியான முடிவுகளுக்கு வர முடியாதுள்ளமைக்குரிய காரணம், போதிய எண்ணிக்கையில் மாதிரி வகைகள் கிடைக்காமை, ஒரே பிரதேசத்திலிருந்து உரிய மாதிரி வகைகள்

கிடைக்காமை ஆகியனவாகும். இதன் காரணமாக எதிர்பார்த்த குறிக்கோள்களை பூரணமாக அடைந்துகொள்ள முடியாதுள்ளது.

பிரதானமான எல்கொலைட், அசுத்தப் பதார்த்தங்கள் மிகச் சொற்ப அளவுகளில் Gas Chromatography Mass Spectrometer தொழில்நுட்பத்தின்கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்விபரங்கள் அட்டவணை இல. 4, 5 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 04 -**
**"தெரு" ஹெரொயின் மாதிரிவகைகளில் காணக்கூடிய**
**எல்கொலைட் வகை அசுத்தப் பதார்த்தங்கள்**

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | - | - | - | - | - | - | AC<br>MAM | AC<br>MAM | AC<br>MAM | - |
| சிலாபம் (சிலாபம்) | - | - | - | - | - | - | - | - | - | AC<br>MAM | AC<br>MAM | - |
| கொழும்பு 1 (கொழும்பு) | - | - | - | - | - | - | - | - | - | MAM<br>AC | AC<br>MAM | - |
| கொழும்பு 2 (கிரேண்ட்பாஸ்) | - | - | - | - | - | - | - | - | COD<br>AC<br>MAMC | - | - | - |
| காலி (காலி) | - | - | - | - | - | - | - | - | MC<br>HC<br>COD<br>AC<br>MAM<br>PAP<br>NOS | AC<br>MAM | - | - |
| காலி (காலி 2) | - | - | - | - | - | - | - | - | - | - | AC<br>MAM<br>MC | - |
| காலி (அம்பலாங்கொடை) | - | - | - | - | - | - | - | - | - | - | MAM | - |
| கம்பஹா 1 (கம்பஹா) | - | - | - | - | - | - | - | - | COD<br>AC<br>MAM<br>PAP<br>NOS | AC<br>MAM | AC<br>MAM | AC<br>MAM |
| கண்டி (கண்டி 1) | - | - | - | - | - | - | - | - | COD<br>AC<br>PAP | MOR<br>AC<br>MAM | - | - |
| கண்டி (கண்டி 2) | - | - | - | - | - | - | - | - | - | AC<br>MAM<br>COD<br>MOR | AC<br>MAM | - |
| களுத்துறை 1 (களுத்துறை) | - | - | - | - | - | - | - | - | HC<br>AC<br>MAM | - | AC<br>MAM | - |
| குருணாகல் 1 (குருணாகல்) | - | - | - | - | - | - | - | - | HC<br>MEC<br>COD<br>AC<br>MAM<br>PAP<br>NOS | AC<br>AHE<br>MEG<br>PEG | - | AC<br>MAM |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | - | - | - | AC<br>MAM | - | AC<br>MAM | - |
| இரத்தினபுரி<br>(இரத்தினபுரி) | - | - | - | - | - | - | - | - | COD<br>MOR<br>AC<br>MAM | - | AC<br>MAM | AM<br>MAM |

*MOR – மோ.்.பீன் ; AC – எசிடைல் கொடேன் ; MAM – 6- எசிடட்மோர்.்.பீன்; ATH - எசிடைல் தீபோல்; THE – திபேன், PAP – பெப்பாவரின் ; NOS – நொஸ்கெபீன்; COD – கொடேன்; HC- ஹைட்ரோகொடனீன்; MEC- மெகொனீன்; AHE- என்ஹைட்ட்ரோ எக்கொனீன் மிதைல் எஸ்ரர்; MEG- எலஎக்கொனீன்; PEG- பியுகொஎக்கொனீன் மிதைல் எஸ்ரர்*

## அட்டவணை இல. 05 -
## "தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளில் அடையாளம் காணப்பட்ட கலப்படப் பதார்த்தங்களும் *(Adulterants)* செறிவுதளர்த்தும் பொருள்களும் *(Diluents)*

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | - | - | - | - | - | - | CAF<br>DIZ | CAF | ACT<br>CAF | - |
| சிலாபம் (சிலாபம்) | - | - | - | - | - | - | - | - | - | CAF | ACT<br>CAF | - |
| கொழும்பு 1 (கொழும்பு) | - | - | - | - | - | - | - | - | - | CAF | ACT<br>CAF | - |
| கொழும்பு 2 (கிரேண்ட்பாஸ்) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF | - | - | - |
| காலி (காலி 1) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | CAF | - | - |
| காலி (காலி 2) | - | - | - | - | - | - | - | - | - | - | - | CAF<br>DIZ |
| காலி (அம்பலாங்கொடை) | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கம்பஹா 1 (கம்பஹா) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | CAF | ACT<br>CAF | CAF |
| கண்டி (கண்டி 1) | - | - | - | - | - | - | - | - | CAF | CAF | - | - |
| கண்டி (கண்டி 2) | - | - | - | - | - | - | - | - | - | CAF<br>DIZ | ACT | - |
| களுத்துறை 1 (களுத்துறை) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | - | ACT<br>CAF | - |
| குருணாகல் (குருணாகல்) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | - | ACT<br>CAF | - |
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | - | ACT<br>CAF | - |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | - | - | - | - | - | - | - | - | ACT<br>CAF<br>DIZ | ACT | CAF | CAF |

*ACT* – எசிடெம்னொ.்.பீன்; *CAF* – கெபேன்; *DIZ* – டைச.்.பேம்;

## 1.2 ஏனைய ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

**தற்போது இடம்பெற்றுவரும் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் வெறியப்பொருள்கள் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகள்**

சந்தேகத்திற்கிடமான போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் மாதிரி வகைகளின் ஆரம்ப ஆராய்ச்சிகள் பல தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் பதார்த்தங்கள் ஆய்வுகூடம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. எம்பெட்டமின், மெத்எம்பெட்டமின், மெதிலீன்டயொக்சி மெத் எம்பெட்டமின் (MDMA) மற்றும் லைசர்ஜிக் எசிட் டை எதில் எமைட் (LSD) ஆகிய போதையூட்டும் ஔடதங்கள் இதனிடையே உள்ளனவா என்பதை அடையாளம் காண்பது இதன் முக்கிய நோக்ககுமாகும். இவற்றின் ஊடாக அடையாளம் காணப்படும் ஏனைய சேர்மானங்களதும் இரசாயனங்களதும் கூறுகளை அடையாளம் காண்பதும் விசேட நோக்கமாகும்.

**விளையாட்டின்போது பயன்படுத்தும் செயலூக்க மருந்துகள் (தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகள்) செய்யப்படும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்**

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளைப் பாவிப்பதன் மூலம் விளையாட்டுத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலைக்கு மிகத் துரிதமாக பதில்குறிகாட்டி காண்பிப்பது முக்கியமானதாக விளங்குகிறது. இலங்கை இந்நெருக்கடியை வெற்றிகரமாக முகங்கொடுக்கும் பொருட்டு தேசிய விளையாட்டு வைத்திய நிறுவகத்துடன் இணைந்து விளையாட்டு வீரவீராங்கணைகளின் ஊக்கமருந்து பாவனை மற்றும் துஷ்பிரயோகத்தின் அடிப்படையிலான பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்கள் ஆய்வுகூடத்தினால் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்களும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களும் சட்டவிரோதமான முறையில் கடத்தப்படுவதற்கு எதிரான 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின்பிரகாரம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பதார்த்தங்களை விளையாட்டு வீரவீராங்கணைகள் பாவிப்பது சம்பந்தமான பகுப்பாய்வுகள்.

- உலக தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனத்தினால் பட்டியலிடப்பட்ட பதார்த்தங்கள், விளையாட்டு வீர வீராங்கணைகளினால் பாவிக்கப்படுவது குறித்த பகுப்பாய்வுகள்.

- தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்துகளைப் பாவிப்பது குறித்து விளையாட்டு வீர வீராங்கணைகளை அறிவுறுத்துவதற்கான தடுப்புக்கல்வி மற்றும் தடுப்பு பற்றிய புதிய நுட்பமுறைகளை விருத்திசெய்தலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்.

**அற்கஹோல் பற்றிய ஆராய்ச்சிகள்**

இலங்கையில் பாரியளவில் பயன்படுத்தப்படும் பியர் மாதிரிகளில் அடங்கியுள்ள அற்கஹோல் சதவீதங்களை சரியான முறையில் அடையாளம் காணும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு மாதிரிகளின் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு மேலும் இக்கருத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

## மோசமான போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துமுகமாக சட்டவினைப்படுத்துகை நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரம்பொருந்திய நிறுவனங்களுக்கு அவசியமான விஞ்ஞானரீதியான உதவிகளை அளித்தல்

### 2.1 சந்தேகத்திற்கிடமான போதையூட்டும் ஔடதங்களின் / ஔடதங்களின் பகுப்பாய்வு

2015 ஆம் ஆண்டில் 30 சந்தர்ப்பங்களில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின்படி போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் 172 மாதிரி வகைகளுக்கான பகுப்பாய்வு நடவடிக்கைகள் NNL மூலம் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மற்றும் ஏனைய பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுடன் பகிர்ந்துகொண்டு போதையூட்டும் ஔடதப் பிரச்சினை பற்றிய பல்வேறு கண்டுபிடிப்புகள், உபாயமுறைப் பகுப்பாய்வுகள், சட்டக் கொள்கைப் பகுப்பாய்வு, சட்ட மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளல், நோக்கங்களை அடைந்துகொள்ளல் ஆகிய விடயங்களுக்காக மேற்படி பகுப்பாய்வுப் பெறுபேறுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் சட்டவினைப்படுத்துகை, குற்றத்தடுப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை வகுப்பு ஆகியவற்றுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான அம்சங்கள் இத்தகவல்களில் அடங்கும்.

நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழும் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின்கீழும், NNL மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினால் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாதிரி வகைகளின் ஆராய்ச்சிபூர்வ பகுப்பாய்வின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகள் விபரம் கீழ் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 06 –**

**போதையூட்டும் ஔடதங்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 2015 ஆம் வருடத்தில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரி வகைகளின் எண்ணிக்கை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை கடற்படை | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | 01 | | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | 01 | | | | | | | |
| இலங்கை பொலிஸ்/ பொலிஸ் போதை யூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | 01 | | | 06 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | 61 |
| விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | 02 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | 04 |
| இலங்கைச் சுங்கம் | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | 01 | | 01 | 01 | 01 | 01 | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | 01 | | 01 | 02 | 02 | 02 | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | 12 | | | | | 03 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | 42 |
| சுகாதார அமைச்சு | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | 22 | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | |
| தே.அ.ஔ.க.ச. | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | 03 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | 02 | | | | | 03 |
| பிற | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | | | 01 | 01 | 01 | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | | | 01 | 01 | 02 | |
| **மொத்தம்** | **பரிசோதனைகளின் எண்ணிக்கை** | | | | | 02 | **01** | **06** | **01** | **03** | **02** | 01 | 14 |
| | **மாதிரி வகைகளின் எண்ணிக்கை** | | | | | 02 | **06** | **40** | **02** | **06** | **02** | 02 | 110 |

***பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை : 30***
***மாதிரி வகைகளின் மொத்த எண்ணிக்கை : 170***

## 2.2 அற்கஹோல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு

ஆராய்ச்சி அடிப்படையில் NNL மூலம் மேற்கொள்ளப்படும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்படும் அற்கஹோல் பகுப்பாய்வின் மூலம் அவற்றில் அடங்கியிருக்கும் மெதனோல் மற்றும் ஏனைய சேர்மானங்கள் குறித்த அறிக்கையின் விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட 20 சந்தர்ப்பங்களுக்குரிய 63 மாதிரிகளின் பகுப்பாய்வுகளின் விபரம் வருமாறு:

**அட்டவணை இல. 07 -**
**2015 ஆம் வருடத்தில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கைகள்**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை மதுவரித் திணைக்களம் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 02 | | 01 | 02 | 01 | 02 | | 03 | 04 | 02 | 01 | 01 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 05 | | 04 | 05 | 05 | 05 | | 10 | 16 | 09 | 01 | 01 |
| மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவு, வலான, பாணந்துறை | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | | | | | | | | | 01 | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | | | 02 | | | |
| **மொத்தம்** | **சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை** | **02** | | **01** | **02** | **01** | **02** | | **03** | **05** | **02** | **01** | **01** |
| | **மாதிரி வகைகளின் எண்ணிக்கை** | **05** | | **04** | **05** | **05** | **05** | | **10** | **18** | **09** | **01** | **01** |

***சந்தர்ப்பங்களின் மொத்த எண்ணிக்கை : 20***
***மாதிரி வகைகளின் மொத்த எண்ணிக்கை : 63***

**2.3 கள பரிசோதனை கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டை உறுதிசெய்தலும் மீளமைத்தலும்**

பின்வரும் துறைகள்சார்ந்த பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டைப் பரிசோதிப்பதற்கு பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் மூலமும் இலங்கைச் சுங்கத்தின் மூலமும் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவற்றைப் பரிசோதித்த பின் இரசாயன மீள்நிரப்பலுடன் மீளமைக்கப்பட்டது.

| **நிறுவனம்** | **கள பரிசோதனைக் கருவிகலத்தொகுதி வகை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களை அடையாளம் காணும் கருவிகலத்தொகுதிகள் | 01 |
| | முன்னோடி இரசாயனங்களை அடையாளம் காணும் கருவிகலத்தொகுதிகள் | 01 |
| இலங்கைச் சுங்கம் | தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களை அடையாளம் காணும் கருவிகலத்தொகுதிகள் | 01 |
| | முன்னோடி இரசாயனங்களை அடையாளம்காணும் கருவிகலத்தொகுதிகள் | 01 |
| **மொத்தம்** | | **04** |

**2.4 நீதிமன்றத் தேவைப்பாடுகளுக்காக விஞ்ஞானரீதியான உதவியைப் பெற்றுக்கொள்ளல்**

**போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிவடைந்த போதையூட்டும் ஔடத கையிருப்புகளை அழித்துவிடுவதற்கு இறுதி விஞ்ஞான ரீதியான உறுதிப்படுத்தல்.**

பெப்ரவரி, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் இரு சந்தர்ப்பங்களில் பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகத்தின் கோரிக்கைப்படி நீதிமன்ற இல. 03 கனம் மேல்நீதிமன்ற நீதிபதி அவர்களின் அறிவித்தலின்படி 20 வழக்குகளுக்குரிய **வழக்கு விசாரணைகள் முடிவடைந்த போதையூட்டும் ஔடதங்களை அழித்துவிடுவதற்கு இறுதியாக விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தல் செயன்முறைக்கு** போதையூட்டும் ஔடதங்களை அழிக்கும்போது தேசிய போதையூட்டும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தில் விஞ்ஞான பணியாள்தொகுதியின் உதவி பெறப்பட்டது. 16 வழக்குகள் ஹெரொயினுக்கும் 04 வழக்குகள் கஞ்சாவுக்கும் உரியவையென பகுப்பாய்வின் பின்னர் உறுதிசெய்யப்பட்டது. போதையூட்டும் ஔடத கையிருப்புகள் கனம் மேல்நீதிமன்ற நீதிபதி அவர்களின் முன்னிலையில் அழிக்கப்பட்டது.

**2.5 1961 ஆம் ஆண்டின் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் பற்றிய ஐ.நா. சமவாயம், 1971 ஆம் ஆண்டின் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய ஐ.நா. சமவாயம் ஆகியவற்றின்கீழ் நிர்வகிக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் / ஔடதங்கள் /பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்பவற்றுக்கு கட்டுப்பாட்டு பொறிமுறையொன்றை நிறுவுவதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியையும் விஞ்ஞான ரீதியான அனுமதிகளையும் வழங்குதல்.**

துஷ்பிரயோக ஔடதங்களின் கட்டுப்பாட்டுக்கு உரியதான விஞ்ஞான ரீதியான அனுமதிகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவது NNL ஆய்வுகூடம் பொறுப்பாகும். அதன்படி, இறக்குமதி

ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்குரிய விஞ்ஞான ரீதியான அனுமதிகள் வழங்கப்பட்டன:

- கீழ்க்காணும் ஐ.நா. சமவாயங்களுக்குரிய விளக்கங்களின் பிரகாரம் இரசாயனப் பதார்த்தங்கள்/ பொருள்கள்/ ஔடத வகைகளின் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுக்கான தேவை.
    - 1961 தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் பற்றிய சமவாயம்.
    - 1971 உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய சமவாயம்.

- மேற்படி சமவாயங்களுக்கு அமைவாக போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாடு தொடர்பிலும் அதிகாரம் பொருந்திய ஒரே தேசிய நிறுவனமாக தே.அ.ஔ.க. சபையினால் வழங்கப்படும் உரிமங்களின்படி கட்டுப்பாட்டுக்குரிய இரசாயனப் பதார்த்தங்கள்/ பொருள்கள் / ஔடத வகைகளின் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் உரிய ஒழுங்குவிதிகளை மீளமைக்கும் தேவை.

  அதன்படி, இலங்கையில் துஷ்பிரயோக ஔடதங்களின் கட்டுப்பாட்டுக்கும் ஒழிப்புக்கும் செயலாற்றும் தே.அ.ஔ.க.சபை வினைத்திறனான ஒரு தேசிய அதிகாரசபை என்பது அடையாளம் காணப்பட்டதுடன், அது தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்குரிய ஔடதங்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்கு அதிகாரமளிக்கும் அலகொன்றாக மாற்றப்படும். அதற்குரிய விஞ்ஞான ரீதியான அனுமதிகளுடனும் அவதானிப்புகளுடனும் தீர்வு யோசனையொன்று தயாரிக்கப்பட்டது.

**போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் துறையுடன் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை அதிகாரசபைகளுக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்குமான வினைத்திறன் மற்றும் அறிவுவிருத்திசார் நிகழ்ச்சித்திட்டங்கள்**

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஔடதங்களதும் முன்னோடி இரசாயனங்களதும் இறக்குமதி, ஏற்றுமதி, விநியோகம் ஆகிய விடயங்களில் இதனுடன் செயலாற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அறிவை விருத்திசெய்வதற்கும் ஆராய்ச்சி ஆற்றலை விஞ்ஞானரீதியான தோற்றச்சாயல்கள் மீதான விழிப்பூட்டும் பயிற்சி அமர்வுகளை ஊேடு முன்னெடுக்கிறது. இங்கு, துஃபிரயோக ஔடதங்களை அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் விசேடமாக பயிற்றுவிக்கப்படுகின்றனர். போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் இவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் அமுல்படுத்தப்பட்டது.

### 3.1 விஞ்ஞான ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/செயலமர்வுகள்

இலங்கையில் சட்டவிரோத ஔடதங்களை அடையாளம் காணும், முன்னோடி இரசாயனங்களைக் கட்டுப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை ஆற்றல்களை விருத்திசெய்தல் என்ற தொனிப்பொருளின்கீழ் இருநாள் விஞ்ஞான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் ஒழுங்குசெய்யப்பட்டது. இப்பயிற்சிச் செயலமர்வின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வருமாறு:

1. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பவற்றின் சட்டவிரோத கடத்தல் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

2. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பன சம்பந்தமான விரிவான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

3. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பவற்றை அடையாளம் காணல் கள பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளைப் பாவித்து பிரயோக ரீதியான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

4. போதையூட்டும் ஔடதங்களின் நவீன விதங்கள் சம்பந்தமாக பங்குபற்றுவோரின் அறிவை இற்றைவரைப்படுத்தல்.

போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டவினைப்படுத்துகை செயல்வலுப்படுத்தும் பொருட்டு நீதிமன்றங்களுக்கு முறைப்படி வழக்குகள் முன்வைக்கப்படுவதை நோக்காகக்கொண்டு கள உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கான 02 பயிற்சி அமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன. இப்பயிற்சி அமர்வுகளின்போது சாட்சிகளை நெறிப்படுத்தல், குற்றப்பத்திரம் தாக்கல்செய்தல், சார்த்துதல்களின் கண்காணிப்பு, பொலிஸ் அறிக்கைகள், வழக்குத் தாக்கல்செய்தல் சம்பந்தமான பயிற்சி அமர்வுகளும் நிருபிக்கத்தகு விதத்தில் சாட்சிகளை தயார்செய்தல் போன்ற அத்தியாவசிய விடயங்கள் பற்றி அறிவுறுத்தப்பட்டது. இப்பயிற்சிகளுக்கான விரிவுரைகள் முன்னாள் சட்டத்துறை தலைமையதிபதியும் ஜனாதிபதி வழக்குரைஞருமான திரு. பாலித பர்னாந்து அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டது.

### 3.2 பிற நிறுவனங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டில் மருந்து விற்பனை நிலையங்களில் விற்கப்படும் போதையை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளை துஷ்பிரயோகம்செய்வது பற்றிய விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளும் விளக்கங்களும் காலத்திற்கேற்ப மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன. இங்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தின் உளவியல்துறை வைத்தியப் பிரிவின் மாணாக்கர்களுக்கு இது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடராக நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி மற்றும் சான்றிதழ் பாடநெறியைத் தொடர்ந்த மாணாக்கர்களுக்கும் விசேட விரிவுரைகளும் பயிற்சி அமர்வுகளையும் ஒழுங்குசெய்யப்பட்டன. 2015 ஆம் வருடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இத்தகைய செயலமர்வுகள் பற்றிய விபரம் அட்டவணை இல. 08 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 8 -**

**2015 ஆம் வருடத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிகள்/பயிற்சி அமர்வுகள்**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக வைத்திய பீடம்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | 01 | | 01 | | | | 01 | 01 | | 01 | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 18 | 18 | | 19 | | | | 22 | 21 | | 19 | 20 |
| **இலங்கை தரைப்படை** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 12 | | | | | | | | | | | |
| **இலங்கை கடற்படை** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| **இலங்கை பொலிஸ்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 02 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 15 | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொலிஸ் விசேட அதிரடிப் படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | 01 | 04 | 01 | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | 50 | 307 | 171 | | | | | | | | |
| இலங்கை கரையோர பாதுகாப்புத் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 02 | | | | | 01 | 01 | | | | 01 | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 11 | | | | | 20 | 40 | | | | 39 | 48 |
| மதுவரித் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | 47 |
| இலங்கைச் சுங்கம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | 01 | | 01 | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | 17 | 12 | 09 | | | | |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | | | **01** | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | 16 | | | | | 09 | 18 |
| போதையூட்டும் ஔடத முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி மாணாக்கர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | 01 | | 01 | | 01 | | | 02 | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 31 | | | 50 | | 50 | | 42 | | | 99 | |
| போதையூட்டும் ஔடத முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி மாணாக்கர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| சமூக சேவைகள் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| பிரதேச செயலகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| மொத்தம் | **பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை** | **03** | 03 | 04 | 02 | **01** | 02 | 02 | 02 | 02 | 01 | 05 | 03 |
| | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** | **56** | **99** | **307** | **190** | **50** | **53** | **90** | **34** | **63** | **09** | **166** | **133** |

***பயிற்சிச் செயலமர்வுகளின் மொத்த எண்ணிக்கை : 30***
***பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை : 1250***

**3.3 போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (NDDCB) ஐ.நா. போதையூட்டும் ஔடதங்களையும் குற்றச்செயல்களையும் தடுக்கும் அலுவலகத்தின் (UNODC) தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை இயல்திறன்களைப் பலப்படுத்தும் நோக்கில் கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

பின்வரும் துறைகளுடன் சம்பந்தப்பட்ட பரந்ததோர் அறிவைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் சட்டவினைப்படுத்துகை செயற்பாடுகளின் இயல்திறனைப் பலப்படுத்துவதே இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும்.

- கடல், ஆகாயம், பூமி எல்லைகள் ஊடாக இடம்பெறும் போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலை தடுத்துநிறுத்துதல்.
- தேடல் நுட்பமுறைமைகள்.
- கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஔடதங்களின் விநியோகம்.
- ஆபத்து முகாமைத்துவம்.
- போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணலும் பரிசோதனைகளும்.

எவ்வாறாயினும், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் புதிய புதிய உள்ளடக்கங்களைக் கொண்டவையாக அமைந்திருந்ததுடன், e-கல்வி மொடியூல்கள் சிங்கள மொழி மூலம் 32, ஆங்கிலமொழி மூலம் 86 என்ற அடிப்படையில் இற்றைவரைப்படுத்தப்பட்டன. போதையூட்டும் ஔடதங்கள சம்பந்தமாக சட்டவினைப்படுத்தலுக்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் இன்றியமையாதனவாக இருப்பதுடன், சட்டவிரோத போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலுக்கு எதிராக இலக்கிட்ட முறைமைகளுடன் பயிற்சிக் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கட்டுப்பாடும் தடுப்பும் பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சிதிட்டம் உறுதுணையாக அமையும்.

தரப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் மிகவும் வெற்றிகரமான நடவடிக்கைகளுடன்கூடிய தொழில்நுட்ப நுட்பமுறைகளைப் பயன்படுத்தி அதேபோல் அறிவுசார் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன், அதன்மூலம் மிகவும் வெற்றிகரமாக சட்டத்தை அமுல்படுத்தவும் முடியும். ஆகையால், கணனி மூலாதார பயிற்சிப் பாடநெறியின் அறிவையும் ஆற்றல்களையும் விருத்திசெய்வதுடன், இலக்கிட்ட விடயங்களுக்கு மாற்றமான மொடியூல்கள் மூலம் மிகவும் பயன்கூர்நிலை நுட்பமுறைகளுடன்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. கீழ்க்காணும் அட்டவணையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 09 – 2015 ஆம் வருடத்தில் கணனி மூலாதார பயிற்சிப் பாடநெறிகள்**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| **இலங்கை தரைப்படை** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 02 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 05 | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **இலங்கை பொலிஸ்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 02 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 04 | | | | | | | | | | | |
| **பொலிஸ் விசேட அதிரடிப்படை** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | 04 | 02 | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | 30 | 17 | | | | | | | | |
| **இலங்கை கரையோகப் பாதுகாப்புத் திணைக்களம்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | | | | | | | 02 | | 02 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 01 | | | | | | | | | 16 | | 06 |
| **மதுவரித் திணைக்களம்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | **02** | 02 | | 02 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | 09 | 08 | | 05 |
| **பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம்** | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | 02 | | | | | | | 03 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | 17 | | | | | | | 09 |
| **மொத்தம்** | **பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை** | **02** | - | 04 | 02 | 02 | - | - | - | 02 | 04 | - | 03 |
| | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** | **10** | **-** | **30** | **17** | **17** | **-** | **-** | **-** | **09** | **24** | **-** | **20** |

***பயிற்சிச் செயலமர்வுகளின் மொத்த எண்ணிக்கை : 19***
***பங்குபற்றியோர் மொத்த எண்ணிக்கை : 127***

### 3.4 போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கோரிக்கையின் பேரில் ‘விதுலொவ’ (விஞ்ஞான உலகு) எனும் விஞ்ஞான நிகழ்ச்சிக்கு பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக 2 நாட்கள் வளப் பங்களிப்பு வழுங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்தின்போது போதையூட்டும் ஔடத பாவனையின் பரிணாமம் பற்றி விஞ்ஞானபூர்வமாக பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டல் ஏற்படுத்தப்பட்டது.

### 3.5 முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் (PCA) கண்காணிப்பு நடவடிக்கைகள்

இவ்வருடத்திலும் அதன் கண்காணிப்பு நடவடிக்கைகள் விஞ்ஞான உத்தியோகத்தர் திரு. டப்ளியு.டி.அமரசிங்க அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அவர் பதில் இரசாயனவியலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதன் கண்காணிப்பு நடவடிக்கைகள் சபையின் உதவிப் பணிப்பாளர் (விஞ்ஞான ஆராய்ச்சிகள்) திரு. டி.பி.பி.வீரசிங்க அவர்களினால் 2016 பெப்ரவரி மாதம் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது.

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்க மயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளையும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களையும் சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு எதிரான சமவாய சட்டத்தின் அத்தியாயம் II தொகுதி 19, 21 ஆகிய பிரிவுகளில் விபரிக்கப்படுகின்ற முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபைக்குரிய சகல நடவடிக்கைகளும் ஒழுங்குவிதிகளின்படி கண்காணிக்கப்படுவதுடன், முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையின் பணியாள்தொகுதியினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமை அலுவல்களும் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

**துஷ்பிரயோக ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளங்காணலும் பகுப்பாய்வுசெய்தலும்**

உயிரியல் மாதிரி வகைகளை அவற்றிலுள்ள கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாமக் கூறுகளை அடையாளம் காண்பதற்கு தனிநபர் மற்றும் நிறுவன மட்டத்தில் பகுப்பாய்வுசெய்யப்படுகிறது. அத்தகைய பகுப்பாய்வின் பின்னர் போதையூட்டும் ஔடதங்களிலிருந்து விடுபட்டுள்ளார் என்பதற்காக வழங்கப்படும் சான்றிதழானது தொழில் பெற்றுக்கொள்வது போன்ற இன்னபிற கருமங்களுக்கும் பயனுள்ளதாக அமைகிறது. இந்த ஆய்வுகூட அறிக்கையானது நோய் நிர்ணயத்தை அடையாளம் காணல், சிகிச்சையைத் தீர்மானித்தல், புனர்வாழ்வளித்தல் என்பவற்றுக்கு ஆட்களை ஆற்றுப்படுத்தல் போன்ற விடயங்களில் பயனுள்ளதாக அமைகிறது.

நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான போதையூட்டும் ஔடதங்கள் சட்டம், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களினதும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம் என்பவற்றுக்குப் பயன்கொடுப்பதற்கான ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட உயிரியல் மாதிரி வகைகளின் விபரமான ஆவணங்கள் அட்டவணை இல. 10 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 10 -**
**2015 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட உயிரியல் மாதிரி வகைகளின் எண்ணிக்கை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அரசாங்க/ தனியார் வைத்திய சாலைகள்** | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | 01 | 04 | 01 | 04 | | | 05 | 04 | 05 | 02 | 01 |
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | | 02 | 07 | 02 | 14 | | | 11 | 06 | 18 | 02 | 03 |
| **ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்** | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | 01 | | | | | | | | |
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | | | | 01 | | | | | | | | |
| **டெலிகா மெடிகெயார் நிலையம் - கொழும்பு 08** | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | 02 | | | | 01 | | |
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | | | | | | 10 | | | | 05 | | |
| **நாவின்ன மெடிகல்** | மாதிரி வகை | | | | | | | | | 01 | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சென்ரர், குருணாகல்** | களின் எண்ணிக் கை | | | | | | | | | | | | |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | | | | | 02 | | | |
| **ப்ளு க்ரொஸ், ராஜகிரிய** | மாதிரி வகை களின் எண்ணிக் கை | | | | | | 01 | | | | | | |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | | 02 | | | | | | |
| **நீதவான் நீதிமன்றங்கள்** | மாதிரி வகை களின் எண்ணிக் கை | | | | | | 01 | | 02 | 01 | 01 | | 01 |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | | 01 | | 02 | 10 | 01 | | 01 |
| **சென்கோ லைன் சிப்பிங் கம்பனி பிறைவேற் லிமிட்டம்** | மாதிரி வகை களின் எண்ணிக் கை | | | | | | | | | | 01 | | |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | | | | | | 02 | | |
| **விமானப்படை வைத்தியசாலை, கொழும்பு** | மாதிரி வகை களின் எண்ணிக் கை | | | | | 02 | | | | | | | |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | 04 | | | | | | | |
| **பிற** | மாதிரி வகை களின் எண்ணிக் கை | | | | | 04 | | | | | | | |
| | பரிசோத னைகள் எண்ணிக் கை | | | | | 16 | | | | | | | |
| **மொத்தம்** | **மாதிரி வகை களின் எண்ணிக் கை** | | **01** | **04** | **02** | **10** | **04** | | **07** | **06** | **08** | **02** | **02** |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | | 02 | 07 | 03 | 34 | 13 | | 13 | 18 | 26 | 02 | 04 |

***மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை : 46***
***பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை : 122***

**செயலூக்க ஔடதங்களின் பகுப்பாய்வு - புதியதோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இன்றளவில் நாட்டில் பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள இலங்கை விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து/ஔடத பாவனை தொடர்பில் எடுக்கப்படக்கூடிய ஒரு துரித தீர்வாக, முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படும் ஔடதங்களின் கட்டுப்பாடு, துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடுப்பதற்கான பொறுப்புவாய்ந்த ஒரே அரச நிறுவனமான தே.அ.ஔ.க.சபை விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகளின்/ ஔடதங்களின் பகுப்பாய்வை ஆரம்பித்தது.

இந்நிகழ்ச்சித்திட்டம், தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்துடன் இணைந்த பரீட்சார்த்த கருத்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டது.

**5.1 ஆய்வுகூட பகுப்பாய்வு ஆற்றலைத் தரமுயர்த்துதல்**

விளையாட்டு வீர, வீராங்கனைகளின் உடலில் அடங்கியிருக்கும் விளையாட்டின்போது உபயோகப்படுத்தும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் அவற்றின் ஜீவதத்துவ பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுகளும் தொழில்நுட்ப முறைகளும் கையாளப்பட்டன.

* பகுப்பாய்வுகளையும் பரிசோதனை முறைகளையும் கண்டுபிடித்தல்.
* பரிசோதனை முறைகளை செல்லுபடியாக்கல்.

**5.2 உயிரியல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு**

தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்தினால் 03 உயிரியல் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் பகுப்பாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன், அவை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**அட்டவணை இல. 11:**
**குறித்த காலப்பகுதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட உயிரியல் மாதிரி வகைகளின் எண்ணிக்கை**

| நிறுவனம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | பரிசோதனை வகை | பகுப்பாய்வுசெய்த ஔடதங்கள்/ ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்கள் |
|---|---|---|---|
| தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகம் | 03 | Steroids | தடைசெய்யப்பட்ட பட்டியல் WADA |
| மொத்தம் | **03** | | |

**5.3 மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகளில் அடங்கியிருக்கும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்காக செய்யப்படும் பகுப்பாய்வுகள்**

விளையாட்டு வீர, வீராங்கணைகளால் பயன்படுத்தப்படும் மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகளில் அடங்கியிருக்கும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் விளையாட்டுத் துறையிலும் பாடசாலை மட்டங்களிலும் விளையாட்டு வீர வீராங்கணைகள் பயன்படுத்தும் மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகளில் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் அடங்கியிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து இவ்வாறான பதார்த்தங்கள் பற்றி பகுப்பாய்வுசெய்யப்பட்ட அவ்வாறான பதார்த்தங்களை அடையாளம் காணல், விளையாட்டின் உள்ளுயிர்ப்பைப் பேணல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபகீர்த்திக்குரிய நிலைமைகள் காரணமாக நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் தேசியப் பணியொன்றாகக் கருதிதேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடம் மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகளின் பகுப்பாய்வுப் பணியை ஆரம்பித்தது. இதன்போது தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகம்/இலங்கை தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து ஒழிப்பு நிறுவகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் விஞ்ஞானபூர்வ பகுப்பாய்வுகள், ஆராய்ச்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் பல்வேறு மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகள் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வுகள் பற்றிய விபரம் அட்டவணை இல.12 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல.12**

**குறித்த காலப்பகுதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மேலதிக உணவுசார்ந்த உற்பத்தி மாதிரி வகைகளின் எண்ணிக்கை**

| நிறுவனம் | பரிசோதனைகளின் எண்ணிக்கை | மாதிரி வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| இலங்கை ஊக்கமருந்து ஒழிப்பு முகவரகம் (SLADA) | 02 | 05 |
| இலங்கை விளையாட்டு மருத்துவ நிறுவகம் (NISM) | 01 | 01 |
| மெகாலை.ஃப் சயன்சஸ் (பி) லிமிற்றட், கொழும்பு 02 | 01 | 01 |
| அஸ்ரன் லிமிற்றட், இரத்மலானை | 03 | 03 |
| இலங்கை கடற்கடைத் தலைமையகம் | 01 | 04 |
| இலங்கை தடலக விளையாட்டுக்கள் அமைப்பு (AASL) | 01 | 01 |
| **மொத்தம்** | **09** | **15** |

## ஏனைய சேவைகள்

### 6.1 பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் தரப் பரிசோதனை

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ள நிலைமை பற்றிய பண்புத்தர ஜீவதத்துவ பரிணாம மாதிரிகளை உபயோகித்து பரிசோதிக்கும் Immuno Chromatographic 1-Step எனும் பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் செம்மைத்தன்மை பரிசோதிப்பு Zenith Impex (pvt) Ltd. கம்பனிக்காக மேற்கொள்ளப்பட்டது.

| Name of the Test Kit | Qty |
|---|---|

| | |
|---|---|
| **HUMADRUG COCAINE (coc)**<br>Immunochromatographic<br>1-step Test for the Qualitative Detection of<br>**Cocaine** in Human Urine | 02 Packs<br>(30 Test/kits) |
| **HUMADRUG METHAMPHETAMINE (MET)**<br>Immunochromatographic<br>1-step Test for the Qualitative Detection of<br>**Methamphetamine** in Human Urine | 02 Packs<br>(30 Test/kits) |
| **HUMADRUG CANNABINOIDS (THC)**<br>Immunochromatographic<br>1-step Test for the Qualitative Detection of<br>**Cannabinoids** in Human Urine | 02 Packs<br>(30 Test/kits) |
| **HUMADRUG OPIATES (OPI)**<br>Immunochromatographic<br>1-step Test for the Qualitative Detection of<br>**Opiates** in Human Urine | 02 Packs<br>(30 Test/kits) |

## ஏனைய சேவைகள்

## துர்ப்பாவனை போதையூட்டும் ஔடதங்களின் பகுப்பாய்விற்காக சர்வதேச அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூட தரப்படுத்தலை பேணிச்செல்லலும் பராமரித்தலும்

### 7.1 சர்வதேச வினைத்திறன் பரிசோதிப்பு நிகழ்ச்சித்திட்டம்

ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சர்வதேச ஒத்துழைப்புக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் நடாத்தப்படும் சர்வதேச ஆய்வுகூட வினைத்திறன் பரிசோதிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் ஆய்வுகூடம் பங்குகொள்கிறது. அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின் ஆய்வுகூடங்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குகொள்கிறது.

தொடர்ச்சியாக இதில் பங்குகொள்வதன்மூலம் உலகளாவிய அளவில் ஆய்வுகூட நியமமாக்கல், பகுப்பாய்வு ஆற்றல்களை விருத்திசெய்துகொள்ளல், சரியான முடிவெடுத்தல் பற்றிய மிகச் சரியான அணுகுமுறையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒருசீரான மற்றும் இணைந்த பெறுபேறுகளையும் அறிக்கையிடல்களையும் அனைத்து ஆய்வுகூடங்கள் மூலமும் அடைந்துகொள்வதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான அலுவலகத்தினால் அவசியமான சிபார்சுசெய்யப்பட்ட மாதிரி வகைகளும், அடையாளம் காணப்படாத, சந்தேகத்திற்கிடமான மாதிரி வகைகளும் உயிரியல் மாதிரி வகைகளும் அடையாளம் காண்பதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் இதற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

**<u>சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) - 2014, 2015</u>**

இக்காலப்பகுதியில் சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 சுற்று 2, 2015 சுற்று 1 ஆகியவற்றில் ஆய்வுகூடங்கள் பங்குபற்றின. இந்த மாதிரி வகைகளுக்கு அளவுரீதியான, பண்புத்தர ரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தூக்கமயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்கள் அடங்கியவை அல்லது அடங்கியிராதவை என்பதற்கான (சந்தேகத்திற்கிடமான மாதிரி வகைகளும் உயிரியல் மாதிரி வகைகளும்) அவசியமான அறிக்கைகள் வழங்கப்பட்டன.

**<u>சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) – 2014 கட்டம் 2</u>**

சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 சுற்று 2 பெறுபேற்று மீளாய்வின்படி தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் தரவரிசைப்படுத்தலுக்கு 61 நாடுகளின் 190 ஆய்வுகூடங்கள் பங்குகொண்டன. அட்டவணை இல. 13 மூலம் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டைக் காணலாம்.

**Table 13: Evaluation results of Round 2 of ICE program 2014**

| Test | Z score |
|---|---|
| Mathamphetamine | 0.7 |
| Cocaine | -0.8 |

*Satisfactory Limit of Z Score: < 2*

**சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) – 2015 கட்டம் 1**

சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 சுற்று 1 பெறுபேற்று மீளாய்வின்படி தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் தரவரிசைப்படுத்தலுக்கு 66 நாடுகளின் 207 ஆய்வுகூடங்கள் பங்குகொண்டன. அட்டவணை இல. 14 மூலம் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டைக் காணலாம்.

**Table 14: Evaluation results of Round 1 of ICE program 2015**

| Test | Z score |
|---|---|
| Cocaine | - 0.4 |
| Amphetamine | - 1.5 |
| Heroin | 0.6 |

*Satisfactory Limit of Z Score: < 2*

### 7.2 ISO 9001 தர முகாமைச் சான்றிதழ்

ஆய்வுகூடத்தில் விஞ்ஞான பகுப்பாய்வுசெய்வதற்குள்ள ஆற்றலை விருத்திசெய்வதன் மூலமும் விளையாட்டு மாதிரி வகைகளின் பகுப்பாய்வை மேற்கொள்வதையும் உயர் மட்டத்தில் பேணிச்செல்வதன் மூலமும் முகாமை அலுவல்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் இதற்கான ஆய்வுகூட தயார்படுத்தல் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் அவசியமான முதலாவது அகக்கணக்காய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், தற்போது அகக்கணக்காய்வின்படி திருத்தங்கள் வருகிறது.

**நிதிசார் தகவல்கள்**

அட்டவணை 15 – தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடத்தின் சேவைகளை வழங்கி 2015 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட வருமானமீட்டல்கள் சம்பந்தமான தகவல்கள் பின்வருமாறு:

| பகுப்பாய்வு | ரூ. |
|---|---|
| அற்கஹோல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு | 299,000.00 |
| துஷ்பிரயோக ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காணலும் பகுப்பாய்வும் | 88,750.00 |
| விளையாட்டின்போது பயன்படுத்தப்படுகின்ற தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளில் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு செய்யப்படும் பகுப்பாய்வு | 12,000.00 |
| மேலதிக உணவுசார்ந்த உற்பத்திகளில் அடங்கியிருக்கின்ற தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு செய்யப்படும் பகுப்பாய்வு | 250,000.00 |
| கள பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டை உறுதிப்படுத்தலும் மீளமைத்தலும் | 10,000.00 |
| பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் தரப் பரிசோதனை | 14,000.00 |
| **மொத்தம்** | **673,750.00** |

### 8.7 முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை

இலங்கையில் போதையூட்டும் ஔடத உபத்திரவத்தை பூண்டோடு ஒழித்துக்கட்டுவதற்காக தகுதிவாய்ந்த அதிகாரியாக முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் முன்னோடி இரசாயனங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, விநியோகம் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**I. உரிமம் வழங்குதல்**

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் கடத்தலுக்கெதிரான சமவாயச் சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I, II ஆகியவற்றில் அடங்கிய பதார்த்தங்களை இறக்குமதிசெய்வதற்கும் ஏற்றுமதிசெய்வதற்கும் ஆளெவரும் முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**II. வளவுகளின் பதிவு**

உரிமம்பெற்ற ஒவ்வோர் இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I, II ஆகிவற்றில் அடங்கிய பதார்த்தங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் களஞ்சிய வளவுகளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

**III. கண்காணிப்பும் பரீட்சிப்பும்**

சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I, II ஆகியவற்றில் அடங்கியுள்ள பதார்த்தங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வளவுகளும் அவைசார்ந்த கருமங்களும் காலாண்டுக்கு ஒருமுறை பரீட்சிக்கப்படல் வேண்டும்.

- கம்பனிகளைப் பரிசோதித்தல்.
- கம்பனிகளைப் பதிவுசெய்தல்.

- 'முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டுப் பொறிமுறை' என்ற நூலை வெளியிடல்.
- போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை அதிகாரசபைகளதும் ஏனைய போதையூட்டும் ஔடதங்கள்.'.முன்னோடி இரசாயனங்கள் சம்பந்தப்பட்ட முகவராண்மைகளதும் செயற்பாட்டை மேம்படுத்தல்.
- போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.
- முன்னோடி இரசாயனங்களின் வெளியேற்றத்திற்கான விஞ்ஞானரீதியான சிபார்சுகளை வழங்குதல்.

**கம்பனிகளைப் பரிசோதித்தல்**

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் கடத்தலுக்கெதிரான சமவாயச் சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I, II ஆகியவற்றில் அடங்கிய பதார்த்தங்கள் களஞ்சியத்திடப்பட்டுள்ள வளவுகள் முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதேபோல், முன்னோடி இரசாயனங்கள் பிரிவில் பதிவைப் பூர்த்திசெய்த நிறுவனங்களின் அறிக்கைகள், உதிரிப்பாகங்கள் முதலியனவும் பரிசோதிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

| மாதம் | பரிசோதனைகள் |
|---|---|
| ஜனவரி-பெப்ரவரி | 19 |
| மார்ச் | 09 |
| ஏப்ரல் | 07 |
| மே | 11 |
| ஜூன் | 07 |
| ஜூலை-ஆகஸ்ட்-செப்டம்பர் | 13 |
| அக்டோபர்-நவம்பர் | 02 |
| டிசம்பர் | 01 |
| மொத்தம் | 69 |

**கம்பனிகளைப் பதிவுசெய்தல்**

| | |
|---|---|
| இறக்குமதியாளர்கள் | 117 |
| ஏற்றுமதியாளர்கள் | - |
| இறுதிப் பாவனையாளர்கள் | 859 |
| வர்த்தகர்கள் | 112 |
| வளவுகள் | 237 |
| **மொத்தம்** | **1325** |

**'முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டுப் பொறிமுறை' என்ற நூலை வெளிடுதல்**

போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை முகவராண்மைகளதும் ஏனைய அதிகாரசபைகளதும் அறிவையும் ஆற்றல்களையும் விருத்திசெய்தல், முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அறிவை மேம்படுத்தல் ஆகியன நோக்கில் 2015 பெப்ரவரி மாதம் 16 ஆந் திகதி 'முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டுப் பொறிமுறை' என்ற நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதன் நோக்கங்களாவன:

- போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சிறப்பான திறமைகளை வளர்க்கும் ஒரு நுட்பமுறையாக முன்னோடி இரசாயனங்கள் பற்றிய அறிவுசார் தொகுப்பாகவும் கண்டுபிடிப்புகளும் அடங்கிய விரிவான ஒரு நூலை வழங்குதல்.

- பட்டியலிட்ட இரசாயனங்களை சட்டரீதியான பயன்படுத்துவது பற்றிய தகவல்களின் பரம்பலை ஊக்குவிப்பதில் முக்கியத்துவம் வகிக்கும் முன்னோடி இரசாயனங்கள் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவை விருத்திசெய்வதும் போதையூட்டும் ஔடதங்களை ஒழித்துக்கட்டும் தேசிய முயற்சிக்கு தோள்கொடுத்தல், குறிப்பாக முன்னோடி இரசாயனங்களைப் பாவித்து சட்டவிரோதமான போதையூட்டும் ஔடத பாவனையைத் தடுத்தலும் முன்னோடி இரசாயனங்கள் அதிகாரசபையுடனான ஒருங்கிணைப்பை மேம்படுத்தல்.

**போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாட்டையும் மேம்படுத்தல்**

போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாட்டையும் மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

| **நிறுவனத்தின் பெயர்** | **பங்குகொண்டோர் எண்ணிக்கை** |
|---|---|
| விசேட அதிரடிப்படை (இலங்கை பொலிஸ்) | 398 |
| விசேட அதிரடிப்படை (இலங்கை பொலிஸ்) | 171 |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், இலங்கைச் சுங்கம் | 95 |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், இலங்கைச் சுங்கம், இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 62 |
| இலங்கைச் சுங்கம் | 12 |
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 39 |

**கணனிசார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்**

| **நிறுவனத்தின் பெயர்** | **பங்குகொண்டோர் எண்ணிக்கை** |
|---|---|
| விசேட அதிரடிப்படை (இலங்கை பொலிஸ்) | 29 |
| விசேட அதிரடிப்படை (இலங்கை பொலிஸ்) | 17 |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | 17 |
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் | 24 |

# 9. வருமானக் கூற்று

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்**
**2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | (ரூ) | (ரூ) |
| **வருமானங்கள்:** | **குறிப்பு இல.** | | |
| அரச மீண்டெழும் கொடைகள் | குறிப்பு 17 | 170,633,833 | 139,123,000 |
| பிற நானாவித வருமானங்கள் | குறிப்பு 18 | 8,069,704 | 7,158,898 |
| நிலையான சொத்து விற்பனைமூலம் பெற்ற இலாபம் | குறிப்பு 19 | | |
| வெளிநாட்டுக் கொடைகள் - மீண்டெழும் | | 105,900 | 1,073,588 |
| | | 178,809,437 | 147,355,485 |
| **செலவினங்கள்:** | | | |
| ஆள்சார் மற்றும் நிர்வாகக் கிரயம் | குறிப்பு 20 | 110,700,459 | 73,907,192 |
| பிற நடவடிக்கைக் கிரயம் | குறிப்பு 21 | 36,738,975 | 40,136,902 |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் | குறிப்பு 22 | 466,000 | 398,000 |
| தடுப்புக் கல்வி | குறிப்பு 23 | 4,185,199 | 2,764,309 |
| சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு | குறிப்பு 24 | 15,634,080 | 17,449,489 |
| ஆராய்ச்சிக் கற்கைச் செலவுகள் | குறிப்பு 25 | 4,788,572 | 3,914,546 |
| வெளிநிலைச் செலவுகள் | குறிப்பு 26 | 3,872,679 | 3,545,951 |
| NNL ஆய்வுகூடச் செலவுகள் | குறிப்பு 27 | 610,985 | 1,189,206 |
| சிறைச்சாலைகளும் ஏனைய நிலையங்களும் | குறிப்பு 28 | 161,235 | 14,829 |
| மனிதவள அபிவிருத்திக் கிரயம் | குறிப்பு 29 | 732,236 | 599,423 |
| நிதிக் கிரயம் | குறிப்பு 30 | 521,529 | 245,153 |
| தேய்மானம் | குறிப்பு 31 | 14,508,323 | 18,870,275 |
| கையுதிர்ப்பு மீதான நட்டம் | குறிப்பு 32 | | 226,836 |
| **மொத்த நடவடிக்கைக் கிரயம்** | | **192,920,272** | **163,262,111** |
| செலவை மிஞ்சிய வருமான மிகை அல்லது பற்றாக்குறை | | (14,110,836) | (15,906,625) |

**தலைவர்**
தே.அ.ஔ.க.ச.

**சபை உறுப்பினர்**
தே.அ.ஔ.க.ச.

# 10. ஐந்தொகை

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான ஐந்தொகை

| | | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்:** | | (ரூ) | (ரூ) | (ரூ) | (ரூ) |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| வங்கியிலுள்ள காசு | குறிப்பு 02 | 6,345,367 | | 8,408,554 | |
| கடன்படுநர்கள் | குறிப்பு 03 | 10,161,282 | | 9,416,116 | |
| முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை | குறிப்பு 04 | | | | |
| கையிருப்புகள் | குறிப்பு 05 | 3,130,329 | | 2,029,341 | |
| முற்கொடுப்பனவுகள் | குறிப்பு 06 | 2,461,847 | | 1,982,362 | |
| பகுதிக் கொடுப்பனவுகள் | குறிப்பு 07 | 11,449,488 | | 10,741,487 | |
| முற்பணங்கள் | குறிப்பு 08 | 1,939,670 | | 1,906,010 | |
| வைப்புக்கள் | குறிப்பு 09 | 356,813 | | 356,813 | |
| | | | 35,844,795 | | 34,840,683 |
| **நடைமுறை அல்லாச் சொத்துக்கள்:** | குறிப்பு 10 | | 83,627,182 | | 81,166,499 |
| மொத்த சொத்துக்கள் | | | **119,471,977** | | **116,007,182** |
| **பங்குமுதலும் பொறுப்புக்களும்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கடன்கொடுநர்கள் | குறிப்பு 11 | 51,000 | | 54,500 | |
| அட்டுறு செலவுகள் | குறிப்பு 12 | 5,381,179 | | 5,486,978 | |
| நிறுத்திவைத்த தொகைகள் | குறிப்பு 13 | 10,000 | | 10,000 | |
| | | | 5,442,179 | | 5,551,478 |
| **நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்** | | | | | |
| இளைப்பற்று நன்மைகள் பணிக்கொடை | குறிப்பு 14 | | 22,861,183 | | 22,409,253 |
| **பங்குமுதல்** | | | | | |
| அன்பளிப்புகள் | | | | | |
| அரச மூலதனக் கொடை | குறிப்பு 14 | 17,233,000 | | 30,000,000 | |
| மூலதன ஒதுக்குகள் | குறிப்பு 16 | 63,343,346 | | 48,288,171 | |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 25,184,005 | | 25,184,005 | |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | | (480,900) | | 480,900 | |
| மிகை/பற்றாக்குறை | | (14,110,836) | | (15,906,625) | |
| மொத்த பங்குமுதல் | | | 91,168,616 | | 88,046,451 |
| **மொத்த பங்குமுதலும் பொறுப்புக்களும்** | | | **119,471,977** | | **116,007,182** |

# 11. கணக்கீட்டுக் கொள்கைகள்

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. பொதுவான விடயங்கள்

1.1 தயாரிக்கும் அடிப்படை

1.1 பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மூலக்கோட்பாடுகளுக்கும் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

1.1.3 வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் சபை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

1.1.4 இலங்கை ரூபாவில் சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

1.2 அரசாங்கக் கொடைகள் மீண்டெழும் மற்றும் மூலதனம் என்ற இருவேறு விதமாக சபைக்கு அரசாங்கத்தின் கொடைகளிலிருந்து கிடைக்கிறது.

### 2. சொத்துக்களை மதிப்பீடுசெய்யும் அடிப்படை

2.1 காணிகளும் கட்டிடங்களும், வீட்டு உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், வேறு சொத்துக்கள் திரண்ட தேய்மானம் குறைக்கப்பட்ட கிரயம் அல்லது மதிப்பீட்டின்படி காட்டப்படுகிறது.

2.2 எளிய வரிசைமுறையை உபயோகித்து சொத்துக்கள் காட்டப்படுவதுடன், அந்த அளவுகள் பின்வருமாறு அமையும்:

| | |
|---|---|
| - காணிகளும் கட்டிடங்களும் | 5% |
| - அலுவலக உபகரணங்கள் | 20% |
| - வீட்டு உபகரணங்கள் | 10% |
| - பொருத்துதல்கள் | 20% |
| - மோட்டார் வாகனங்கள் | 25% |
| - நூலக நூல்கள் | 25% |

### 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

3.1 ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு சகல பண்டங்களின் மூலதனச் செலவுகள் தொடர்பான பிணைப்புகளும் ஐயப்பாடான பொறுப்புக் கணக்குகள் குறித்த குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

3.2 கையிருப்பு ஏடுகள் சராசரி கிரயத்தின்படி மதிப்பிடப்பட்டுள்ளன.

### 4. வருமான மற்றும் செலவுக் கணக்கு

4.1 மூலதனங்களிலிருந்து பெறப்படும் வருமானங்களும் ஏனைய நானாவித வருமானங்களும் சபையின் வருமானத்தினால் காட்டப்படுகிறது.

4.2 சகல வருமானங்களும் திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

<u>***பின்னிணைப்பு - IV***</u>

## <u>கணக்கீட்டுக் குறிப்புகள்</u>

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்**
**2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | | |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய வருமான மிகை/பற்றாக்குறை | | (14,110,836) |
| **சீராக்கல்கள்:** | | |
| தேய்மானங்கள் | 14,508,323 | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 1,064,108 | |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் பெற்ற இலாபம் | | |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 1,000 | 15,573,430 |
| தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு - முந்திய செயற்பாட்டு இலாபம் | | 1,462,595 |
| **தொழிற்படு மூலதன மாற்றல்கள்:** | | |
| கையிருப்புகள் | (1,100,987) | |
| கடன்படுநர்கள்: விற்பனவுகளும் ஏனைய பெறுவனவுகளும் | (746,166) | |
| முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை | - | |
| முற்கொடுப்பனவுகள் | (479,485) | |
| பகுதிக் கொடுப்பனவுகள் | (708,001) | |
| முற்பணங்கள் | (33,660) | |
| வைப்புக்கள் | - | |
| கடன்கொடுநர்கள்: கொள்வனவுகளும் ஏனைய கொடுப்பனவுகளும் | (3,500) | |
| அட்டுறு செலவினம் | (105,799) | |
| தடுத்துவைத்த தொகை | - | |
| | | (3,177,598) |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | | (612,178) |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான - தேறிய காசுப் பாய்ச்சல்** | | (2,327,181) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான- காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்ளல் | (16,969,006) | |
| நிலையான சொத்துக்கள் விற்பனைமூலம் பெற்ற காசு | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான- காசுப் பாய்ச்சல்** | | |
| **நிதிச் செயற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல்** | | **(16,969,006)** |

100

| | | |
|---|---|---|
| ஆண்டினுள் பெற்ற தேறிய காசு | 17,233,000 | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான - தேறிய காசுப் பாய்ச்சல் | | **17,233,000** |
| **காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றினதும் தேறிய மாற்றல்கள்** | | **(2,063,187)** |
| **ஆண்டு ஆரம்பத்தில் காசு நிலுவை (குறிப்பு A)** | | **8,408,554** |
| **ஆண்டு இறுதியில் காசு நிலுவை (குறிப்பு B)** | | **6,345,367** |

- குறிப்பு A

| | |
|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரானவையும் | |
| முத்திரைக் கட்டுநிதி | 21,804 |
| இலங்கை வங்கி (தாபனக் கிளை) கணக்கிலக்கம் 1643 | 2,401,695 |
| இலங்கை வங்கி (ராஜகிரிய) கணக்கிலக்கம் 0003270702 | 103,377 |
| UNDCP 1995 கருத்திட்டக் கணக்கு | 3,210,889 |
| WHO Regular Budjet கருத்திட்டக் கணக்கு | 1,462,142 |
| NDDCB RAS H71 கருத்திட்டக் கணக்கு | 913,850 |
| UNICEF கருத்திட்டக் கணக்கு | 282,302 |
| NDDCB சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக் கணக்கு | 12,495 |
| | **8,408,554** |

குறிப்பு **B**

| | |
|---|---|
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு நிகரானவையும் | |
| முத்திரைக் கட்டுநிதி | 9,700 |
| இலங்கை வங்கி (தாபனக் கிளை) கணக்கிலக்கம் 1643 | 736,436 |
| இலங்கை வங்கி - ராஜகிரிய கணக்கிலக்கம்- 0003270702 | 26,637 |
| UNDCP 1995 கருத்திட்டக கணக்கு | 3,016,256 |
| WHO Regular Budjet கருத்திட்டக் கணக்கு | 1,397,542 |
| NDDCB RAS H71 கருத்திட்டக் கணக்கு | 1,019,750 |
| UNICEF கருத்திட்டக் கணக்கு | 91,551 |
| NDDCB சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக் கணக்கு | 47,495 |
| | **6,345,367** |

**குறிப்பு 10**

**நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு**

| கிரயம்/ பெறுமானம் | காணிகள் (ரு) | காணிகளும் கட்டிடங்களும் (ரு) | அலுவலக உபகரணங்கள் (ரு) | தளபாடங்கள் (ரு) | பொருத்துதல்கள் (ரு) | மோட்டார் வாகனங்கள் (ரு) | முழு மொத்தம் (ரு) |
|---|---|---|---|---|---|---|---|
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 2,971,405 | 88,487,711 | 79,085,373 | 12,956,995 | 6,382,649 | 36,430,462 | 226,314,595 |
| சேர்மானங்கள் | | 246,115 | 1,070,276 | 635,693 | 5,478,325 | 7,652,000 | - 15,082,408 |
| கையுதிர்ப்புகள் | | | | | | | - |
| 201512.31 அன்றுள்ளவாறான நிலுவை | 2,971,405 | 88,733,826 | 80,155,649 | 13,592,688 | 11,860,974 | 44,082,462 | 241,397,003 |
| | | | | | | | |
| **பெறுமானத் தேய்வு:** | | | | | | | |
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | | 70,082,813 | 63,849,486 | 6,869,378 | 4,996,098 | 7,748,793 | 153,546,569 |
| 2015 க்கான பெறுமானத்தேய்வு | • | 936,035 | 6,169,788 | 838,748 | 713,598 | 3,799,111 | 12,457,280 |
| மீள் மதிப்பீடும் கையுதிர்ப்பும் | | | | | | | |
| 2015.12.31 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | | 71,018,848 | 70,019,275 | 7,708,126 | 5,709,696 | 11,547,904 | 166,003,849 |
| 201512.31 அன்றுள்ளவாறான எழுதப்பட்ட பெறுமதி | 2,971,405 | 17,714,978 | 10,136,374 | 5,884,561 | 6,151,278 | 32,534,558 | 75,393,155 |

| கிரயம்/ பெறுமானம் | நூலக நூல்கள் (ரூ) | சமையலறை உபகரணங்கள் (ரூ) | தோட்ட உபகரணங்கள் (ரூ) | NNL ஆய்வுகூட உபகரணங்கள் (ரூ) | ஏனைய பொறிகளும் உபகரணங்களும் (ரூ) | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 825,560 | 408,991 | 85,565 | 4,414,116 | 5,040,972 | 10,775,204 |
| சேர்மானங்கள் | - 10,309 | | | 1,896,907 | | 1,886,598 |
| கையுதிர்ப்புகள் | | | | | | - |
| 201512.31 அன்றுள்ளவாறான நிலுவை | 815,251 | 408,991 | 85,565 | 6,311,023 | 5,040,972 | 12,661,801 |
| | | | | | | |
| பெறுமானத் தேய்வு | | | | | | |
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 729,337 | 129,314 | 15,844 | 648,979 | 853,256 | 2,376,731 |
| 2015 க்கான பெறுமானத் தேய்வு | 23,201 | 81,798 | 14,113 | 923,736 | 1,008,194 | 2,051,043 |
| கையுதிர்ப்புகள் | | | | | | |
| 2015.12.31 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | 752,538 | 211,112 | 29,957 | 1,572,716 | 1,861,451 | 4,427,774 |
| 201512.31 அன்றுள்ளவாறான எழுதப்பட்ட பெறுமதி | 62,713 | 197,879 | 55,608 | 4,738,307 | 3,179,521 | 8,234,027 |

| | |
|---|---|
| **2015 ஆம் ஆண்டுக்கான மொத்த தேறிய சொத்துக்கள்** | **83,627,182** |
| **பெறுமானத் தேய்வு** | **14,508,323** |

# 12. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எல்ஓஆர்/பீ/என்டிடிசீபீ/2015/1  මබේ අංකය / உமது இல. / Your No.  දිනය / திகதி / Date 2016 நவம்பர் 23

தலைவர்,
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை.

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34  +94-11-2887223  oaggov@sltnet.lk  www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

AGDSL
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்து உருப்படிகள் மற்றும் அண்மித்த எதிர்கால நலன்களோ அல்லது சேவை சாத்தியவளமுள்ள போது அவை வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், சபையின் காணி தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

AGDSL
Auditor General's Department

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை 2.1 இன் பிரகாரம் சொத்துக்கள் கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கிரயத்திலும் மதிப்பீட்டுப் பெறுமதியிலும் இனங்காணப்பட்ட சொத்துக்களின் அணி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை 2.2 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக இனங்காணப்படாமல் காணிக்காக 5 சதவீதம் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,136,503 ஆன செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 356,813 தொகையான வைப்புக்கள் தொடர்பான காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அதில் 18 வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 295,313 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பான பற்றுச்சீட்டுக்கள் சபையிடம் இல்லாதிருந்தமையால் அவ்வைப்புக்களை பணமாக்குவது தொடர்பில் ஆபத்தொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 1,782,060 கூட்டுத்தொகையான 16 நானாவித முற்பணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 2,971,405 பெறுமதியான ஹோமாகம பிட்டிபன காணிக்கு உரித்துறுதிச் சான்றிதழ் மற்றும் ரூபா 1,425,000 ஆன கணனி கொள்வனவிற்குரிய பட்டியல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மற்றும் பட்டோலைகளின் கூட்டுத்தொகை மீதிகளுக்கு இடையே ரூபா 15,251,102 ஆன வேறுபாடு காணப்பட்டது.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச் சட்டம் | நிறுவகத்தின் ஆளுகை சபையின் உறுப்பினர்களான பொலிஸ் மா அதிபர் பெயரிடப்பட்ட பிரதிநிதி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பெயரிடப்பட்ட பிரதிநிதி மற்றும் இலங்கை சுங்கம் பெயரிடப்பட்ட பிரதிநிதிகளின் வருகை 30 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. |
| (ஆ) 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதப் பொருளிற்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு | தனியார் சிகிச்சை நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சிகிச்சைகள் தொடர்பான வெற்றியளிப்பு தொடர்பில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களின் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய கால ரீதியான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 109(1)(ஆ) | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பான புத்தகங்களிலிருந்தான பதிவழிப்புக்களின் ஒவ்வொரு கட்டளையினைதும் பிரதிகள் |

Auditor General's Department

| | | |
|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) பிரிவு | மீளாய்வாண்டில் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு 41 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 476,325 கூட்டுத்தொகையான முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 261 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 751 | சகல பொருட்களதும் பெறுவனவுகளும் விநியோகித்தல்களும் முறைப்படி பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 14,110,836 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,906,625 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,795,789 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு செலவினம் ரூபா 29,658,161 ஆல் அதிகரித்திருந்த போதிலும், அரசின் பங்களிப்பு மற்றும் ஏனைய வருமானம் ரூபா 31,453,952 ஆல் அதிகரித்தமை இந்நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பரீட்சித்த போது தொடர்ச்சியான நிதிப்பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரை முறையே ரூபா 67,539,371, ரூபா 76,486,442 மற்றும் ரூபா 110,609,846 ஆன பங்களிப்பொன்றாக இருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் பங்களிப்பு கூடிய பெறுமதியொன்றை காண்பித்த போதிலும், அதற்கு முன்னைய ஆண்டுகளின்போது அதே மட்டத்தில் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 வங்கிக் கணக்குகளில் ரூபா 6,309,030 கூட்டுத்தொகையான பணம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் வருடக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

* அபாயகர ஔடதங்கள் துஸ்ப்பிரயோகம் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல், மீளாய்வு செய்தல், அத்தகைய கொள்கைகள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் அவ்வாறான கொள்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல்.

* சபையின் அதிகாரங்களைப் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நன்கொடைகளையும் மானியங்களையும் பெற்றுக்கொள்ளல்.

* அபாயகரமான ஔடதங்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள முகவர்களின் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.

* போதைப்பொருட்களுக்கு அடிமையான நபர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் தேசிய போதைப்பொருள் பயன்பாடு மற்றும் நிவாரணங்கள் துர்ப்பிரயோகம் தொடர்பான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

* அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் பரவல், அதற்கான காரணங்கள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் மூலம் ஏற்படும் சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதார சிக்கல்கள் தொடர்பான ஆராய்ச்சி ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்றல், போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தேசிய

AGDSL
Auditor General's Department

பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் முகவர்களுடன் தொடர்பினைப் பேணுதல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிகிச்சைக்காக புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுமதிக்கப்படும் சேவைநாடுனர்கள் நிறுவவகத்திலிருந்து வெளியேறும் போது நிறுவகத்தின் மூலமும் வெளிவாரி சேவை உத்தியோகத்தர்கள் மூலமும் (Outreach Officer) அவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற பின்தொடர் நடவடிக்கைகளின் போது சேவை நாடுனர்களில் கூடுதலானோர் மீண்டும் போதைப்பொருட்களுக்கு அடிமையாதல், நிலையத்திற்கு மீண்டும் புனர்வாழ்விற்காக வருதலோ அல்லது அவர்கள் தொடர்பிலான தகவல்கள் இல்லாத நிலைமையொன்று காணப்பட்டது.

(ஆ) 2015 செப்தம்பர் 12 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட 10060 ஆம் சேவை இலக்க சேவை நாடுனரின் பின்பராமரிப்பு அறிக்கை பரீட்சிக்கப்பட்ட போது தங்கியிருந்து 2 மாதங்கள் 2 வாரங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், சேவைநாடுனருடன் ஒரு தடவையாவது ஆலோசனை சேவைக்காக தொடர்பு படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

சுகாதார அமைச்சிற்குச் சொந்தமான கட்டிடமொன்றில் வாடகை கொடுப்பனவொன்று இல்லாமல் தலங்கம சிகிச்சை நிலையம் பேணிச்செல்லப்படுவதுடன், கட்டிடங்கள் மற்றும் காணி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின்பிறப்பாக்கியொன்று, அலுவலக உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள் மற்றும் கணனிகள் கொள்வனவிற்காக செலுத்தப்பட்ட ரூபா 5,074,427 கூட்டுத்தொகையான முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருக்கையில் நிதிக்கூற்றுக்களில் பகுதிக் கொடுப்பனவொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. இப்பொருட்கள் சபைக்கு கிடைக்கப்பெறாமையால் பெறுமானத்தேய்வு செய்ய முடியாத காரணத்தினால் இக்கொடுப்பனவு பகுதிக் கொடுப்பனவொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சேவை நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக 2015 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் 25 வரை 272 சேவைநாடுனர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 43 சேவைநாடுனர்கள் அனுமதியின்றி வெளியேறியிருந்தனர்.

(இ) 2015 ஆம் ஆண்டில் கட்டணங்கள் செலுத்தாத வதிவிட சிகிச்சைக்கான 146 சேவைநாடுனர்களில் 45 பேர் மீண்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சேவைநாடுனர்களாகும். அது சதவீதமாக குறிப்பிடும் போது 30 சதவீதமான அளவைக் கொண்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் தலங்கம நிலையத்தின் 9 மதியுரையாளர்கள் மற்றும் உதவிக் காப்பாளர்களால் சேவைநாடுனர்களுடன் ஆலோசனை சேவைகள் மேற்கொண்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கைகளின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்கள் மாதமொன்றுக்கு அண்ணளவாக 8 ஆலோசனைச் சேவைகளாக இருந்ததுடன், அது போதுமானதல்ல என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

நிச்சயிக்கப்பட்ட நோக்கமொன்று இல்லாமல் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,971,405 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஹோமாகமவில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்காக பயன்படுத்துவது தொடர்பில் முறையான திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 மனித வள முகாமைத்துவம்

2011 ஆம் ஆண்டிலிருந்து உதவி நிதிப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

சபைக்காக தனியான உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்காததுடன் வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களோ அல்லது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

AGDSL
Auditor General's Department

## 5.2 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 81 சதவீதம் அதாவது ரூபா 40,961,000 குறைத்து செலவிடப்பட்டிருந்தமையால் கொள்வனவுத் திட்டம் நடைமுறைரீதியாக தயாரிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்த போது 29 விடயங்களுக்குரியதாக 96 சதவீதம் முதல் 783 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

(ஆ) பாதீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்படாத 12 செலவின விடயங்களுக்காக மொத்தம் ரூபா 12,844,147 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கு புத்தகங்கள் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>நாட்குறிப்பு பதிவுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை. |

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | | |
|---|---|---|
| (ஆ) | புனர்வாழ்வு நிலையங்களின் பயன்பாடு | நிலையங்களுக்கு வருகை தரும் சேவை நாடுனர்களுக்காக போதியளவு சேவைகளை வழங்காமை. |
| (இ) | சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறையாகப் பராமரிக்காமை. |
| (ஈ) | இருப்பு மற்றும் பொருளிருப்புக் கட்டுப்பாடு | பொருளிருப்பு பதிவேடுகளை சரியாக பேணப்படாமை. |
| (உ) | நிதி முகாமைத்துவம் | செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளில் கூடிய சாதகமான மீதிகள் பேணிச்செல்லல், பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டமை. |
| (ஊ) | மனித வள முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 13. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள்

*2017.01.20*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
பொல்தூவ வீதி
பத்தரமுல்ல

**2. <u>நிதிக் கூற்றுக்கள்</u>**

***2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றி கருத்துரைத்தல்***

***2.2.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள்***

அ. சபைக்குச் சொந்தமான காணிகளை அடையாளங்கண்டு மீள்கணிப்பீடுசெய்து கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டது.

ஆ. சொத்துக்களை மீள்மதிப்பீடுசெய்வதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>**

அ. கிரயத்திற்கும் மதிப்பீட்டுப் பெறுமானத்திற்கும் அடையாளம் காணப்பட்ட சொத்து வகுதிகள் குறித்து தெளிவுபடுத்திக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. 2016 ஆம் ஆண்டு முதல் காணிகளும் கட்டிடங்களும் வெவ்வேறாக தேய்மானம்செய்து கணக்கீட்டில் உட்படுத்தப்படும்.

**2.2.3 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**

அ. இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள திரண்ட செலவுகள் 2016 ஆம் ஆண்டில் சீர்செய்யப்பட்டுள்ளது.

**2.2.4 <u>கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்</u>**

அ. இப்பற்றுச்சீட்டுக்கள் குறித்து வினவி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன் சில நிறுவனங்கள் தொலைபேசி வாயிலாக அதற்கு பதில் அளித்துள்ளன. இத்தொகைகளை துரிதமாக மீள அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆ. ரூ.1,782,059/50 ஆக சுட்டிக்காட்டப்பட்டுள்ள முற்பணங்களைச் செலுத்துவதற்கு பொதுத் திறைசேரியிலிருந்தும் ஆலோசனைகளைப் பெற பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுக்கப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அநேகமான செலவுகள் முற்பணங்கள் அன்றி ஆரம்பக் கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாகும். இக்கொடுப்பனவுகள் மிகப் பழைமையானவையாக இருப்பதால், விபரங்களைப் பெற்றுக்கொள்வதும் சிரமமானதாகும். இத்தொகையை பதிவழிப்பதற்கு நிதி அமைச்சிலிருந்தும் வினவப்பட்டது. அந்த ஆலோசனைகளின்படி கூடியவிரைவில் இதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

### 2.2.5 <u>கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை</u>

*இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அனைத்தும் எதிர்வரும் ஆண்டில் சீர்செய்யப்படும்.*

### 2.2.6 <u>விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்</u>

*இங்கு ரூ.1,359.00 தொகை வித்தியாசமொன்றாகக் காட்டப்பட்டுள்ளது, கணக்குப் பதிவின்போது இடம்பெற்ற ஒரு விடுபாடாகும். இது 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கபட் ஒன்றுக்காக பதியப்பட்ட தேய்மானப் பதிவாகும். 2013 ஆம் ஆண்டில் இந்த கபட்டினை கொள்வனவுசெய்வதற்கான காசோலை வரையப்பட்டபோதும் 2014 ஆம் ஆண்டில் அந்த கபட் கொள்வனவு செய்யப்படாதென அறிவிக்கப்பட்டு அக்காசோலையை இரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதுவரையில் அதற்காக 2013 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காசோலை இரத்துச் செய்யப்பட்டபோதும் தேய்மானங்கள், தேய்மானக் கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை. இவ்வழு 2016 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும்.*

### *2.3* சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

**அ. நிர்வாக சபை**

*1986 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தே.அ.ஔ.க.சபை சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 6(2) இன்பிரகாரம் யாதேனும் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் சபை உறுப்பினர்களில் மூன்று பேர் அடங்கியதாக இருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சகல சபைக் கூட்டங்களுக்கும் பின்வருமாறு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்:*

| *மாதம்* | *உறுப்பினர்கள் எண்ணிக்கை* |
|---|---|
| பெப்ரவரி | 10 |
| மார்ச் | 08 |
| ஏப்ரல் | 07 |
| மே | 07 |
| ஜூன் | 06 |
| ஜூலை | 05 |
| ஜூலை (விசேட) | 09 |
| ஆகஸ்ட் | 07 |
| செப்டம்பர் | 05 |
| அக்டோபர் | 07 |
| நவம்பர் | 09 |
| டிசம்பர் | 07 |

ஆ. *தனியார் சிகிச்சையளிப்பு நிலையத்தின் மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்டிருந்த பணிப்பாளர், சம்பந்தப்பட்ட அறிக்கைளை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை. தற்போது குறித்த பதவிக்கு புதிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பருவ அறிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன், அவ்வறிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.*

இ. i. வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டமீட்டுபவை பற்றிய அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. இச்சகல முற்பணத் தொகைகளும் தற்போது செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதுடன், இனிமேல் இவ்வாறு தாமதங்கள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. சகல பண்ட பெறுவனவுகளையும் விநியோகங்களையும் இற்றைப்படுத்த அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### *3. நிதி மீளாய்வு*

### *3.1 நிதிப் பெறுபேறுகள்*

போதையூட்டும் ஔடத பாவனை இலங்கையில் தீவிர கவனம் ஈர்க்கப்பட்டுள்ள ஒரு விடயமாக இருப்பதுடன், போதையூட்டு ஔடதங்களின் தடுப்பிற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தலைமையில் நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித்திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில், நாடுபூராவும் பல்வேறு செயற்பாடுகளை வேளைக்கேற்றவாறு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், 2017 வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும்போது இது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படும்.

### *3.2 தொழிற்படு மூலதன முகாமை*

இந்த நடப்புக் கணக்கானது சபையினால் பேணப்பட்டுவரும் கருத்திட்டக் கணக்காகும். இத்தொகைகள் மூலம் போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் அடிக்கடி முன்னெடுக்கப்படுகின்றன.

### *4. செயற்பாட்டு மீளாய்வு*

### *4.1 செயலாற்றுகை*

அ) போதையூட்டும் ஔடதங்களின் பாவனை பொதுவான ஒரு நடத்தையன்றி மூளையின் தூண்டலால் மீண்டும் மீண்டும் அவற்றை நாடத் தூண்டப்படும் ஒரு நோய் நிலைமையாகும். ஆகையால், சிகிச்சைகளின் சதவீதம் சுமார் 15% ஆக இருப்பது மிகவும் வெற்றிகரமான ஒரு நிலைமையாகும்.

உலகின் எல்லா நாடுகளிலும் சிகிச்சை பெறுநர்கள் மீண்டும் மீண்டும் அவற்றின் பாவனையின்பால் தூண்டப்படும் சதவீதம் சுமார் 90% ஆகவுள்ளது.

ஆகையால், இங்கு அடையப்பெற்றுள்ள வெற்றிநிலை குறித்து மகிழ்ச்சி அடையலாம்.

இது போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும்போது எழக்கூடிய ஓர் இயல்பான நிலைமையாகும். ஆகையால், வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்கள் இவர்கள் குறித்து கண்காணிப்பதிலும் சமுதாய அடிப்படையிலான தலையீடுகளை மேற்கொள்வதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆ) சேவைபெறுநர்களில் சிலர் போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காரணமாக தீவிர உள வியாதிகளுக்கு இரையாகக்கூடிய வாய்ப்புள்ளது. அவ்வாறான உள நோயாளிகளியான சேவைபெறுநர் ஒருவருக்கு ஆலோசனைச் செயன்முறை மேற்கொள்ளப்படுவதில்லை. உள நோயாளிகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளே அவர்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது.

### *4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்*

சுகாதார அமைச்சிற்குச் சொந்தமான ஒரு காணியில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டுள்ளதுடன், அக்காணியை உரிமைமாற்றம் செய்வதற்கான வாய்ப்பு சபைக்கு இல்லை.

### *4.3 நடவடிக்கைச் செயற்பாடுகள்*

அ) இந்நிறுவனத்திற்கு 2015.12.31 ஆந் திகதியளவில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் அப்போது சபைக்கு பண்டங்கள் கிடைத்திருக்கவில்லை. ஆதலால், அப்பண்டங்களை தேய்மானமாகக் கொள்ள முடியாதிருப்பதால் இக்கொடுப்பனவுகள் பகுதிக் கொடுப்பனவுகளாக பதியப்பட்டுள்ளது.

ஆ) அதுவும் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களின் ஒரு சுபாவமாகும். எனினும், அதனைத் தடுப்பதற்கு உயர்ந்தபட்ச நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், எந்தவொரு சேவைபெறுநரையும் பலவந்தமாக தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும், தற்கொலைசெய்து கொள்வது போன்ற நிலைமைகள் ஏற்படலாம்.

இ) இதுவொரு நோய் நிலைமை என்பதால், மீண்டும் பாவிக்கத் தூண்டப்பட்டவர்களுக்கு சேவை வழங்கலை கட்டாயமாகவே மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையால், மீண்டும் பாவிப்பதற்கு வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஈ) தற்போது அமுலிலுள்ள சிகிச்சையளிப்பு முறை யாதெனில், உளவியல் அணுகுமுறையாகும். அதன்படி, சேவை பெறுநர்கள் அனைவருக்கும் சிகிச்சைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அச்சிகிச்சையளிப்புத் திட்டப்படி ஆலோசனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.4 செயற்பாடற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

ஹோகாமையிலுள்ள காணிக்கான உறுதி இதுவரை வழங்கப்படவில்லை. சபையின் நிதியங்களைப் பயன்படுத்தி அதன் அளவை நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. உறுதியைப் பெற்றுக்கொண்ட பின் பயனுறுதிவாய்ந்த ஒரு நடவடிக்கைக்கு ஈடுபடுத்திக்கொள்ள திட்டங்கள் வகுக்கப்படும்.

### 4.5 பணியாள்தொகுதி நிர்வாகம்

இப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல தடவைகள் விண்ணப்பம் கோரப்பட்டபோதும், தகுதிகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பகாரர்கள் தோற்றியிருக்கவில்லை. மீண்டும் 2016.03.20 ஆந் திகதியும் விண்ணப்பம் கோரப்பட்டது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாட்சியும்

### 5.1 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்விற்கு தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பகாரர்கள் தோற்றியிருக்கவில்லை.

### 5.2 பெறுகைத் திட்டம்

2015 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டப்படி பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன், ஏராளமான ஐயுறவான உள்ளீடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன்படி, இந்த முரண்பாடு எழுந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் இயன்ற அளவுக்கு அவ்வாறான மாற்றங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

அ) எதிர்வரும் ஆண்டில் பாதீட்டை உரிய முறையில் முகாமைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) சபை நடவடிக்கைகளின்போது ஐயுறவான செலவுகளை மேற்கொள்ள நேரிடும். எதிர்காலத்தில் அச்செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**
இத்துறைகள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படுவதுடன், அதற்கு அவசியமான நிதி மற்றும் பிற உள்ளீடுகளை

இவ்வண்ணம் -நம்பிக்கையுள்ள,

**பேராசிரியர் ரவீந்திர பர்னாந்து**
தவிசாளர்

பிரதி: செயலாளர், சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு.

## பின்னிணைப்புகள்:

***பின்னிணைப்பு - I***

## சபையின் நிறைவேற்றுப் பதவியினர் - 2015

**தவிசாளர்**

திரு. சி.நிலங்க சமரசிங்க — வைத்தியர், அறுவைச் சிகிச்சையில் முதுமாணிப் பட்டம் - களனிப் பல்கலைக்கழகம்.

**பணிப்பாளர் நாயகம்**
**(நிறைவேற்றுப் பணிப்பாளர்)**

திரு. கே.கமகே — மக்கள் தொடர்பாடலில் கலைமுதுமாணிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். எழுத்தாண்மை மற்றும் வெகுஜனத் தொடர்பாடலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். கலைமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

**சபையின் செயலாளரும்**
**சட்ட உத்தியோகத்தரும்**

திருமதி டீ.ஜி.ரி.என். நந்தசிறி — சட்டத்தரணி.

**உதவிப் பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு**

திரு. ரி.டப்ளியு.பிரேமசிறி — சமூக விஞ்ஞான முதுமாணிப் பட்டம், களனிப் பல்கலைக்கழகம். வர்த்தகமாணிப் பட்டம்,கொழும்புப் பல்கலைக்கழகம். சமூக வேலைகள் பற்றிய டிப்ளோமா - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்.

**உதவிப் பணிப்பாளர் - ஆராய்ச்சிகள்**

திருமதி. எஸ்.எம்.பீ.நந்தா குமாரிஹாமி — சமூக விஞ்ஞான முதுமாணிப் பட்டம், களனிப் பல்கலைக்கழகம். கலைமாணிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

**உதவிப் பணிப்பாளர் - வெளிநிலைச் சேவைகள்**

திரு. டி.கே.எஸ். கனேகொட — (2015.05.25 ஆந் திகதி வரை சேவையாற்றினார்)

**உதவிப் பணிப்பாளர் - தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி**

| | |
|---|---|
| திரு. கே.பிரதீப் குமார கொஹொல்லானேகெதர | கலைமாணி (சிறப்பு) பட்டம், இரண்டாம் வகுப்பு – கொழும்புப் பல்கலைக்கழகம். சா்வதேச அலுவல்கள் கற்கை பற்றிய முதுமாணிப்பட்டம் - உப்சாலா பல்கலைக்கழகம், சுவீடன். பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறி, உளவள ஆலோசனை - கொழும்புப் பல்கலைக்கழகம். |

**உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம்**

| | |
|---|---|
| திருமதி ஏ.டப்ளியு.ஏ.குமாரி | மனிதவள முகாமையில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |

**உதவிப் பணிப்பாளர் - விஞ்ஞான ஆராய்ச்சிகள்**

| | |
|---|---|
| திருமதி டி.பி.ஜி.வீரசிங்க | இரசாயனவியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம், டில்லி பல்கலைக்கழகம், இந்தியா. பகுப்பாய்வு இரசாயனவியலில் பட்டப்பின்படிப்பு, பேராதனைப் பல்கலைக்கழகம். |

**உதவிப் பணிப்பாளர் - பணியமா்வுசெய்யப்பட்ட மற்றும் தனியாா் சிகிச்சையளிப்பு நிலையங்கள்**

| | |
|---|---|
| திரு. ஜீ.ஆர். குணவா்தன | சமூக விஞ்ஞான முதுமாணிப் பட்டம், களனிப் பல்கலைக்கழகம். சமூக விஞ்ஞான இளமாணிப் பட்டம், களனிப் பல்கலைக்கழகம். |

**உதவிப் பணிப்பாளர் - நிதி**

| | |
|---|---|
| திருமதி என்.ராஜபக்‘ | 2014.10.01 ஆந் திகதியிலிருந்து பதிற்சேவை அடிப்படையில் இப்பதவியில் சேவையாற்றுகின்றார். |

**நிர்வாக உத்தியோகத்தர்:**

| | |
|---|---|
| திரு. ஆர்.எம்.சமந்த ரத்னாயக்க | முகாமைத்துவ இளமாணி (மனிதவள) பட்டம், களனிப் பல்கலைக்கழகம். |

**நூலகவியலாளர்:**

| | |
|---|---|
| செல்வி கே.ஏ.ஆர்.இனோகா குருப்பு | நூலகவியல் மற்றும் ஆவணவாக்கல் பற்றிய முதுமாணிப் பட்டம் - களனிப் பல்கலைக்கழகம். கலை இளமாணிப் பட்டம் - களனிப் பல்கலைக்கழகம். நூலகவியல் மற்றும் தகவல் விஞ்ஞானம் பற்றிய உயா் டிப்ளோமா – களனிப் பல்கலைக்கழகம். |

**முகாமையாளர்கள்:**

| | |
|---|---|
| திரு. எஸ்.என்.தினசேக்கர | வணிக இளமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திரு. எம்.டி.விக்ரமகே | விஞ்ஞான இளமாணி வியாபார முகாமைத்துவம் பற்றிய |

| | |
|---|---|
| | பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| திரு. சி.ஜயசிங்க | போதையூட்டும் ஔடத துஃபிரயோக முகாமைத்துவ டிப்ளோமா |
| திரு. பி.என்.ரி.பீரிஸ் | விஞ்ஞானமாணி அரசாங்க முகாமைத்துவ (சிறப்பு) பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |

**ஆலோசகர்கள்:**

| | |
|---|---|
| திரு. எம்.ஏ.டப்ளியு.மாரசிங்க | உளவியல் பற்றிய டிப்ளோமா – உளவியல் கற்கைகள் நிறுவகம்.<br>உளவள ஆலோசனை பற்றிய டிப்ளோமா – உளவியல் கற்கைகள் நிறுவகம் |
| திருமதி வி.எச்.பத்திரண | சமூக வேலைகள் பற்றிய டிப்ளோமா – தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம். |
| திரு. பீ.ஜீ.எஸ்.திசாநாயக்க | போதையூட்டும் ஔடத துஃபிரயோக முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா – மனிதவள முகாமைத்துவ நிறுவகம் - கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திருமதி ஆர்.பி.கே.யூ.பி.ரணசிங்க | சமூக விஞ்ஞான முதுமாணிப் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்.<br>சமூக விஞ்ஞான இளமாணிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.<br>போதையூட்டும் ஔடத துஃபிரயோக முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா – மனிதவள முகாமைத்துவ நிறுவகம் - கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திருமதி எம்.சி.ஜயதிலக்க | போதையூட்டும் ஔடத துஃபிரயோக முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா – மனிதவள முகாமைத்துவ நிறுவகம் - கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திரு. எஸ்.எம்.ஐ.லக்மால் சமரகோன் | உளவியல் இளமாணி (சிறப்பு) பட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம். |

**ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்:**

| | |
|---|---|
| திருமதி கே.ஏ.டி.எச். லக்மினி | ஜப்பானிய மொழியில் கலைமாணிப் பட்டம், சப்ரகமுவ பல்கலைக்கழகம். |
| திரு. டி.ஜி.கே. மதுசங்க சந்திரதாச | கலைமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம். (2015.01.13 ஆந் திகதி வரை சேவையாற்றினார்) |
| செல்வி பி.வி.எச்.வத்சலா சத்துரங்கி | சமூக விஞ்ஞானம் பற்றிய இளமாணிப் பட்டம் - களனிப் பல்கலைக்கழகம். |
| திரு. ஏ.ரி.தர்சன | சமூக விஞ்ஞானம் பற்றிய இளமாணிப் பட்டம் - கொழும்புப் பல்கலைக்கழகம். |

**போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| திருமதி கே.டி.எம்.குமுதினி ஜயதிலக | போதையூட்டும் ஔடத துஃபிரயோக முகாமை பற்றிய டிப்ளோமா, கொழும்புப் பல்கலைக்கழகம்.<br>*(2015.06.15 தொடக்கம் உதவிப் பணிப்பாளர் - வெளிநிலைச் சேவைகள் (பதில்) பதவியில் பணியாற்றுகின்றார்.)* |

| | |
|---|---|
| திருமதி ஆர்.எம்.எஸ்.பி.எம்.ரத்னாயக்க | வெகுசனத் தொடர்பாடலில் இளமாணி (சிறப்பு) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| திரு. ஐ.எம்.சி.பிரதீப் கருணாரத்ன | வெகுசனத் தொடர்பாடலில் இளமாணி (சிறப்பு) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |

**விஞ்ஞான உத்தியோகத்தர்:**

| | |
|---|---|
| திரு. டப்ளியு.டி.ஏ.அமரசிங்க | இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| திருமதி. கே.எம்.முதுமால | இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம். (2015.05.15 தொடக்கம் சேவையாற்றுகின்றார்) |
| திருமதி ஏ.டி.வை.கே.அதாவுத | இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம். (2015.06.15 தொடக்கம் சேவையாற்றுகின்றார்) |
| திரு. கே.கே.டி.ரி.டி. கொடகும்புற | இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம், உறுஹுணைப் பல்கலைக்கழகம். (2015.07.06 தொடக்கம் சேவையாற்றுகின்றார்) |

**சிகிச்சையளிப்பு மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்கள்:**

| | |
|---|---|
| திரு. டி.குலதுங்க | போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக முகாமை பற்றிய டிப்ளோமா, கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திரு. எச்.எம்.பீ.பி.ஹேரத் | போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக முகாமை பற்றிய டிப்ளோமா, கொழும்புப் பல்கலைக்கழகம். |
| திரு. ஏ.டப்ளியு.ரணசிங்க | வழிகாட்டலும் ஆலோசனையும் பற்றிய உயர் சான்றிதழ் கற்கைநெறி. |

**ஏனைய உத்தியோகத்தர்கள்:**

உதவி ஆலோசகர்கள், உதவி போதையூட்டும் ஔடத கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர்கள், உதவி விஞ்ஞான உத்தியோகத்தர், உதவி வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்கள், முறைமைப் பகுப்பாய்வு மற்றும் நிகழ்ச்சித்திட்ட வரைநர், உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உதவியாளர்கள், போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய கல்வி மற்றும் தகவல் உதவியாளர்கள், தகவல் தொழில்நுட்ப உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கணக்குப் பதியுநர், சாரதிகள், நூலக உதவியாளர், அலுவலகப் பணி உதவியாளர்கள்.

***பின்னிணைப்பு - II***

## சட்டவினைப்படுத்துகை உப குழு உறுப்பினர்கள் - 2015

1. திரு. சரத் ஜயமான்ன
   பிரதி மன்றாடி அதிபதி
   சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம்
   கொழும்பு 12

2. வைத்தியர் கமல் த சில்வா
   பணிப்பாளர்
   பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள்
   ஒழிப்புப் பணியகம்
   3 ஆவது மாடி
   புதிய செயலகக் கட்டிடம்
   கொழும்பு 03

3. திரு. டி.சி.பி. வல்கம்பாய
   பொது முகாமையாளர்
   இலங்கை கப்பல் முகவர் அமைப்பு,
   இல. 56, வோர்ட் பிளேஸ்
   கொழும்பு 07

4. திருமதி பி.எஸ்.கே. ராஜபக்ஷ
   சிரேஷ்ட அரசாங்கப் பகுப்பாய்வாளர்
   அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
   இல. 31, இசுரு மாவத்தை
   பெலவத்த
   பத்தரமுல்ல

5. திரு. டி.ஏ.ஆர். பத்திரண
   பிரதிப் பணிப்பாளர் (சட்டம்)
   மத்திய சுற்றாடல் அதிகாரசபை
   இல. 104, "பரிசர பியச"
   டென்சில் கொப்பேகடுவ மாவத்தை
   பத்தரமுல்ல

6. பணிப்பாளர் நாயகம்
   இலங்கை கரையோரப் பாதுகாப்பு
   அதிகாரசபை
   தலைமையகம்
   உடுபில, மிரிஸ்ஸ
   மாத்தறை

7. திரு. டப்ளியு.திசாநாயக்க
   மதுவரி ஆணையாளர்
   மதுவரித் திணைக்களம்

இல. 34, டப்ளியு.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை
கொழும்பு 02

8. கப்ரன் ரி.எம்.ஏ.ஏ. தென்னகோன்
புரவொஸ்ட் மார்சல்
இலங்கைக் கடற்படை
கடற்படைத் தலைமையகம்
கொழும்பு 01

9. திரு. ஜி.எச்.ஜி.ஏ. லங்காதேவ
பிரதிப் பணிப்பாளர்
இலங்கைச் சுங்கம்
இல. 40, பிரதான வீதி
கொழும்பு 11

10 திரு. மிஹிர லியனாரச்சி
பணிப்பாளர் (மனிதவளம்)
உள்நாட்டுச் சுற்றுலா மற்றும் சேவைகள்
முகாமை
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
இல. 80, காலி வீதி
கொழும்பு 03

11. திரு. கெலும் குணதுங்க
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (நடவடிக்கை)
விசேட அதிரடிப் படை
இல. 223, பௌத்தாலோக மாவத்தை
கொழும்பு 07

12. வைத்தியர் (திருமதி) ஸ்ரீயாணி திசாநாயக்க
பிரதிப் பணிப்பாளர்
வைத்திய தொழில்நுட்பங்கள் மற்றும்
வழங்கல்கள் பிரிவு
இல. 120, நொரிஸ் கெனல் வீதி
கொழும்பு 10

13. திரு. எச்.எம்.என்.சி.தனசிங்க
சிறைச்சாலைகள் ஆணையாளர்
சிறைச்சாலைத் தலைமையகம்
பேஸ்லைன் வீதி
கொழும்பு 09

***பின்னிணைப்பு - III***

## சட்டவாக்க உப குழு உறுப்பினர்கள் - 2015

1. திரு. சரத் ஜயமான்ன
   பிரதி மன்றாடி அதிபதி
   சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம்
   கொழும்பு 12

2. வைத்தியர் (திருமதி) சிறியானி
   திசாநாயக்க
   பிரதிப் பணிப்பாளர்
   வைத்திய தொழில்நுட்பவியல் மற்றும் வழங்கல்கள்
   பிரிவு
   இல. 120, நொரிஸ் கெனல் வீதி
   கொழும்பு 10

3. திருமதி கே.ஆர்.வை.ஹப்புஆரச்சி
   பிரதி சட்டவரையுநர்
   சட்டவரையுநர் திணைக்களம்
   கொழும்பு 12

4. திருமதி சகுந்தலா தென்னகோன்
   அரசாங்கப் பகுப்பாய்வாளர்
   அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
   இல. 31, இசுரு மாவத்தை
   பெலவத்த
   பத்தரமுல்ல

5. திரு. கே.சியம்பலாபிட்டிய
   உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்
   பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள்
   ஒழிப்புப் பணியகம்
   03 ஆவது மாடி, புதிய
   செயலகக் கட்டிடம்
   கொழும்பு 03

6. திருமதி பியுமன்தி பீரிஸ்
   நீதி அமைச்சு
   மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி
   கொழும்பு 12

7. வைத்தியர் (திருமதி) தேவிகா மெண்டிஸ்
   பிரதிப் பணிப்பாளர்
   வைத்திய வழங்கல்கள் பிரிவு
   இல. 357, வண. பத்தேகம விமலவங்ச
   தேரோ மாவத்தை,
   கொழும்பு 10

8. திரு. பி.சி. சில்வா
உதவி மதுவரி ஆணையாளர்
மதுவரித் திணைக்களம்
கனுபெலெல்ல
பதுளை

9. திரு. என்.ஏ.ஏ.எஸ். நெத்தசிங்க
சிரே'ட உதவிப் பணிப்பாளர்
வைத்திய வழங்கல்கள் பிரிவு
இல. 357, வண. பத்தேகம விமலவங்ச
தேரோ மாவத்தை,
கொழும்பு 10

10. வைத்தியர் சிசிர காமினீ
ஆயுர்வேத திணைக்களம்
நாவின்ன
மகரகம

11. திரு. யூ.பி.கே. விதானகே
பிரதிப் பணிப்பாளர்
இலங்கை கரையோர பாதுகாப்பு அதிகாரசபை
உடுபில, மிரிஸ்ஸ
மாத்தறை

12. திருமதி ரியாஸ் அஹமட்
பிரதான சட்ட உத்தியோகத்தர்
சுகாதார அமைச்சு
"சுவசிறிபாய"
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச
தேரோ மாவத்தை
கொழும்பு 10

13. திரு. எம்.எஸ்.பி. பியதாச
சுங்க அத்தியட்சகர்
இலங்கைச் சுங்கம்
இல. 40, பிரதான வீதி
கொழும்பு 11

14. திரு. அநுர விக்ரமநாயக்க
பிரதி சுங்க அத்தியட்சகர்
இலங்கைச் சுங்கம்
இல. 40, பிரதான வீதி
கொழும்பு 11

***பின்னிணைப்பு - IV***

## கணக்கீட்டுக் குறிப்புகள்

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்**
**2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | | |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய வருமான மிகை/பற்றாக்குறை | | (14,110,836) |
| **சீராக்கல்கள்:** | | |
| தேய்மானங்கள் | 14,508,323 | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 1,064,108 | |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் பெற்ற இலாபம் | | |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 1,000 | 15,573,430 |
| தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு - முந்திய செயற்பாட்டு இலாபம் | | 1,462,595 |
| **தொழிற்படு மூலதன மாற்றல்கள்:** | | |
| கையிருப்புகள் | (1,100,987) | |
| கடன்படுநர்கள்: விற்பனவுகளும் ஏனைய பெறுவனவுகளும் | (746,166) | |
| முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை | - | |
| முற்கொடுப்பனவுகள் | (479,485) | |
| பகுதிக் கொடுப்பனவுகள் | (708,001) | |
| முற்பணங்கள் | (33,660) | |
| வைப்புக்கள் | - | |
| கடன்கொடுநர்கள்: கொள்வனவுகளும் ஏனைய கொடுப்பனவுகளும் | (3,500) | |
| அட்டுறு செலவினம் | (105,799) | |
| தடுத்துவைத்த தொகை | - | |
| | | (3,177,598) |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | | (612,178) |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான - தேறிய காசுப் பாய்ச்சல்** | | (2,327,181) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான- காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்ளல் | (16,969,006) | |
| நிலையான சொத்துக்கள் விற்பனைமூலம் பெற்ற காசு | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான- காசுப் பாய்ச்சல்** | | |
| **நிதிச் செயற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல்** | | **(16,969,006)** |

| | | |
|---|---|---|
| ஆண்டினுள் பெற்ற தேறிய காசு | 17,233,000 | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான - தேறிய காசுப் பாய்ச்சல்** | | **17,233,000** |
| **காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றினதும் தேறிய மாற்றல்கள்** | | **(2,063,187)** |
| **ஆண்டு ஆரம்பத்தில் காசு நிலுவை (குறிப்பு A)** | | **8,408,554** |
| **ஆண்டு இறுதியில் காசு நிலுவை (குறிப்பு B)** | | **6,345,367** |

**குறிப்பு A**

ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரானவையும்

| | |
|---|---|
| முத்திரைக் கட்டுநிதி | 21,804 |
| இலங்கை வங்கி (தாபனக் கிளை) கணக்கிலக்கம் 1643 | 2,401,695 |
| இலங்கை வங்கி (ராஜகிரிய) கணக்கிலக்கம் 0003270702 | 103,377 |
| UNDCP 1995 கருத்திட்டக் கணக்கு | 3,210,889 |
| WHO Regular Budjet கருத்திட்டக் கணக்கு | 1,462,142 |
| NDDCB RAS H71 கருத்திட்டக் கணக்கு | 913,850 |
| UNICEF கருத்திட்டக் கணக்கு | 282,302 |
| NDDCB சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக் கணக்கு | 12,495 |
| | **8,408,554** |

**குறிப்பு B**

ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு நிகரானவையும்

| | |
|---|---|
| முத்திரைக் கட்டுநிதி | 9,700 |
| இலங்கை வங்கி (தாபனக் கிளை) கணக்கிலக்கம் 1643 | 736,436 |
| இலங்கை வங்கி - ராஜகிரிய கணக்கிலக்கம்- 0003270702 | 26,637 |
| UNDCP 1995 கருத்திட்டக் கணக்கு | 3,016,256 |
| WHO Regular Budjet கருத்திட்டக் கணக்கு | 1,397,542 |
| NDDCB RAS H71 கருத்திட்டக் கணக்கு | 1,019,750 |
| UNICEF கருத்திட்டக் கணக்கு | 91,551 |
| NDDCB சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக் கணக்கு | 47,495 |
| | **6,345,367** |

**குறிப்பு 10**

**நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு**

| கிரயம்/ பெறுமானம் | காணிகள் (ரூ) | காணிகளும் கட்டிடங்களும் (ரூ) | அலுவலக உபகரணங்கள் (ரூ) | தளபாடங்கள் (ரூ) | பொருத்துதல்கள் (ரூ) | மோட்டார் வாகனங்கள் (ரூ) | முழு மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 2,971,405 | 88,487,711 | 79,085,373 | 12,956,995 | 6,382,649 | 36,430,462 | 226,314,595 |
| சேர்மானங்கள் | | 246,115 | 1,070,276 | 635,693 | 5,478,325 | 7,652,000 | - 15,082,408 |
| கையுதிர்ப்புகள் | | | | | | | - |
| 201512.31 அன்றுள்ளவாறான நிலுவை | 2,971,405 | 88,733,826 | 80,155,649 | 13,592,688 | 11,860,974 | 44,082,462 | 241,397,003 |
| | | | | | | | |
| **பெறுமானத் தேய்வு:** | | | | | | | |
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | | 70,082,813 | 63,849,486 | 6,869,378 | 4,996,098 | 7,748,793 | 153,546,569 |
| 2015 க்கான பெறுமானத்தேய்வு | | 936,035 | 6,169,788 | 838,748 | 713,598 | 3,799,111 | 12,457,280 |
| மீள் மதிப்பீடும் கையுதிர்ப்பும் | | | | | | | |
| 2015.12.31 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | | 71,018,848 | 70,019,275 | 7,708,126 | 5,709,696 | 11,547,904 | 166,003,849 |
| 201512.31 அன்றுள்ளவாறான எழுதப்பட்ட பெறுமதி | 2,971,405 | 17,714,978 | 10,136,374 | 5,884,561 | 6,151,278 | 32,534,558 | 75,393,155 |

| கிரயம்/ பெறுமானம் | நூலக நூல்கள் (ரூ) | சமையலறை உபகரணங்கள் (ரூ) | தோட்ட உபகரணங்கள் (ரூ) | NNL ஆய்வுகூட உபகரணங்கள் (ரூ) | ஏனைய பொறிகளும் உபகரணங்களும் (ரூ) | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 825,560 | 408,991 | 85,565 | 4,414,116 | 5,040,972 | 10,775,204 |
| சேர்மானங்கள் | - 10,309 | | | 1,896,907 | | 1,886,598 |
| கையுதிர்ப்புகள் | | | | | | - |
| 201512.31 அன்றுள்ளவாறான நிலுவை | 815,251 | 408,991 | 85,565 | 6,311,023 | 5,040,972 | 12,661,801 |
| | | | | | | |
| பெறுமானத் தேய்வு | | | | | | |
| 2015.01.01 அன்றுள்ளவாறான நிலுவை | 729,337 | 129,314 | 15,844 | 648,979 | 853,256 | 2,376,731 |
| 2015 க்கான பெறுமானத் தேய்வு | 23,201 | 81,798 | 14,113 | 923,736 | 1,008,194 | 2,051,043 |
| கையுதிர்ப்புகள் | | | | | | |
| 2015.12.31 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | 752,538 | 211,112 | 29,957 | 1,572,716 | 1,861,451 | 4,427,774 |
| 201512.31 அன்றுள்ளவாறான எழுதப்பட்ட பெறுமதி | 62,713 | 197,879 | 55,608 | 4,738,307 | 3,179,521 | 8,234,027 |

| | |
|---|---|
| **2015 ஆம் ஆண்டுக்கான மொத்த தேறிய சொத்துக்கள்** | **83,627,182** |
| **பெறுமானத் தேய்வு** | **14,508,323** |